| 11. | Smt Jaya Narayanan Phone : 2332980 | Plot.68, Venkatesa Perumal IInd Street, Madipakkam, Chennai - 600 091. | Monday 11.30 AM | |
| 12. | Smt. Kalpana Srinivasan Phone : 2377273 | No. 15, Sudharsan Nagar, Madampakkam, Seliyur, Chennai - 600 073. | Monday 11.30 AM | 2376907 |
| 13. | Smt. Kalpana Srinivasan Phone : 2377273 | Vengaivasal Pillaiyar Kovil, Velachery Road, Chennai - 42. | Wednesday 11.30 AM | 2378205 |

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 14. | Smt. Kalpana Srinivasan<br>Phone : 2377273 | 18, Karpaga Vinayagar Koil St.,<br>East Tambaram, Chennai - 73. | Thursday<br>11.30 AM | 2838297 |
| 15. | Smt. Kalpana Srinivasan<br>Phone : 2377273 | 15, Sudharasan Nagar<br>Madampakkam, Selaiyur Road,<br>Tambaram, Chennai - 600 073. | Friday<br>11.30 AM | 2376907 |
| 16. | Smt. Kanthimathi<br>Krithivasan<br>Phone : 4901333 | 13, 5th Cross Street,<br>Karpagam Gardens, Adyar<br>Chennai - 600 020. | Saturday<br>4 PM | 4901333 |
| 17. | Smt. Lalitha Seetharaman<br>Phone : 2348044 | Sarva Mangala, 15, C-23 Hindu<br>Colony, Ist Cross Street,<br>Nanganallur, Chennai. | Monday<br>11.00 AM | 2348044 |
| 18. | Smt. Mangalam Mani<br>Phone : 8266228 | 6/1, "Sarayu", 4th Cross Road,<br>Raja Annamalaiapuram,<br>Chennai - 600 028. | Tuesday<br>11.30 AM | 4951148 |
| 19. | Smt. Mangalam Mani<br>Phone : 8266228 | Flat OB-60, 7th Avenue,<br>"Green IN Apartment"<br>Besant Nagar, Chennai-600090. | Wednesday<br>11.30 AM | 4918225 |
| 20. | Smt. Mangalam Mani<br>Phone : 8266228 | 11, Radhakrishnan Nagar<br>Thiruvanmiyur, Chennai -41 | Saturday<br>11.30 AM | 4917953 |
| 21. | Smt. Meena Venkataraman<br>Phone : 4912577 | Mangayarkarasi Magalir<br>Mandram, 3, 11th Cross Street,<br>Sastri Nagar, Chennai-600 020. | Wednesday<br>11.30 AM | 4913937 |
| 22. | Smt. Meena Venkataraman<br>Phone : 4912577 | 4/418, Raja Street,<br>Lakshmanaperumal Nagar<br>Kottivakkam, Chennai - 41. | Thursday<br>11.00 AM | 4915686 |
| 23. | Smt. Meena Venkataraman<br>Phone : 4912577<br>(For Children) | 13, 14th Cross Street<br>Sastri Nagar, Chennai - 600020. | Saturday<br>11.30 AM | 4912577 |
| 24. | Smt. G. Patammal<br>Phone : 4815223 | 92/3, Lakhsmana Swami Salai,<br>K.K. Nagar, Chennai - 600 078. | Monday<br>1 PM | 4839925 |
| 25. | Smt. G. Pattammal<br>Phone : 4815223 | 73, Gandhi Road, Alwar Thiru<br>Nagar, Chenai - 600 087. | Wednesday<br>2 P.M. | 4860167 |
| 26. | Smt. G. Pattammal<br>Phone : 4815223 | 4, A.V.M. Avenue,<br>Nagar, Chenai - 600 087. | Thursday<br>1.30 PM. | 4838756 |
| 27. | Smt. K. Rukmani | 25, Chokkalinga Nagar<br>Chennai - 600 092. | Tuesday<br>1.30 PM. | 454660 |
| 28. | Smt. K. Rukmani | 3, Kamala Bai Street, T. Nagar,<br>Chennai - 600 017. | Wednesday<br>11 AM | 8282167 |

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 29. | Smt. K. Rukmani | 19, Jayashankar Street<br>Chennai - 600 033. | Wednesday<br>1 PM | |
| 30. | Smt. K. Rukmani | 7, Jambulingam Street,<br>Nungambakkam, Chennai - 34. | Saturday<br>11.30 AM | |
| 31. | Smt. K. Rukmani | 4th South Loop Street,<br>West C.I.T. Nagar, Nandanam<br>Chennai - 600 035. | Saturday<br>3 PM | 4330352 |
| 32. | Smt K. Rukmani<br>Subramaniam | 12, Yogambal Street, T.Nagar,<br>Chennai - 600 017. | Tuesday<br>10.30 AM | 8280182 |
| 33. | Smt. Sakuntala<br>Gopalaswamy<br>Phone : 8273441 | 46, Kambar Nagar, II Stage<br>Chennai - 600 034 | Thursday<br>11 AM | 8270603 |
| 34. | Smt. Sakuntala<br>Gopalaswamy<br>Phone : 8273441 | 34, Unnamulai Amman Street,<br>Chennai - 600 017. | Saturday<br>11 AM | 8254422 |
| 35. | Smt. Sakuntala<br>Gopalaswamy<br>Phone : 2452284 | 29/4, 12th Avenue,<br>Ashok Nagar, Chennai -83. | Saturday<br>11 AM | 4895297 |
| 36. | Smt. Sakuntala<br>Gopalaswamy<br>Phone : 2452284 | B-7, "Prakriti" Alacrity Flats<br>100 Feet Road, Vijaya Nagar,<br>Velachery, Chennai - 600 042. | Sunday<br>11 AM | 2450966 |
| 37. | Smt. S. Saraswathi<br>Phone : 4418425 | 2C, II Street,<br>Bhaktavatsalam Nagar<br>Chennai - 600 020. | Monday<br>11.30 AM | 4423280 |
| 38. | Smt S. Saraswathi<br>Phone : 4418425 | Ratnagiriswarar Temple<br>Besant Nagar, Chennai - 20. | Tuesday<br>10.30 A.M | |
| 39. | Smt. S. Saraswathi<br>Phone : 4418425 | 4, A/S10,Mahavir Apartment<br>East Coast Road,<br>Thiruvanmiyur, Chennai - 41. | Wednesday<br>11.30 AM | 4410333 |
| 40. | Smt Subbalakshmi<br>Subramanian<br>Phone : 4917084 | B/18, Bay View Apartments<br>Parvati Street, Kalashetra<br>Colony, Chennai - 600 090. | Wednesday<br>10.30 AM | 4917084 |
| 41. | Smt. Seetha Lakshmi<br>Narayanan<br>Phone : 8272991*<br>* Contact No. | Venugaopal Swamy Temple<br>Gopalapuram, | Wednesday<br>10.30. AM | |

## COIMBATORE

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Smt. Lakshmi Venkateswaran Phone : 847290 | U9, Kovai Pudur, Coimbatore - 641 042. | Monday 3 PM | 807290 |
| 2. | Smt. Lakshmi Venkateswaran Phone : 847290 | 71, SRP Nagar, Alagesan Road, Coimbatore - 641 011. | Tuesday 2 PM | 806068 |
| 3. | Smt. Lalitha Nagarajan Phone : 423055 | "Sruthui" Curio Garden, Navavurpirivu, Coimbatore - 641 046. | Saturday 4.30 PM | |
| 4. | Sri. N.V. Vaidyanathan Phone : 807704 | U-28D, Kovai Pudur Coimbator - 641 042. | Sunday | 807704 |

## KALAKKAD

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Smt. Gomathi Venkatachalam | 42, Krishnan Koil Street, Kalakkad - 627 561. | | |

## KALPAKKAM

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Sri. Kartikeyan .S.V. Phone : 41615 | Mahisasuramardini Temple Kalpakkam. | Wednesday 7 AM | |

# KARNATAKA REGION

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Sri. R. Nagesh<br>Phone : 3389383 | Hymamshu School,<br>4th Main Raod, Malleswaram,<br>Bangalore - 560 055. | Sunday<br>11 AM | |
| 2. | Sri R. Nagesh<br>Phone : 3389383 | 10, 8th Cross, Prasantha Nagar<br>Bangalore - 560 079. | Wednesday<br>7 PM | 3356591 |
| 3. | Sri. V. Venkatraman<br>Phone : 5450494 | Raja Ganapathi Temple, Jaya<br>Bharathi Nagar, Bangalore-560 033. | Sunday<br>6 PM | |
| 4. | Sri. V. Venkatraman<br>Phone : 5450494 | 44, 3rd Cross, Ramamurthy<br>Nagar, Bangalore - 560 016. | Saturday<br>6.30 PM | |
| 5. | Sri. S. Raghavan<br>Phone : 3349784 | Pravachana Mandir,<br>B.E.L Colony, Ganesh Temple<br>Bangalore - 560 031. | Tuesday<br>6 PM | |
| 6. | Sri. S. Raghavan<br>Phone : 3349784 | 14A, CTL Colony, Sanjay<br>Nagar, Bangalore - 560 094. | Wednesday<br>5 PM | 331745 |
| 7. | Sri. R. Venkatraman<br>Phone : 3485327 | 175, 9th Cross I Stage, Indira<br>Nagar, Bangalore - 560 038. | Sunday<br>2 PM | 5250765 |
| 8. | Sri. R. Venkatraman<br>Phone : 3485327 | 3, Kalyana Subramanya Swamy<br>Devasthanam 15th Cross<br>Malleswaram, Bangalore-38. | Tuesday<br>10 AM | |
| 9. | Sri. R. Venkatraman<br>Phone : 3485327 | 328, 15th Cross,<br>6th Main V.V. Mohalla,<br>Mysore - 570 002. | Day follow ing Sukla Shasti<br>11AM | |
| 10. | Sri. R. Venkatraman<br>Phone : 3485327 | Sree Lakshi Temple 1st Main<br>Road, Basaveswar Nagar,<br>Bangalore - 560 079. | Monday<br>11 AM | |
| 11. | Sri. R. Venkatraman<br>Phone : 3485327 | Sree Lakshi Temple 1st Main<br>Road, Basaveswar Nagar,<br>Bangalore - 560 079. | Saturday<br>11 AM | |
| 12. | Sri T.S. Narayanan<br>Phone : 3332922 | 148, 1st Main Road, AG's Colony,<br>Ananda Nagar, Bangalore-560 024. | Thursday<br>3 PM | 3332922 |
| 13. | Smt. Subha Lakshmi Subramaniam<br>Phone : 3482917 | 115, NHCS Layout<br>West of Chord Road, Basavewar<br>Nagar, Bangalore - 560 0079. | Tuesday<br>2 PM | 3481854 |
| 14. | Smt. Leela Narayanaswamy<br>Phone : 3345812 | 201, Kalpatharu Apartment,<br>8th Main Road, 13th Cross<br>Malleswaram, Bangalore - 560 003. | Tuesday<br>11 AM & 2PM | 3345812 |

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 15. | Smt. Leela Narayanaswamy<br>Phone : 3345812<br>(for Children) | 201, Kalpatharu Apartment, 8th Main Road, 13th Cross Malleswaram, Bangalore - 560 003. | Thursday<br>6 PM | 3345812 |
| 16. | Smt. Pattu Ramamurthy<br>Phone : 3329839 | 3411, th Cross Gayatri Nagar Bangalofe - 560 021. | Saturday<br>1 PM | |
| 17. | Smt. Pattu Ramamurthy<br>Phone : 3329830 | 180, 6th Main Road, 5th Cross Mico Layout, Bangalore - 560 076. | Wednesday<br>1 PM | |
| 18. | Smt. Pattu Ramamurthy<br>Phone : 3329830 | 4, Vinayaka Layout Basaveswar Nagar Bangalore - 560 079. | Monday<br>11 AM | |
| 19. | Sri. T.A. Vyasa Rao<br>Phone : 646629 | Abiramai, 2022, South End F-Road, Jaya Nagar 9th Block Bangalore - 560 069. | Saturday<br>3 PM | 6651873 |
| 20. | Sri. T.A. Vyasa Rao<br>Phone : 646629 | Flat No.C-404, Garadi Apartment, K.R. Road, Basavangudi, Bangalore - 560 004. | Wednesday<br>11 AM | |
| 21. | Sri. K.S. Subba Raman<br>Phone : 8383224 | 3, Vidya Ganapthi Temple Vidyaranyapura, Bangalore - 560 097. | Sunday<br>6 PM | |
| 22. | Smt. Lakshmi Venkatraman<br>Phone : 3324567 | 1643/1, 9th Main Road, 2nd Stage, A-Block, Rajaji Nagar, Bangalore - 560 010. | Wednesday<br>11.30 AM | 3324567 |
| 23. | Smt. Lakshmi Venkatraman<br>Phone : 3324567 | 700/43, 6 1st Cross Street, 5th Block, Rajaji Nagar Bangalore - 560 010. | Saturday<br>11.30 AM | 3359690 |
| 24. | Smt. Ponnu Viswanathan<br>Phone : 3320414 | 2368/25, 12th Main Road, A-Block, Rajaji Nagar, 2nd Stage Bangalore - 560 013. | Wednesday<br>4 PM | 3320414 |
| 25. | Smt. Suseela Raghavan<br>Phone : 3349784 | O.S. 13, 1st Cross, Sundar Nagar, Bangalore - 560 013. | Saturday<br>4 PM | 3451511 |

## MUMBAI REGION

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Sri. G. Bala Subramanian<br>Phone : 5565739 | 3, 'Emarad', Chedda Nagar,<br>Chembur, Mumbai - 4000 089. | Monday<br>7 PM | |
| 2. | Sri. G. Bala Subramanian<br>Phone : 5565739 | 3, Vanamali', Chedda Nagar,<br>Chembur, Mumbai - 400 089. | Friday<br>7 PM | |
| 3. | Sri. G. Bala Subramanian<br>Phone : 5565739 | M. Sundaram, B-02, 'Ajanta',<br>Anusakthi Nagar, Mumbai-400 089. | Saturday<br>6 PM | |
| 4. | Smt. Rajalakshmi<br>Balasubramaniam<br>Phone : 5565739 | 9, Narayan Bhavan, Bhandarkar<br>Road, Matunga - 400 071 | Monday<br>1.30 PM | 4160420 |
| 5. | Smt. Rajalakshmi<br>Balasubramaniam<br>Phone : 5565739 | 5, 'Bhairavi', Uttamsociety<br>St. Anthony's Road,<br>Chembut - 400 071. | Wednesday<br>1.30 PM | 5565739 |
| 6. | Smt. Rajalakshmi<br>Balasubramaniam<br>Phone : 5565739 | 5, 'Bhairavi', Uttamsociety<br>St. Anthony's Road,<br>Chembut - 400 071. | Thursday<br>1.30 PM | 5565739 |
| 7. | Smt. Kalyani Raghavan<br>Phone : 5283548 | 14, 'Kala Nilayam', Chedda Nagar,<br>Mumbai - 400 089. | Tuesday<br>2.30 PM | 5283548 |
| 8. | Smt. Kalyani Raghavan<br>Phone : 5283548 | 14, 'Kala Nilayam', Chedda Nagar,<br>Mumbai - 400 089. | Thursday<br>2.30 PM | 5283548 |
| 9. | Smt. Raji Parameswaran<br>Phone : 5561352 | Flat No. 3, Ground Floor,<br>14, Yamuna Shree Nagar Society,<br>Mumbai - 400 089. | Saturday<br>2 PM | 5285354 |
| 10. | Sri. A.S. Mani<br>Phone : 4160420 | 8/258, 'Patanwala Manision'<br>SION (East), Mumbai - 400 022. | Sunday<br>2.45 PM | 4023986 |
| 11. | Sri. A.S. Mani<br>Phone : 4160420 | 4/162, 'Sundaram' Garodia Nagar,<br>Mumbai - 400 077. | Sunday<br>2.45 PM | |
| 12. | Sri. K.R. Krishan Murthy<br>Phone : 7663869 | 104, 'Puneet Park', Sector 16,<br>Nerul, New Mumbai - 400 703. | Tuesday<br>5 PM | 7701152 |
| 13. | Sri. N.V. Ramaswamy<br>Phone : 7821398 | L. 29, RH-1, Sector 7, Vashi,<br>New Mumbai - 400 703. | Sunday<br>6.30 PM | 7821398 |
| 14. | Sri. Govindarajan<br>Phone : 7661111 | JN-2/18/A-2, Sector 9, Vashi- New<br>Mumbai - 400 703. | Monday<br>7 PM | 7661111 |

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 15. | Sri. Govindarajan<br>Phone : 7661111 | Gr. Floor, 'Usha Apartments'<br>Navghar Cross Road,<br>Mulund (East).- 400 080. | Saturday<br>1.30 PM | 5680310 |
| 16. | Sri Govindarajan<br>Phone : 7661111 | 2nd Floor, Sangeetha, R.P Road,<br>Mulund (West) Mumbai - 400 080. | Thursday<br>(Alternate)<br>2 PM | 5671548 |
| 17. | Sri. Govindarajan<br>Phone : 7661111 | 8, 'PARIJAT' Ghoshala Road,<br>Mulund, West Mumbai - 400 080. | Thursday<br>(Alternate)<br>2 PM | 5673101 |
| 18. | Sri. Govindarajan<br>Phone : 7661111 | Sriram Nagar, S.V. Road, Andheri<br>(West) Mumbai - 400 058. | Saturday<br>2 PM | 6210948 |
| 19. | Smt. Mahalakshmi<br>Ramachandran,<br>Ph. No. 5652654 | C-1, Jyodhi Building, Hill View<br>Co-op Society, Rajendra Prasad Rd.,<br>Mulund, West, Mumbai - 400 080. | Wednesday<br>4 PM | 5652654 |
| 20. | Smt. Mahalakshmi<br>Phone : 5652654 | 23, 3rd Floor, Indian Bank House,<br>Dr. Rajendra Prasad Road, Mulund<br>West, Mumbai - 400 080. | Wednesday<br>4 PM | 5615413 |
| 21. | Sri. S. Balachandar<br>Phone : 5346882 | C-3/306, 'SITAR'<br>B Wing Lok Puram, Thane,<br>Mumbai - 400 601. | Sturday<br>4PM | 5332513 |
| 22. | Smt. Bhanu Lakshmanan<br>Thakurli (Ladies) | Balalayam, Subramanyaswamy<br>Temple, Dombivili (East) | Monday<br>3.30 PM | |
| 23. | Smt. Bhanu Lakshmanan<br>Thakurli (Ladies) | Lakshmanan, 9 Tulsi Apartments,<br>Tulsi Co-op Society, Thakurli. | Saturday<br>4 PM | |
| 24. | Smt. Jayanthi Suresh,<br>Jalgon - 425 002. | 3, "ADITI" Girnar T.K. Road,<br>Jalgaon - 425 002. | Sunday | 28736 |

# CALCUTTA

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Smt. Subbalaxmi Mani | Shankara Hall<br>93, Southern Avenue<br>Calcutta - 700 029. | Thursday<br>1 PM | 4661767 |
| 2. | Smt. Gowri Natarajan | P-357, Keyatala Lane<br>Calcutta - 700 029. | Tuesday &<br>Friday<br>1 PM | 4646190 |
| 3. | Smt. Brinda Gopalakrishnan | 9A, Pankagini Chatterjee Road,<br>Flat No. 2D, Subam Apartment<br>Calcutta - 700 033. | Monday<br>1 PM | 4179136 |
| 4. | Smt. Santha Sundarrajan<br>Phone : 4641269 | Plot No. 471, Lake Terrace Extn.<br>Calcutta - 700 029. | Monday<br>1 PM | 4641269 |

# HYDERABAD

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Smt. Savithri Venkatraman Ph: 7056167 | 2-223, Vani Nagar IV Street,<br>Malkajgiri, Hyderbad - 500 047. | Tuesday<br>4 PM | 7056167 |
| 2. | Smt. Savithri Venkatraman Ph: 7056167 | 2-223, Vani Nagar IV Street,<br>Malkajgiri, Hyderbad - 500 047. | Thursday<br>4 PM | 7056167 |
| 3. | Smt. Lalitha Srinivasan<br>Phone : 7605637 | 1069, Somasundaram Nagar,<br>Central Excise Colony,<br>Hyderabad - 500 047. | Tuesday &<br>Saturday<br>3 PM | |
| 4. | Smt. Jaya Thyagarajan<br>Phone : 7732089 | East Marred Pally | Wednesday<br>& Saturday<br>3.30 PM | 7739363 |
| 5. | Smt. Lakshmi Radhakrishnan<br>Phone : 7051347 | 10-310, Vasantpuri Colony,<br>Malkajgivi,<br>Secundrabad - 500 004. | Monday &<br>Wednesday<br>4 PM | 7051347 |

# BARODA

| S. No. | PERSONS CONDUCTING THE CLASSES & TELEPHONE NOS | VENUE | DAY & TIME | PHONE |
|---|---|---|---|---|
| 1. | Smt. Sudha Viswanathan<br>Phone : 382765 | A-5, Kamala Park Apartment<br>Ellora Park, Race Course Post<br>Baroda - 390 007. | Tuesday<br>11 AM | 382765 |

## Persons to be contacted for details of Classes and Bhajans outside India

| S. No. | CENTRE | NAME & ADDRESS | PHONE |
|---|---|---|---|
| 1. | AURORA (IL) USA | Mrs. Poorna Sethuraman<br>2218 Cheshire Drive, Aurora (IL) - 60504 | (630)-5850872 |
| 2. | NAPERVILLE USA | Mrs. Radha Sivakumar<br>1577, Raymond Drive, # Apt. No.101, Naperville.2, 60663 U.S.A. | 630-357-6712 |
| 3. | BETHEL (CT) USA | Mrs. Malini Ramakrishnan<br>29, Oakridge Road, Bethel (CT) - 06801. | 203-798-8925 |
| 4. | ONTARIO CANADA | Mrs. Tarakrishnan<br>2455, Islington Avenue, Rexdale, Ontario Canada M9W3X9. | 416-743-6390 |
| 5. | MANAMA BAHREIN | Smt. Mythili | Classs on Wednesday 11.00 AM |

# அமுதத் துளிகள்


| | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. முருகப்பசாரி | - | அமரர் தணிகை மணி வ.சு. செங்கல்வராய பிள்ளை | 38 |
| 2. பஞ்சாமிருத ரஸம் | - | திருப்புகழ் மணி டி.எம். கிருஷ்ணசுவாமி ஐயர் | 39 |
| 3. வேலுண்டு வினையில்லை | - | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் | 41 |
| 4. பெருந்திருடன் | - | திருப்புகழ் சதுரர் சே.த. இராமலிங்கம் பிள்ளை | 43 |
| 5. தகப்பன்ஸ்வாமி | - | தவத்திரு சாதுராம் சுவாமிகள் | 45 |
| 6. மயில் வகுப்பு | - | ஸு. வே. சுப்பிரமணயம் | 51 |
| 7. கந்தனே கனியமுதம் தானே? | - | ரா. கணபதி | 55 |
| 8. மான்மகளாம் தெய்வயானை | - | புலவர் மா. கி. ரமணன் | 58 |
| 9. ஒருத்தன் அருளிய பெருத்த வசனம் | - | திருப்புகழ் அடிமை எஸ். நடராஜன் | 62 |
| 10. சுந்தரமந்திரம் | - | பி.ஆர். குமார் இயக்குநர் சென்னை வானொலி நிலையம் | 66 |
| 11. திருப்புகழ்காட்டும் சமூக நீதியும் சமுதாய ஒற்றுமையும் | - | நீதிபதி திரு. சேதுமுருக பூபதி | 70 |
| 12. திருப்புகழில் பிள்ளைத்தமிழ் | - | திருமதி. மு. சுப்புலட்சுமி | 71 |
| 13. திருப்புகழில் நரசிம்மாவதாரம் | - | புலவர் சஞ்சீவி | 75 |
| 14. அருணகிரிநாதர் காலத்துப் பழக்கவழக்கங்கள் | - | திருமதி. லக்ஷ்மி ரமணன் | 78 |
| 15. வேல் மகிமை | - | திருமதி. லட்சுமி ராஜரத்தினம் | 80 |
| 16. அருணகிரியாரில் திருவள்ளுவர் | - | மதுரகவி. க. கி. இராமசுவாமி ஐயர் (சிரவை ஆதினப் புலவர்) | 85 |
| 17. திருப்புகழில் பார்வதி | - | டாக்டர். சாரதாரமணி | 90 |

| | | | பக்க எண் |
|---|---|---|---|
| 18. | தினசரி வாழ்வுக்குத் திருப்புகழ் | - திருமதி பத்மினி பட்டாபிராமன் | 92 |
| 19. | அருணகிரிநாதரின் இறையணுகுமுறைகள் | - எஸ். ஆர். சுப்பிரமணியம் | 96 |
| 20. | திருப்புகழில் சீர்பாதமகிமை | - சித்ராமூர்த்தி | 101 |
| 21. | வள்ளித் திருமணம் | - திருமதி உமாபாலசுப்பிரமணியம் | 103 |
| 22. | ஞானகுரு - தமிழ்க்கடவுள் முருகன் | - இ.என். மூர்த்தி | 107 |
| 23. | திருப்புகழில் திருஞானசம்பந்தர் | - டி.எல். சுப்பிரமணியம் | 109 |
| 24. | அவிரோத ஞானச்சுடர் | - சசிகலா ராமநாதன் | 112 |
| 25. | திவ்ய தரிசனங்கள் | - சாந்தா ராஜன் சுந்தர்ராஜன் | 115 |
| 26. | அருணகிரியாரும் சைவ சமய குரவர்களும் | - திருமதி. நாகலட்சுமி கோபாலன் | 119 |
| 27. | Sadguru Sri. Arumugirinath amd Sri Thyagaraja | - ஜி. பாலசுப்பிரமணியம் | 123 |
| 28. | The Music of Thirupugazh | - Prof. PARTHASARATHY | 131 |
| 29. | Our Guruji | - S. K. R. | 139 |

# முருகப்பாசாரி

- அமரர் தணிகை மணி வ.சு. செங்கல்வராய பிள்ளை

முருகப்பாசாரியார் ? அருணகிரிநாதரின் திருவாக்கின்படி நம்மை ஆட்கொண்டருளும் முருகவேள்தான் முருகப்பாசாரி. ஆசாரிகளுள் அவரவர் தொழிலின் படி தட்டார ஆசாரி கன்னார ஆசாரி, தச்ச ஆசாரி என சில வகைப்படுவர். இவர் தம்முள் முருகவேள் ஒரு தச்ச ஆசாரியாம். தச்சு வேலை செய்யும் ஆசாரிக்கு மரத்தில் எவ்வித வேலை செய்யும் திறமையும் வேண்டும். சித்திர வேலைகள், பதுமைகள் முதலிய பல திறத்த வேலைப்பாடுகளில் வல்லவனாய் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, இன்ன மரம் இன்ன வேலைக்கு நன்கு உதவும், இன்ன மரத்தில் செல் ஏறாது; இன்ன மரம் எக்காலத்திலும் நீரிற் கிடந்தாலும் வேறு எக்காரணத்தாலும் மக்கிப் போகாது என்றெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். நமது முருகப்பாசாரியின் திறமையை அருணகிரிநாதர் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார் பார்ப்போம்; தச்சு வேலைக்கு உரிய உளி, வாள், சிற்றுளி முதலிய எல்லா ஆயுதங்களின் வேலைகளையும் அவர் வேல் ஒன்றே செய்ய வல்லதாம். அவர் வேலைக்கு என்று எடுத்துக் கொண்ட மரம், எக்காலத்திலும் மக்கிப் போகாத (அழியாத) 'சூர்' என்கிற கப்புங்கிளையும் நிறைந்த மாமரம். இந்த மாமரத்தை வேல் கொண்டு பிளந்தார், அரிந்தார்,அரிந்த பிளவுகளினின்றும் இரண்டு உருவங்கள் செய்தார்; ஒன்று மயில், ஒன்று சேவல். இம் மயிலும் சேவலும் வெறும் மரப் பொம்மைகள் அல்ல. அவைகளை ஆக்கிய ஆசாரியும் வெறும் தச்சு ஆசாரி அல்ல. அந்த ஆசாரி ஒரு சித்தருமாவார்; ஆதலால் அவர் ஆக்கிய மயிலும் சேவலும் உயிர் உள்ளனவாய்ச் சித்தி பெற்றவைகளாய் இன்றும் விளங்குகின்றன என்றெல்லாம் அருணகிரிநாதர் கீழ்க்காட்டிய திருப்புகழ் அடியில் விளக்கியுள்ளார் !

**"எக்காலும் மக்காத சூர்க் கொத்தரிந்த சினவேலா!**
**தச்சா! மயிற் சேவலாக்கிப் பிளந்த சித்தா!"**

பின்னும், இம் முருகப்பாசாரி எந்த ஆசாரியின் மகனார் என்பதை யும் அருணகிரியார் விளக்கியுள்ளார். வேத ஆசாரி ஆகிய பிரமனும், மாலும் கருதித் துதிக்கும் ஆகம ஆசாரியும், பொன்மலையை வில்லாக வளைத்து விண்ணில் நடம் புரியும் ஆசாரியும், யாவராலும் பூசிக்கப்படும் ஆசாரியும், பல திறத்த எல்லா வகை யான கூத்து நடனங்களை ஆட வல்ல ஆசாரியும், கயிலை மலையில் வாழ்பவருமான நடன ஆசாரியரே இந்த முருகப்பாசாரியின் தந்தையாம். இங்ஙனம் முருகப்பாசாரி ஒரு பெரிய இடத்துப் பிள்ளை யாகின்றராதலின், அவர் கருணை மேருவாம்; தேவர் பெருமானாம் என விசேடித்துத் தமது ஞானபோதக ஆசாரியாராம் முருகனைக் கீழ்க் காட்டியவாறு அருணகிரியார் துதித்து மகிழ்கின்றார். நாமும் அதைப் படித்து மகிழ்வோமாக:

**"வேத ஆசாரியனும் மாலும், கருதும் ஆகமாசாரி**
**கனக கார்முகாசாரி, ககன சாரி, பூசாரி, வெகு சாரி**
**கயிலை நாடகாசாரி சகலசாரி வாழ்வான**
**கருணைமேரு வேதேவர் பெருமானே"**

# பஞ்சாமிருத ரஸம்

- திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசுவாமிஐயர்

மயிலென்பது ஓங்காரம். அதிலேற இரண்டு படிகளுண்டு, முருகா ! குகாவென்று சொல்லிக்கொண்டு ஒரு படியிலேறலாம், மற்ற நாமங்களைச் சொல்லிக் கொண்டு இன்னொரு படியிலேறலாம். இரண்டு படிகளும் ஒரே இடத்தைச் சேர்கின்றன. "ஆன தனிமந்திர ரூப நிலை கொண்ட தாடு மயிலென்ப தறியேனே" என்றார் அருணகிரியார்.

தனி மந்திரமே ஓங்காரம். அக்ஷரங்களுக்குள் 'ஓம் நானாயிருக்கிறேன்' என்றான் கண்ணன். ஓம் என்ற பிரணவத்தில் அகரம் நானென்றான், அகரம் சேராமல் எந்த எழுத்தையும் உச்சரிக்க முடியாது.

ஓங்காரத்தில், அகர வொலிக்கும் மகர வொலிக்கும் நடுவில் உகர வொலி இருக்கிறது, அகர உகர மகரங்களினால் ஆனதுதான் ப்ரணவம். "அகார காரணத்திலே அனேகனேக ரூபமாய் – உகார காரணத்திலே உருத் தரித்து நின்றதே மகார காரணத்திலே மயங்கி நின்ற வையகம் – சிகார காரணத்திலே தெளிந்ததே சிவாயவே" என்றார் சித்தர்.

அகர ஒலியிலிருந்து பல எழுத்துக்களும் சொற்களும் தோன்றியது போல், அகரத்திலிருந்து பல ரூபங்களாகி உகரத்தில் கருத்தரித்து நிற்கிறானாம் மனிதன், மகரத்தில் தான் வேறு, ஆண்டவன் வேறு என்று மயங்குகிறான், சிகரத்தில் தெளிந்து தானே சிவமென்று அறிகிறான்.

பிரணவமாகிய ஓங்காரத்திலிருந்து ஐம்பத்தொரு அக்ஷரங்கள் ஏற்பட்டன. ஆனால் தலையிலெழுத்து இந்த ஐம்பத்தோரக்ஷரங்களால் எழுதப் பட்டதல்ல. துன்பத்தைத் தரக்கூடிய பைசாச வெழுத்தால் எழுதப்பட்டதே பிரம்மலிபி. முருகாவென்றழைத்தால், அவனோடி வந்து பிரம்மாவினாலெழுதப்பட்ட பைசாச வெழுத்தாகிய பிரம்மலிபியைத் தன் பாதங்களினாலழித்து விட்டு, ஓங்காரத்தை எழுதிவிடுவான்.

மனிதன் ஆசா பாசங்களாகிய துன்பத்திலழுந்தி அழிகிறான். அப்படி அழுந்தி வருந்த வேண்டாம். எழுந்திரு என்று எழுப்புவதே எழுத்து. எழுத்தால் வினையின் பளு குறையும். அகர முதல் ஐம்பத்தோரக்ஷரங்களினால் ஆனது திருப்புகழ். அருணகிரியாரைத் திருப்புகழ் பாடும்படி விநாயகர் எழுப்புகிறார். துன்பத்தில் அழுந்தியவனை எழுப்புவது ஐம்பத்தோரக்ஷரம்.

கடப்ப மாலையினால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறான் முருகன். அம்மாலை வேண்டுமென்று ஆசைப்பட்டாள் வள்ளி. முருகனையடையும் முயற்சி கைகூடும் என்பதற்கு அடையாளமாக மாலையை வேண்டினாளாம். அருணகிரியார் தன்னையே வள்ளியாக நினைத்து கடப்பமாலை தரும்படி முருகனை வேண்டுகிறார்.

**"மருக்கு லாவிய மலரணை கொதியாதே**
**வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே**
**கருக்குலாவிய அயலவர் பழியாதே**
**கடப்ப மலையை இனி தர வரவேணும்"**

மனம் உலக வாழ்க்கையி லேற்படும் இன்ப துன்பங்களில் அகப்பட்டு வாடுகின்றது. வாடாமலிருக்க திருப்புகழ் பாடவேண்டும்.

தத்துவங்களைப் பற்றிச் சன்டைக்கு நிற்கவேண்டாம். அதற்கு நமக்கு அவகாசமில்லை. ஆண்டவனை நினைத்துப் பஜனை செய்வதே ஆசையற்ற வழி. திருப்புகழ் பாடி முருக நாமத்தைப் பஜிக்க வேண்டும்.

திருப்புகழ் பாடினால் சமத்துவம் வரும். சமத்துவமற்றவனுக்கு மோக்ஷம் கிடைக்காது. எல்லாவற்றிலும் முருகனைப் பார்ப்பதே சமத்துவம். அப்பண்பே செய்ப்பதியெனும் வயலூர். வந்தவர்களை எல்லாம் முருகனாகக் கருதி நன்மை செய்யும் நன்செய்ப்பதியே வயலூர். அந்த வூரில்தான் அருணகிரியாரைத் திருப்புகழ் பாடும்படி பணித்தாராம் விநாயகர்.

ஆண்டவன் கருணை பொழிந்து கொண்டிருக்கிறான். நம் வாழ்த்து அவனை யடைகிறது. நாம் வாழ்த்தினால், ஆண்டவனை நம்மிடம் இழுக்கிறோம். ஆண்டவன் தன் கருணையினால் நம்மை இழுக்கிறான். அவனும் நாமும் ஒன்றாகிறோம், ஒன்றும் விரும்பாமல் திருப்புகழ் பாடினால் நமக்கு வேண்டியதைப் பற்றி முருகன் கவனிப்பான்.

சிவரஸம், கந்தரஸம், கிருஷ்ணரஸம், அபேதமான பக்திரஸம், திருப்புகழ் பாடித் தொண்டர்கள் அனுபவிக்கும் ஆனந்தரஸம் முதலிய பஞ்சாம்ருத ரஸமே திருப்புகழிலிருக்கிறது, திருப்புகழ் பாடி பஞ்சாம்ருத ரஸத்தில் திளைப்போம்.

☆ ☆ ☆

# வேலுண்டு வினையில்லை

**- சுவாமி திருமுருக கிருபானந்த வாரியார்**

வெல் என்ற முதல் நிலை நீண்ட தொழிற் பெயர் வேல். வேல் என்பது ஞானமாகும். சக்திவேல் என்றும் கூறுவர். சக்தி என்பது ஞானம். "சக்திதான் யாதோ என்னில் தடையில்லா ஞானமாகும்" என்பது சக்தியார் திருவாக்கு. உலகமெல்லாம் போற்றும் ஒப்பற்ற ஞானமே ஞான பண்டிதன் திருக்கரத்தில் வேலாயுதமாக விளங்குகிறது. ஞானம் என்பதும் அறிவு என்பதும் ஒன்றுதான்.

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு. அறிவு ஆழமாக இருத்தல் வேண்டும். எதனையும் ஆழ்ந்து சிந்தித்து அறிதல் வேண்டும். கடலை மேலோடு நோக்கினால் அலைகள் மட்டுமே தெரியும். இன்னும் சிறிது ஆழத்தில் சென்றால் மீன்கள் தெரியும். இன்னும் சிறிது ஆழத்தில் சங்குகள், பிறகு முத்துக்கள் தெரியும். அதுபோல் ஆழமான அறிவில் உட்பொருள் உண்மையான உண்மைகள் விளங்கும், ஆழ்ந்து சிந்தியாதவனை நுனிப் புல் மேய்கின்றான்' என்பர்.

2. அறிவு அகலமாக இருக்க வேண்டும்.பரந்த அறிவு கொண்டு பார்ப்பவர்க்கே எல்லாம் தெற்றென அங்கை நெல்லிக் கனியெனத் தோன்றும். விசாலமான அறிவில்லாதனைக் குறுகிய புத்தியுடையவன் என்பர்.

3. அறிவு கூர்மையாக இருத்தல் வேண்டும். எந்தப் பொருளையும் நுணுக்கமாக நோக்கி உணர்தல் வேண்டும். 'கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்' என்பது திருவாசகம். நுணுக்கமான அறிவில்லாதவனைக் 'கூர் கெட்டவன்' 'உலக்கைக் கொழுந்து' என்பர்.

எனவே அறிவு ஆழ்ந்து அகன்று நுணுகியிருத்தல் வேண்டும். ஞான வடிவாகிய இறைவனை மணிவாசகர் கூறும் அழகிய அமுத வாக்கை இங்கு உன்னுக.

"வேதங்கள் ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"

"முருகன் கையில் வேலை எப்போதும் தாங்கியிருக்கின்றனரே: சூர சங்காரந்தான் முடிந்து விட்டதே; இப்போது யாரைச் சங்காரம் செய்ய வைத்திருக்கின்றார்? பூசை செய்பவரை சங்கரிக்கவா? கும்பிடப் போகும் கும்பலைக் கொல்லவா? எதன் பொருட்டு வேலை யேந்தியுள்ளார்? என்று வீணர்கள் சிலர் வினாவுகின்றார்கள். அவர்களுடைய தெளிவு இல்லாத சிறிய மதியில், வேலைக் கொல்லும் படையாகக் கொண்டுள்ளார்கள். என்ன பேதமை! வேல் ஞானம் என்று அறிக.

அறிவு ஒன்றுக்கும் அஞ்சாது. அஞ்சாமையைத் தருவது அறிவு என்க. அறிவு உடையார் ஒன்றுக்கும் அஞ்சார். ஆனால் அஞ்சாதவர் அனைவரும் அறிஞர் என்று கருதக்கூடாது. பால் வெண்மையாக இருக்கும். ஆனால் வெண்மையாக இருக்கும் சுண்ணாம்பு நீர் முதலியவைகளைப் பால் என்று கருதல் கூடாது.

அறிவின் சிகரமாகிய அப்பரடிகள்

**"அஞ்சுவது மில்லை அஞ்ச வருவது மில்லை**
**"யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"**
**"அல்லல் என் செய்யும்? அருவினை என் செய்யும்?"**

என்று முழங்கும் வீர வசனங்களைக் காண்மின்.

முருகப் பெருமான் திருக்கரத்தில் வேலைத் தாங்கியிருப்பதன் உண்மை, தன்னை வழிபடுவோருக்கு அஞ்சாமையாகிய ஞானத்தை வழங்கும் பொருட்டு என்று தெளிக. அதனால் அத்திருவேல் வீரவேல் எனப்பட்டது.

அறிவு கூர்மையானது என்று முன்னே அறிந்தோம், ஆதலின் கூரிய அறிவை நாம் பெற வேண்டுமாயின் வேலை வணங்கவேண்டும். அதனால் வேல் தாரைவேல் எனப்பட்டது. தாரை = கூர்மை

ஆணவ மலமாகிய சூரபன்பனையும், மாயா மலமாகிய தாரகனையும், கன்ம மலமாகிய சிங்கமுகனையும் ஞானமாகிய வேல் அழித்தது. சம தமாதி நற்குணங்களாகிய தேவர்களைச் சிறை மீட்டது. அதனால் வெற்றி வேலை வழிபடுவோர் மல நீக்கமும் இன்ப ஆக்கமும் பெறுவர், "அது விண்ணோர் சிறை மீட்ட தீர வேல்.

ஆன்மாக்களுக்கு உபகரிக்கின்ற பெருமான் செவ்வேள் எனப்படுவான். வேள் – உபகரிப்பவன். உயிர்க்கு என்றும் தோன்றாத் துணையாக நின்று அஞ்ஞானத்தை யகற்றி மெய்ஞானத்தை நல்கும் குமரவேள் திருக்கரத்தில் நீங்காது நின்று துணை புரிகின்ற படியால், " செவ்வேள் திருக்கை வேல்" எனப் பேசப்பட்டது.

பிறவிப் பெருங்கடலை வற்றச் செய்யும் ஆற்றல் படைத்தது ஆதலின் 'வாரி குளித்த வேல்'

அது ஆணவ மலமாகிய சூரனையும் , சஞ்சித வினைக் குன்றத்தையும் பிளந்தது.

ஆதலின் அத்தனி வேல் உயிர்களாகிய நமக்கு எப்போதும் துணையாக நின்று உதவும்,

**வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கை வேல் - வாரி**
**குளித்த வேல் கொற்ற வேல் சூர் மார்புங்குன்றும்**
**தொளைத்த வேல் உண்டே துணை**

"வாகை சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை" என்று வேலை வழிபடும் அன்பர்கட்கு, வினை துகள் பட்டு ஒழியும். 'வினையோட விடுங்கதிர் வேல்' என்றும், எனது 'தீவினையெலாமடிய நீடு தனி வேல்விடு மடங்கல் வேலா' என்றும் அருணையடிகள் அருளிச் செய்கின்றார். ஆதலின் அன்பர்கள், 'வேலை துகள் பட்டு மலை சூரனுடல் பட்டுருவ வேலையுற விட்ட தனி வேலை' வந்தித்து, சிந்தித்து, வாழ்த்தி, வலிமையும் இளமையும் பெறுவார்களாக.

★ ★ ★

# பெருந்திருடன்

- திருப்புகழ் சதுரர் சே.த. இராமலிங்க பிள்ளை

திருடுதல் என்பது ஐம்பெரும் பாதங்களுள் ஒன்று என்பர். ஆனால் அது பாதகமா இல்லையா என்பது கூடத் திருடியவரையும் திருடப்பட்ட பொருளையும் பொறுத்துள்ளது. தண்டநூல் (penal code) கூட ஒரு குற்றவாளியைத் தண்டிக்குமுன் அவன் அக்குற்றஞ்செய்ய நேர்ந்த காரணங்களையும் கருத்தையும் ஆராய்ந்து அதற்குத் தக தண்டனை விதிக்கின்றது.

திருடுதலின் நோக்கம் மேன்மையானதாயின் அதுவும் சிறந்ததாகக் கருதப்பட்டது. இக் கருத்துப்பற்றியே நமது சைவ சமய குரவர்களும் ஆழ்வார்களும் இறைவனையே கள்வனாகக் கூறி மகிழ்ந்தனர்.

அவர்கள் கூறும் திருடர் வரிசையைத் தொகுத்து, அதில் பெருந்திருடன் யார் என்று ஆராய்வோம். சலந்தரன் என்ற அசுரன் மடியுமாறு சிவபிரான் மறைமுனி வேடங்கொண்டு சென்று தம் காலால் தரையில் ஒரு சக்கிர வடிவமான கோடிழுத்து அதைப் பேர்த்துத் தலைக்குமேல் எடுக்குமாறு சலந்தரனைப் பணித்தார். அவன் தனக்குச் சமமான பலசாலிகள் இல்லை என்ற தருக்கினால் அங்ஙனமே செய்தான். அது சக்கரமாக மாறி அவன் தலையை வீழ்த்தியது. இதனைக் கண்ட திருமால் அச் சக்கரத்தைத் தமதாகக் கொள்ள எண்ணிச் சிவபிரானை ஆயிரந் தாமரைகளால் அருச்சிக்கலாயினார். அப்போது செந்தாமரைக் கண்ணரின் சிவ பூசை மகிமையை உலகுக்கறிவிக்க விரும்பிய சிவபிரான் ஆயிரந் தாமரையில் ஒரு பூவைத் திருடினார். ஒரு மலர் குறைந்ததை உணர்ந்த திருமாலும்"கண்ணொன்று இடந்து மறைச்சிலம்பரற்று மலரடிக்கு" அணிந்தனர். சிவனாரும் மகிழ்ந்து மாலுக்குச் சக்கரத்தை மாண்புடனீந்தனர். அன்று முதல் சிவனார் பூத்திருடன் ஆனார்.

தில்லையில் வாழ்ந்த திருநீலகண்ட நாயனார் வீட்டில் திருவோடு திருடி மறைத்ததும், புகார் நகரத்து அமர் நீதியார் வீட்டில் கோவணந் திருடியதும் திருத் தொண்டர் புராணம் செப்புகிறது.

பாட்டிற்கு இரங்கும் சோம சுந்தரர் பாணபத்திரற்காக வரகுண பாண்டிய மன்னன் மாளிகையிலிருந்து பொன்னும் மணியும் திருடிக் கொணர்ந்து வந்த செய்தியும் உண்டு. இதனால்தான் திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம், முத்துச்சிவிகை, குடை விருது முதலியன கொடுத்த செய்தியைப் படித்த புலவர் ஒருவர் " ஊர்தோறும் பலி கொண்டுய்க்கும் ஒருவனுக்கு" இவைகள் எங்ஙனம் கிடைத்தன? என்று ஐயுறுகின்றார், மலரும் மணியும் திருடியதுபோல் மனத்தையும் திருடியதால்'உள்ளங் கவர் கள்வன்' என்பர் புகலியர் பெருமான். கச்சிப் பதியில் பாடிய திருப்பாட்டில் 'கள்ளக் கம்பன்' என்பர் சுந்தரமூர்த்திகள்.

இனி மற்றொரு கள்ளனைக் காண்போம். இவனது கள்ளத் தன்மை இளங் குழவிப் பருவத்திலேயே தொடங்கியது. இக் கள்வனுக்குப் பாலுந்தயிரும் வெண்ணெயும் தான் மிகப் பிரியம். எந்த வீட்டில் எவ்வளவு உயரத்தில் வைக்கப் பட்டிருந்தாலும இக்கள்வன் அங்கு தோன்றி தாழியை உடைத்து வெண்ணெயையுண்டு வெளியேறுவான். இவனது கள்ளச் செயல்களைப் பலர் வந்து கூறக் கேட்ட யசோதை கண்ணனை மணிக் கயிற்றால் உரலோடே பிணித்தாள். அன்று முதல் கண்ணன் தாமோதரன் (தாமம் – கயிறு; உதரம் வயிறு) எனப் பெயர் ஏற்றான். இவ்வனை நமது அருணகிரியார் 'நவநீதமும் திருடி உரலோட ஒன்றும் அரி' என்பர்.

பிள்ளையாரின்றி எக்காரியமும் தொடங்கலாகாது. ஆதலின் மூத்த பிள்ளையாரும் இக் கள்ளர் கூட்டத்தில் கலந்து கொண்டார். குருடும் நொண்டியுமான இரட்டைப் புலவர்களை தாம் பரிசிலாகப் பெற்ற பொன்முட்டை ஒன்றைக் குளக்கரையிலிருந்த பிள்ளையார் காவலாக அவரருகில் வைத்துவிட்டு குளிக்கப் போயினர். குளித்து வந்து பார்க்க முட்டையின் முடிச்சவிழ்ந்ததிருந்தது. பொற்காசுகள் எவையும் காணப்படவில்லை. இதற்குப் பிள்ளையாரே காரணம் என அந்தப் புலவர்கள்,

**"தம்பியோ பெண் திருடி தாயாருடன் பிறந்த**
**வம்பனோ நெய் திருடும் மாமாயன் - அரும்புவியில்**
**மூத்த பிள்ளையாரே முடிச்சவிழ்த்தீர், போமோ**
**கோத்திரத்திற்குள்ள குணம்"**

என்று பாடினர். கணபதியும் மகிழ்ந்து அம்முட்டை முன்னிலும் பெரிதாகும் படி பொன்காசுகளை அளித்தனர்.

மேலே சொன்ன கள்வர்களெல்லாம் களவாடியவை பூவும், வெண்ணெயும் பொன்னுமாகும். இதைவிடப் பெரிதாம் ஒன்றைத் திருடிய ஒருவனைத்தான் 'பெருந்திருடன்' என்போம்.

இக் கள்வன் யார்? இவனே செம்மான் மகளைத் திருடும் திருடன். தினைப்புனங்கிளி காத்த சவுந்தரியான வள்ளிநாயகி வீட்டிலுறங்கும் வேளை;நடுநிசி. வள்ளி பிராட்டியின் தாய் உறங்கினாள். வேடர்களின் நாய் உறங்கியது. பேயும் உறங்கும் பெருநிசியில் வள்ளி உறங்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள தோட்டம். மாமரந்தழைத்தோங்கி, பிஞ்சுகள் எடுத்துள்ளது. சிறு பள்ளங்களில் மழை நீர் தேங்கியிருக்கிறது. வேடர் அறியாமல் வள்ளியைக் கொண்டு போக எண்ணிய குமரவேள் மாம்பிஞ்சு ஒன்றைப் பறித்துக்குட்டையில் எறிகிறான். மெல்ல அடிமேல் அடிவைத்து அண்ணலை வரவேற்க வாசலை அடைகிறாள். பாழங்கதவு தாளிட்டு அடைத்திருக்கிறது! தாழ்ப்பாள் திறந்தால் வீட்டிலுள்ளோர் எழுந்துவிடுவரே! ஒன்றுந் தோன்றாமல் துடிக்கிறாள். வீட்டின் சுவரின்புறத்தில் கந்த குகேசன். உட்புறத்தில் வள்ளி நாயகி.

கதவு திறக்குமென்று காத்திருந்த குகன் நெடுநேரமாகியும் கதவு திறக்காமல் சுவரில் கன்னம் வைக்கலாயினான். கன்னக்கோலால் சுவரில் மெல்ல மெல்ல, 'கர கர' என்ற ஒலி கேட்கிறது. அவ்வொலியைப் பின்பற்றி வள்ளி அங்கு வந்து நிற்கிறாள்; சுவருந் தொளைபட்டது, குகன் முகமும் தெரிந்தது. உள்ளே புகுந்தான் வள்ளற் குமரன்; வள்ளியைத் தூக்கித் தோளில் வைத்து வெளியே வந்து பெண் திருடிய பெருந் திருடனானான்.

**"சேணொணாயிடை இதன்மேல் அரிவையைச்**
**சேர நாடிய திருடா"**

என்ற அருணகிரியாரின் வாக்குகளை நோக்கிடுக,

எனவே பூவைத்திருடிய புராரியையும், வெண்ணெய் திருடிய கண்ணனையும், பொன் முடிச்சவிழ்த்த மூத்த பிள்ளையையும் விடப் பெண்ணைத் திருடிய அண்ணலாகிய செவ்வேல் முருகனே பெருந்திருடன் என்பதில் ஐயமுண்டோ?

அப் பெருந்திருடன் எனது ஆன்மபோதத்தைத் திருட அறியானோ?

என்று ஆர்வமுடன் கேட்கும் பாம்பன் குமரகுரு தாசரது பாட்டினை ப் படித்து பாருங்கள்.

**"கோத்தயிர் வெண்ணெய்த் திருடன் கோல மருகா நறிய**
**பூத்திருடன் தன் மதலாய்! பொங்குகுறக் - கோத்திரத்தோர்**
**பெண் திருடிச் சென்ற பெருந்திருடா ! என்போதம்**
**உண்டு திருடத் தெரியாயோ?**

# "தகப்பன் ஸ்வாமி"

**-தவத்திரு ஸாது ராம் ஸ்வாமிகள் அவர்கள்**

**முகவுரை :**

'ஸ்வாமி' என்ற சொல் ஸம்ஸ்க்ருத்தில், யஜமானன், உடையவன், ஸொத்துக்கு உரியவன் என்ற பொருளைக் கொடுக்கும். ஸ்வாமி – ஸ்வம்முக்கு உடையவன். தெலுங்கில் கூட 'ஸொம்' என்றால் ஸொத்து என்று பொருள் படும். ஸ்வாமி என்ற வடமொழிச் சொல்லைத் தான் ஸ்ரீவைஷ்ணவத்தில் 'எம்பெருமானார்', 'உடையவர்' என்று மொழி பெயர்த்து ஸ்ரீ ராமாநுஜரைப் பற்றி வழங்குகிறார்கள். அதேபோல் தஞ்சாவூர்ப் ப்ரஹதீஸ்வரைத் 'தஞ்சைப் பெருவுடையார் என்றும் தமிழில் வழங்குவதுண்டு. ப்ருஹத் பெரியது. ஈஸ்வரர் – ஐஸ்வர்யத்துக்கு உரியவர். ஐஸ்வர்யம் 'ஸொம்' – ஸொத்துக்கு உடையவர் – ஸ்வாமி. இதையே, 'சென்றடையாத திருவுடையானை எனக் குறிப்பர் திருஞானசம்பந்தர் (திருச்சிராப்பள்ளி தேவாரத்தில்) –ஸிவனையே. இருடியர்பட்டி அடிகளோ தம் வழிபடு கடவுளாம் விநாயகரை (மதுரை பரிபூர்ண மகாகணபதியை) 'உடையவன்' (ஸ்வாமி) என்றே தம் பாடல்களில் குறிக்கின்றார். உடையவன் கணக்கு என்று உரைப்பதுவே அவரது பேச்சு வழக்கும் ஆகும். உடையவன் கணக்கென்றுரைப்பவ ! போற்றி ! ! – ஸ்ரீ ரெட்டியப் பட்டி ஸ்வாமிகள் ஸஹஸ்ரநாமாவளி.

'ஸ்வாமி என்ற சொல்லின் சிறப்புகள் 'ஸ்வாமி என்பது இப்படி எந்தத் தெய்வத்தையும் குறிக்கும் பொதுச் சொல்லாக இருப்பினும், ஸ்வாமி எனும் சொல் திருமுருகனையே சிறப்பாகக் குறிக்கும் என்கிறது அமரகோசநிகண்டு "ஸ்வாமி கஜமுகாநுஜ: அமரகோசம் கஜமுகன் – விநாயகர். அநுஜன் – தம்பி. கணபதி தம்பின் முருகனே. ஆக, முருகன் ஒருவனே ஸ்வாமி என்ற பேருக்கு உரியவர் என்று ஒரு ஜைனர் தொகுத்த நிகண்டு அபிப்ராயப்படுகிறது என்றால் இதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? அதனால் தான் ஸ்வாமிமலை என வழங்கும் திருஏரகம் முருகனுக்கே உரிய (கந்த ஸ்வாமிமலை, நமது ஸொந்த ஸ்வாமிமலை) கட்டுமலை எனப் பொருள் தருகிறது. இன்று கும்பகோணத்துக்கு மேற்கே 4 கல் தொலைவில் உள்ளது இம்மலை. இது தான் அறுபடைவீட்டுள் நான்காம்படைவீடு என்பது. அறுபடைவீடு என்பது அருணகிரிநாத ஸ்வாமிகளின் அபிப்ராயம்.

ஏரக வெற்பெனும் அற்புத(ம்)மிக்க ஸ்வாமி மலைப் பதி மெச்சிய சித்த இராஜத லக்ஷண லக்ஷ்மிபெற்ற ருள் பெருமாளே'' என இரு திருப்புகழ்களில் அவர் திருவேரகம் என்பது தஞ்சைக் – குடந்தை ஸ்வாமிமலையே எனத்தெளிவாகக் குறிப்பிடுகிறார். (முருகனை ஸிவஸ்வாமி, கணஸ்வாமி ஸர்வ ஸ்வாமி ஸநாதந : என்கிறது ஸ்ரீ ஸுப்ரம்மண்ய அஷ்டோத்தர ஸதநாமாவளி. இங்ஙனம் அனைத்து உடைமைகளுக்கும் ('ஸ்வம்' – ஸொத்துகளுக்கும்) ஸ்வாதி காரம் ஸ்வயம் பொறுப்பு யஜமானத்வம் உடையவன் எவனோ அவனே ஸ்வாமி எனப்படுவான் என்று தெரிகிறது. ஸிவனாகிற ஸ்வாமிக்கும் ஸ்கந்தன் குருநாதனாகி மந்த்ர உபதேசம் என்ற ஸொத்தைப் பகிர்ந்து கொண்டதால் அவனுக்கு ஸ்வாமி நாதன் என்னும் பேரும் ஏற்பட்டது. இங்கு ஸ்வாமி என்ற சொல் பெருவுடையார் ஆகிற பரமசிவனையே குறிக்கும். நாதன் என்பது (சிவகுரு) நாதனாகிய குமர குருபரனையே குறிக்கும். உடையவற்கும் உடையவன் ஸ்வாமிக்கும் ஸ்வாமி என்பது பொருள். வேங்கட சுப்ரம்மண்யனை வேங்கட ஸ்வாமி என்றும் திருமலைமேல் அழைப்பதுண்டு. திருப்புகழ் திருமலைமேல் மேல் இருக்கும் ஏரி – குஹனேரி. குகனேரி கோனேரியாயிற்று குலசேகர

ஆழ்வார் திருவாக்கில். 'கோனேரி வாழும் குருகாய் பிறப்பேனே' பெருமாள் திருமொழி. குஹனேரி – கோனேரிதான் ஸ்வாமி புஷ்க்கரணி – திருமலைமேல். குஹன் = ஸ்வாமி முருகன் என்பதும் இதனால் பெறப்படும். குஹாய நம: ஸ்ரீ ஸுப்ரம் மண்யாஷ்ட்டோத்தர ஸதநாமாவளி. வேங்கடஸுப்ரம்மண்யம் வேங்கட ஸ்வாமி – இவை குன்று தோறாடும் குமரன் – திருப்பதித் திருமலைக் குஹனுக்குள்ள திருநாமங்களே.

### தந்தைக்கும் ஸ்வாமி

தனக்கு மேல் தனியாகத் தனக்கொரு தலைவன் இல்லாதவன் தான் ஸ்வயம் ஆசார்யன்; ஸ்வாமி. தந்தைக்கு முன்னம் தனிக்ஞாந வாள் ஒன்று ஸாதித்தருள் கந்த ஸ்வாமி என்பது அருணகிரியாரின் வாக்காம் கந்தர் அலங்காரம். கந்தர் அநுபூதியில்

**''நாதா! குமரா! நம என்றனார்**
**ஓதாய்! எனஓ தியதெப் பொருள்தான்?''**

என அவரே பாடுகிறார். 'குரு இலாதவர் பரம ராஸியர் குரு' என்று திருப்புகழில் கூறுகிறார். மேலும் குமர குருபர முருக! என்றும் புத்ரகுருக்கள், சிவ குரு நாதன், பரம குரு என்றெல்லாமும் ஓதுகிறார். சிற்பரம குருக்கொரு குருக்கள் என முக்தர் புகழ் தம்பிரானே! என்கிறது ஸ்வாமிமலைத் திருப்புகழ் (சத்திய நரப்புடன்) பிதாவுக்கும் ஒரு பிள்ளை குரு ஆவதுண்டோ? ஆம் தந்தை பெரியவர். தநயன் சிறியவன். இது சாதாரண நிலையில் ஸாத்யம் ஆவதில்லை. ஆனால் பஞ்ச முக பரமேஸ்வரனாகிய அப்பாவுக்கும், ஷண்முக முருகனாகிய பிள்ளைக்கும் இது விதிவிலக்கு.

**''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என் நோற்றான் கொல் எனும் சொல்''**
**''தந்தைமகற்காற்றும் உதவி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்''**

என்றும் இவ்விரு திருக்குறள்களுக்கும் எடுத்துக்காட்டாக அத்தனும் புத்ரனும் நடித்த நாடகத்தின் விளைவே குஹப்பெருமானுக்குத் 'தகப்பன் ஸ்வாமி' என்ற பெயரை வாங்கித் தந்தது.

'தகப்பன் ஸ்வாமி' என்பதன் மறுவார்ப்புகள்தாம் கீழ்கண்ட தொடர்கள்.

அப்பாஸ்வாமி – அப்பாதுரை

ஐயாஸ்வாமி – ஐயாதுரை

அண்ணா ஸ்வாமி – அண்ணாதுரை

ஆதியன அப்பா, ஐயா, அண்ணா – இச் சொற்கள் மூன்றும் தகப்பன் என்ற பொருளையே தரும். ஸ்வாமி, துரை போன்ற பதங்கள் யாவும் யஜமானன், உடையவன், குருநாதன் போன்ற அர்த்தங்களையே கொடுக்கும். இந்தப் பேர்களை உடைய மனிதர்களும் தெரிந்தோ தெரியாமலோ முருகனின் பேரையே கொண்டிருக்கிறார்கள்.

(உ–ம்) 'அப்பா! நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்

வடலூர் வள்ளலார்

**''வேதங்கள் ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!''**

*திருவாசகம் (சிவபுராணம்)*

**"வேங்கட மாமலை மேய அண்ணா! அடியேன்**
**இடரைக் களையாயோ?"**
**– திருமங்கை ஆழ்வார்**

"பிரமன் அறியா விரத தக்ஷிணாமூர்த்தி என்றே பாலகுரு குழந்தைக் குருபரன் கலஹவிழி என்ற திருப்புகழில் (குடந்தைப் பெரிய மடத்துப் பாட்டில்) அருணை வள்ளலால் அழைக்கப் பெறுகிறான். "குமார குரவே நம:" என்று அர்ச்சனை நாமாவளிகள் அவனையே அர்ச்சிக்கின்றன. "ஹேஸ்வாமி நாதார்த்த பந்தோ !" என்று துதிக்கிறார் பிரம்மஸ்ரீ அநந்த ராமதீக்ஷிதேந்த்ரர் "ஸ்வாமிநாத பரிபாலயா" என்று அவன் மீது கீர்த்தனையும் உண்டு.

தஞ்சைமாவட்டத்தில் திருக்குடந்தைக்கருகில் உள்ள ஸ்வாமிமலையில் கீழே ஸுந்தரேஸ்வரரும் மலைமேலே ஸ்வாமி நாதஸ்வாமியும் கோயில் கொண்டுள்ள அமைப்பே சிஷ்யன்(சிவன்) நிலைமையையும், குரு (குமர குரு) ஸ்தானத்தையும் நினைவு படுத்தும். தாய் மீனாக்ஷிதேவிக்கும் தாழ்வரையில் ஸந்நிதி உண்டு. அதனால்தான்,

**"சிவனார் மனம் குளிர உபதேச மந்த்ரம் இரு**
**செவி மீதிலும் பகர் செய் குருநாதா!" என**

அருணகிரியார் திருவாவினன் குழத் திருப்புகழில் பாடினாரோ ?

(இரு செவி – அப்பா, அம்மா – இருவரின் இரண்டு காதுகள்)

## தகப்பனும் தனயனும் நடித்த நாடகம்

ப்ரம்மா ஸ்ருஷ்ட்டிகர்த்தா; படைப்புக் கடவுள் முதல் மூவருள் ஒருவர். ஆனாலும் அகந்தை மிக்கவர். கயிலையில் கந்தனை வந்தனையோ சிந்தனையோ பண்ணாது நிந்தனை பண்ணினார். அந்த அயனை ஐயன் முருகன் ஒரு நாள் அழைத்து 'உம் தொழில்யாது? எதை முதலாக் கொண்டு அத்தொழிலை ஆற்றுகிறீர் ? என்றெல்லாம் கேட்டார். ஆணவத்துடன் பங்கயன், வேதத்தை மூலமாகக் கொண்டு படைப்புத் தொழிலைத் தாம் செய்வதாகப் பதில் அளித்தார். 'வேதம் வருமோ நுமக்கு' ? என குஹன் கேட்க, 'வரும்' என அயன் திமிராய்ப் பதில் சொல்ல, 'எங்கே சொல்லும் ! பார்க்கலாம் !' என ஷண்முகன் கூற 'ஹரி: ஓம்' என விதாதா ஆரம்பித்தார். உடனே நிறுத்தும் ! எனக் கந்தன் ஆணையிட்டு அந்த முதல் மொழியாகிய ஓமுக்குப் பொருள் தெரியுமா ? எனக் கேள்வி கேட்டார் ப்ரபிமனை. 'குட்டிப்பாடம் கண்ணே ஐயஜய என வேதத்தை நெட்டுருப் பண்ணியிருந்த ஆதிபிராம்மணனாம் கஞ்ஜன், வேதாரம்பமயம் ப்ரணவத்துக்குப் பொருள் தெரிந்து கொண்டாரில்லை. திருதிரு என விழித்தார். குடிலைக்கு அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் நீர் செய்கிற படைப்பு வீண் என்று குஸேஸயனைக் கோபித்து, அவர் ஆஸநத்தைத்தாம் அபகரித்துக் கொண்டு அமர்ந்து முறையே ஸ்ருஷ்ட்டிகாரியத்தை முருகவேளே செய்யத் தொடங்கினார். வேதனைச் சிறையில் அடைக்கச் சொல்லித் தம் மூத்த தம்பி வீரபாஹுவுக்கு உத்தரவிட்டார். அவரும் அப்படியே செய்தார். இக்கதையைச்

"சிட்டித் தொழில் அதனைச் செய்வதெங்ஙன் என்று முனம்

குட்டிச் சிறை இருத்தும் கோமானே !" என்று பாடுகிறது. குட்டிக் கந்த புரணமாம் கந்தர் கலிவெண்பா.

கந்த புராணமோ " குட்டினான் அயன் நான்கு மாமுடிகளும் குலுங்க" என்கிறது.

**"நாலுமுக னாதியரி யோமென அ தாரமுரை**
**யாதபிர மானவவிழ மோதிபொரு ளோதுகென**
**நாலசிர மோடுசிகை துளிபட தாளமிடு மிளையோனே" - என**

**அருணகிரியும் நகைச்சுவை ததும்ப இராமேஸ்வரம் திருப்புகழில் வித ந்தோதுகிறார்.**

பிரமனைப் பிள்ளை சிறையில் இட்டுவிட்டு படைத்தல் தொழிலையே தான் மேற் கொண்டிருப்பதை அறிந்த பரமன் நந்திதேவரை விட்டு விவரம் அறிந்து வரச் சொன்னார் குமரனிடம் சென்று நந்தியும் வந்து வந்தித்து உள்ளத்தில் குஹன் அடியைப் பந்தித்து விஷயம் கேட்டுவரத் தந்தை தன்னை அனுப்பிவைத்த செய்தியை ஷண்முகனிடம் தெரிவிக்க, அவரையும் அடக்கிப் பயமுறுத்தினான் ஸ்க்கந்தன். வெருவுற்றுத் திரும்பி ஓடிச் சிவனாரிடம் நடந்ததை நந்தி தேவர் தெரிவிக்கப் பரமேஸ்வரனே பிள்ளை முருகனிடம் சென்று நேரில் விசாரிக்க வரக்குமரன் தந்தைக்குத் தன் ஆதனத்தைத் தந்து, இருக்க வைத்துத் தான் எழுந்துநின்று தகப்பனை வணங்கி வரவேற்றதும் தந்தையன், 'தனயன், அயனைச் சிறையில் வைத்துத்தானே படைப்பை மேற் கொண்ட விவரங்களை எல்லாம் கேட்டறிந்தார். அயன் சிறை புகக் காரணம், மறைமுதலுக்கு (ஓம்) அர்த்தம் உணராமையே எனப்புரிந்து கொண்ட சிவன், படைப்புக் கடவுளை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று பகர்ந்த ஆணைக்கிணங்க, கந்தவேள் கமலனைச் சிறைவீடு செய்து, தந்தை சொல் தவறாத தனயன் ஆனார். அப்பா, உடனே பிள்ளையைப் பார்த்து அயனார்க்கு வாராத அந்த ப்ரணவத்துக்கு உரை உனக்குத் தெரியுமோ எனக் கேட்கக் குரு சிஷ்ய பாவத்தில் முறையே இருந்து, கேட்க வேண்டிய முறைப்படிக் கேட்டால் ரஹஸ்யமாகச் சொல்வோம் எனச் சொல்லத், தாம் ப்ரணவார்த்தம் தெரியாதவர் போல் நடித்து இந்த நாடகத்தை அரங்கேற்றினார். சிவன் தாம் 'ஓம் பொருள்' அறிந்தவர் போல் நடித்து முருகவேள் இந்தக் கூத்தில் பங்கு கொண்டு பெருமை பெற்றார். இந்த நாடகமோ முதன்முதல் ஸ்வாமிமலையில் தான் நடந்தது. தலைகுனிந்து வாய் பொத்திக் தாழ்ந்து வீழ்ந்து பணிந்த நிலையில் தந்தையார் சிஷ்யனாய்ப் பயபக்தியுடன் கேட்கத் குருஸ்த்தானத்தில் குஹன் மேலான இடத்தில் அமர்ந்து சிவபிரானின் வலது தோளில்வீற்றிருந்து தந்தையின் ஐந்து முகங்கட்குமேல் தம் ஆறுமுகங்கள் உயர்ந்து அமையக் காட்சி கொடுத்து, அவரது வலது செவியில்( அல்லது இரண்டு காதுகளிலும்) ப்ரணவார்த்தத்தை மௌன யோகததியே உபதேசித்து அருளினார். அது கேட்டு வீராட்ட ஹாஸம் செய்த சிவனார், திருத்தணிகையிலும் நந்தி ஆற்றங்கரையில் அதே ப்ரணவோபதேசத்தை மீண்டும் ஒரு முறை கேட்க விரும்பிக் கேட்டு வீராட்ட ஹாஸம் செய்தருளினார் என்று திருத்தணி புராணமும் தெரிவிக்கும். இதனால் 'ப்ரணவார்த்தநகரி', 'தணிகாசலம்' என்றெல்லாம் தணிகாசலத்துக்கும் பேர்கள் வந்ததாகப் புராண வரலாறு.

**"கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்**
**கொஞ்சித் தமிழிற் பகர்வோனே!" எனச்**

செந்தில் திருப்புகழும் இந்தக் கதைக்குக் கட்டியம் கூறும். தமிழில் உபதேசித்தார் என அருணகிரியார் தமக்கே உரிய பாணியில், பாடுகிறார். இது மாதிரி கிட்டத்தட்ட 50 வகைக்கும் மேலான விதங்களில் முருகன் பரமனுக்குப் ப்ரணவார்த்தம் சொன்ன கதையைத் திருப்புகழ் முதலான நவமணிகளில் அருணகிரியார் பட்டைதீட்டிக் காட்டுகிறார் என்பதைக் 'கட்டுரைக் கதம்பம்' எனயாம் எழுதி முன்பே வெளியிட்டுள்ள தமிழ் நூலில் (உரைநடை) சிவபிரானுக்கு முருகவேள் உபதேசித்தது என்ன ? என்ற தலைப்பில் உள்ள பெரிய தொரு கட்டுரை விரிவாக விளக்கும். (அன்புடன் காண்க !)

முருகவேளாம் குருவுக்கு மூன்று சீடர்கள். ஒருவர் ஸ்ரேஷ்டராம் பரமசிவன். இரண்டாமவர் முனிஸ்ஷேடராம் அகஸ்தியர். மூன்றாமவர் நரஸ்ரேஷ்டராம் அருணகிரிநாதர். இதை விளக்கும் பாடல் இதோ:

**"வேலா சரணம் என் மேல் வெகு ளாமல் இனி**
**மேலா யினும்கடைக் கண்பார்! பருப்பத வேந்தன்மகள்**

பாலா! குறுமுனி யார்க்கும், திருப்புகழ்ப் பண்ணவற்கும்,
ஆலாலம் உண்டவற்கும் உபதேசித்த ஆண்டவனே!"

—திருக்கோவிலூர் ஞானியார்

அடிகள் பாடிய முருகர் அந்தாதி.

சிவனுக்கும், குறுமுனிவர்க்கும் உபதேசித்த உபதேசத்தையே தான் அருணகிரியார்க்கும் குமரவேள் செய்திருக்க வேண்டும். ஆதலால் (காலத்தால் முன்பின்னாயிருந்தாலும்) அருணைவள்ளலும் தாம் பெற்ற உபதேசத்தையும் இலை மறை காயாகத்தான் தம் நூல்களில் சிவன் குஹனிடம் பெற்ற உபதேச விவரங்களையும் வர்ணிக்கின்றார். பெற்ற உபதேசத்யும் குருவின் பெயரினையும் வெளிப்படையாகச் சொல்லலாகாது என்பது சாஸ்திரம்.

'4+3 என்ன ? என உபாத்யாயர் வகுப்பின் ஆய்வுக்காக பள்ளி ஆய்வாளர் விஜயம் செய்திருந்த சமயம் தம் மாணவன் ஒருவனைக் கேட்க, அவன் 7 என்று பதில் சொல்லி விட்டான். ஆனால் தன் வீட்டுக்குப் போய்த் தன் பெற்றோர்களிடம் தன்னையே அன்று உபாத்யாயர்(மறந்துவிட்டார் போலும்) 4+3 என்ன எனக் கேட்டு ஆசிரியர் என்னிடம் விடை தெரிந்து கொண்டார் எனச் சொன்னனாம் அதுபோல் இருக்கிறது இந்தக் கதையும். தனக்கும் ப்ரணவப் பொருள் தெரியும் என்பதை வெளிப்படுத்தினார் தகப்பன் ஸ்வாமியாகக் கந்தவேள். தாமும் தெரிந்து கொண்டிருந்தபோதும் தமக்குத் தெரியாதவர் போல் நடித்துத் தம் பிள்ளையின் ப்ரம்மக் ஞானத்தையும், பேரறிவாற்றலையும் உலகுக்கு வெளிப்படுத்திக் காட்டப் பிரமனைச் சிறை செய்தான். வ்யாஜமாகச் சிவனார் தமக்கு மறைப்பொருள் ஓதும்படிக்கேட்டுத் திருவிளையாடல் செய்து உபதேசமும் பெற்று மகனை மேலே உயர்த்திக் காட்டினார்.

சிவனுக்குத் தாம் தக்ஷிணாமூர்த்தி குருவாயிருந்து ஸநத, ஸநந்தந, ஸநாதந, ஸநத்குாரர்களாகிய ப்ரம்ம புருஷர்கள் நால்வருக்கும் ம வுன உபதேச சம்பு வாயிருந்து குரு ஸத்தாநம் ஸ்தானம் வகித்தோமே. தாநத்திலிந்து அவ்வுபதேசம் கேட்கும் வாய்ப்புக்கிட்டுமா ? என்று ஏங்கிருந்த அரனுக்குக் குருவுக்கும் குருவாகி உபதேசித்துப் பாலகுரு குமரகுரு – புத்ரகுரு – முருகவேள் அந்த வேட்கையைத் தணித்தருளினார். அதனால்தான் 'தகப்பன் ஸ்வாமி' அப்பாஸ்வாமி அண்ணாஸ்வாமி, ஐயாசுவாமி என்றெல்லாம் குமார குருவை போற்றுகிறோம்

## முடிவுரை(திருப்புகழ்)

ஸ்வாமி நாதனின் பேரில் வரும் முதல் பதம் 'ஸ்வாமி' என்பது 12 முறை வரும்படிப் பிற்பகுதியை அமைத்து அருணகிரியார் பாடியருளியுள்ளது 'புவிக்குள்' எனத் தொடங்கும் பொதுத் திருப்புகழ் (பின்பாதி) சிவத்தின் ஸ்வாமி – சிவஸ்வாமி; சிவகுரு மயில் மிசை நடிக்கும் சாமி மயில் வாஹநத்தில் நடனம் செய்யும் கடவுள். எமதுள சிறக்கும் சாமி – எமக்குள்ளே சிறப்பாக வீற்றிருக்கும் தலைவன். ஸொருபம் இது ஒளிக்காணச் செழிக்கும் சாமி – ஸ்வருபம்(ஜீவன்) உயிர் ஆகிய இது அருள் ஒளியைக் காணும்படி என் இதயத்தில் செழித்து வீற்றிருக்கும் பரப்ப்ரம்ம ஒளியாம் யஜமானன். பிறவியை ஒழிக்கும் சாமி என் பிறப்புகளை எல்லாம் ஒழித்தருளும் என் உடையவன். பவமதை தெறிக்கும் சாமி – பாவங்களையும் பிறவிகளையும் உடைத்தெறியும் எம்பெருமான். முனிவர்கள் இடம் மேவும் தவத்தின் சாமி – மஹாதபஸ்விகளிடத்தில் அவர் தம் உள்ளத்தில் வீற்றிருக்கும் தபஸூக்கு நாயகன். புரிபிழை பொறுக்கும் சாமி–(அடியார்கள்) செய்யும் தவறுகளை அவ்வப்போது பொறுத்து மன்னித்தருளும் அருட்குணமுடைய ஆண்டவன். குடிநிலை தரிக்கும் சாமி –

குடிமக்களுடைய் வாழ்க்கை நிலையை நிர்வஹிக்கும் ராஜா. அசுரர்கள் பொடி ஆகச் சதைக்கும் சாமி – ராக்ஷஸர்களைத் தூளாக்கி அழிக்கும் கோமான். எமைபணி விதிக்கும் சாமி – எம் போன்றவர்கட்குப் (பிறவி பயன் பெற) என்னென்ன தொண்டுகள் செய்ய ஆணையிடவேண்டுமோ அவற்றை நியதி செய்து ஏவும் ஸர்வேஸ்வரன். ஸரவண தகப்பன் சாமி எனவரு பெருமாளே – சரவண ஸம்பவனாகவும், தந்தைக்கே தெய்வமாகவும், குருவாகவும் எல்லாம் வந்தருளிய பெருமையை ஆள்பவன்; பெருமைக்கு உரியவன் எம்மை ஆண்டவன் (முருகவேள்) இந்தத் திருப்புகழில் இடையில் பிரார்த்தனைப் பகுதியில் அருணகிரிநாதர் கலக்கு உண்டாகு புவிதனில் எனக்கு உண்டாகு பணிவிடை கணக்கு உண்டாதல் திருவுளம் அறியாதோ ?'' எனக் கேட்கிறார். கலங்கியமாயாலோகத்தில் தனக்கு நியமிக்கப்பட்டுள்ள திருத்தொண்டுகள் (உடையவன் ஸ்வாமி) கணக்குள் இருத்தல் (முருகவேள்) திருவுளத்துக்குத் தெரியாதனவா ? என்றும் கேட்கிறார். மேற்கூறிய கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கியதும், இக்கட்டுரைத் தலைப்பையே தந்ததுமான முழுத்திருப்புகழ் இதோ:

''புவிக்குன் பாத மதைநினை பவர்க்குங் காலதரிசனை
புலக்கண் கூடும் மதுதனை அறியாதே
புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவம் அது கொளல் பிழையாதே;
கவிக்கொண் டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
களைக்கும் பால சுழல்படும் மடிநாயேன்
கலக்குண் டாகு புவிதனி லெனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுள மறியாதோ;
சிவத்தின் சாமி மயில் மிசை நடிக்கும் சாமி யெமதுளெ
சிறக்குஞ்சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ் சாமி பிறவியை ஒழிக்குஞ் சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முனிவர்க ளிடமேவுந்;
தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்கும் சாமி யசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி யெமைபணி விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி யெனவரு பெருமாளே''.

✿ ✿ ✿

# மயில் வகுப்பு

- சு.வே. சுபரம்மண்யம்

**தடக்கொற்ற வேள்மயி லே! இடர் தீரத் தனிவிடில்நீ**
**வடக்கிற் கிரிக்கப் புறத்தும் நின் றோகையின் வட்டமிட்டுக்**
**கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும் கனகசக்ரத்**
**திடர்க்கப் புறத்தும் திசைக்கப் புறத்தும் திரிகுவையே.** –கந்தர் அலங்காரம் – 96

தெய்வங்களைப் போற்றிப் புகழ்ந்து அர்ச்சித்து முறையாக வழிபாடு செய்வது போல, அவர்களோடு தொடர்புடைய பாதங்கள் கரங்கள் தோள்கள் முகங்கள், மாலைகள், ஆயுதங்கள், வீரம், கொடை, கருணை, கொடிகள் முதலியவற்றையும் புகழ்ந்து வழிபாடு செய்வது மரபு.

**"ஏகாந்த வீரம் போற்றி! நீலாங்க யாநிம் போற்றி!**
**ஏடார்ந்த நீபம் போற்றி முகில்தாவி–**
**ஏறோங்கல் ஏழும் சாய்த்த நான் மூன்று தோளும் போற்றி!**
**யார் வேண்டி னாலும் கேட்ட பொருளீயும்;**
**த்யாிகாங்க சீலம் போற்றி"**

என்னும் திருப்புகழ் அடிகளும்

'அடல் புனைந்த வேலும் மயிலும்' என்றும் வாழி என்னும் சித்து வகுப்பின் முதலடியும்

**மூவிரு முகங்கள் போற்றி! முகம்பொழி கருணை போற்றி!**
**ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி! அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி! திருக்கைவேல் போற்றி! போற்றி!**

என்னும் கந்த புராணப் பாடலும் இதற்குச் சான்றாகும்.

சிவபெருமானின் வாஹநமான நந்தி தேவருக்குத் தனி உபாஸநா பூஜை முறை கீர்த்தனை உண்டு. திருமாலின் பரியான பெரிய திருவடி எனப் பேசப்பெறும். கருடாழ்வார்க்குக் கருட தண்டகம், கருட கத்யம் முதலிய தோத்திரங்களும், ஐந்து ஆயுதங்கட்கும் பஞ்சாயுத ஸ்தோத்ரமும் சக்கரத்தாழ்வார்க்குப் ப்ரத்யேகமாக மூலமந்த்ரம், ஹோமவிதிகள் ஸுதர்சந அஷ்டக ஸ்தோத்ரம் முதலியனவும் அமைந்துள்ளன.

'ஆடும்பரி, வேல், அணிசேவல் எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்' என்று அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி முதற்பாட்டில் வேண்டியுள்ளதிலிருந்து, இம் மூன்றுக்கும் உள்ள பெருமையும் இவை வழிபாட்டுக் குரியவை என்பதும் புலனாகும்.

கந்தப் பெருமானுடைய ஸாங்கங்களின் பெருமைகளையும் உபாங்கங்களின் மஹிமைகளையும 25 சந்தப் பாடல் தொகுப்பாகத் ("ஸ்ரீவிபாகம்" எனப் பெறும்) திருவகுப்பு எனற் தலைப்பில் தந்துள்ளார். சந்தக் கவிச் சிங்கமாம் அருணகிரிநாத ஸ்வாமிகள். அவற்றுள் ஒன்று மயில் வகுப்பு என்னும் பாட்டு.

தான தன தந்ததன தானதன தந்ததன தானதன தந்ததன தந்த தன்னா ' என்ற சந்த அமைப்பில் பதினாறு அடிகனில் அமைந்துள்ள இப்பாடல் திருவகுப்புகள் வரிசையில் 19 ஆவது வகுப்பாகக் காணப் பெறுகின்றது.

திருச்செந்தூர், கடற்கரையில் உள்ள குஹஸ்தலம் இது ஓர் அழகு படைவீடு என்ற அந்தஸ்தைப் பெற்ற ஒரே தலமாக உள்ளமை ஓர் அழகு, திரிசுதந்தரர்களான 2000 முக்காணியர்களால் பூஜிக்கப் பெறுகின்றமை ஓர் அழகு. கந்தப் பெருமானின் தம்பிமார்களான நவவீரர்களையும் கோயில் வாயில்களில் இரு புறங்களிலும் துவாரபாலகர்களாக அமையக் கொண்டுள்ளமை ஓர் அழகு. தந்தையாகிய சிவபெருமானை முருக வேள் அர்ச்சிப்பதற்காகக் கையில் தாமரைப் பூத் தாங்கிய கோலம் கொண்டுள்ளமை ஓர் அழகு. கோயிலின் மேற்குப் ப்ராகாரத்தில் சூர ஸம்ஹாரத்திருக்கோலம் கருங்கல்லிலேயே வடிக்கப் பெற்றுள்ளமை ஓர் அழகு. இப்படிப் பற்பல அழுகு அம்சங்களைக் கொண்டது திருச் சீரலைவாய். ஆதலால் "கோலமுறு செந்தில்" என்றார் அருணகிரியார் அக்குழந்தைக் குமரனின் தாமரை மலரன்ன திருவடிகளை மிக அன்புடன் வணங்கருவது அவனுடைய வாஹனமாம் நீலமயில். அதனுடைய பராக்ரமம் தான் என்னே ! அதனை ஈண்டுக் காண்போம்.

நவக்க்ரஹங்களாம் ஒன்பது கோள்களுட் சேர்ந்தவை (தலை இல்லாப்) பாம்பாம் ராகுவும் (உடல் இல்லாப் பாம்பாம்) கேதுவும். ஸூர்யனை ராகுவும் சந்திரனைக் கேதுவும், விழுங்கி உமிழ்வதை ஜோதிட நூலார் ஸூர்ய க்ரஹணம் என்றும் சந்திர க்ரஹணம் என்றும் உரைப்பர். முதலில் அரக்கர்களாய் இருந்து பின் அமுதம் உண்ட பெருமையால் ஏழு கோள்களோடு சேர்க்கப்பட்ட பாம்புகளாம் இவர்களை நினைத்தாலே மக்கள் அஞ்சுவர். இத்தகைய இருவரையும் வாயினால் கொத்தி உண்ணச் சென்றது வடிவேலன் வாஹநமாம் வண்ணமயில். அப்போது "நாங்கள் இருவரும் விநாயகப் பெருமான் முருகவேள் சிவபிரான் ஆகிய சிவகுடும்பத்தினரை வழிபடும் அடியார்கள். எங்களைத் துன்புறுத்தாதீர்" என்று பயத்தோடு அழுது முறையிட்டு மயிலிடம் வேண்டிக் கொண்டனவாம் ராகு கேதுக்கள். வேண்டுகோளுக்கு மனமிரங்கி அவற்றை ஒன்றும் செய்யாது,போக விட்டு விட்டதன் மூலம் இருபாம்புகளையும் திருச்செந்தூர்க் குமரனின் மயில் வாஹநம் வெற்றி கொண்டது.

தேவர்களோடு சேர்ந்து கடலைக் கடைந்தார் திருமால். தேவாமிர்தம் கிடைத்தது. அதனைத் தேவர்கட்கு மோஹினி உருவில் வந்து பங்கிட்டுக் கொடுத்தார். அவர் ஆயிரம் தலைகளோடு கூடிய ஆதிசேடன் என்ற பாம்புப்படுக்கையிலே படுத்துறங்குவார். அந்த ஆதிசேஷனுடைய ரத்ன மணிகள் கொண்ட ஆயிரம் தலைகளிலிருந்தும் உடலிருந்தும் ரத்தம் பீறிட்டு எழுந்து ஆறாக ஓடும்படி அடித்து அறைந்து உடம்பைக் குலைய வைத்தது அலைவாய் முருகனின் அழகிய மயில்.

**"சேலில் திகழ்வயல் செங்கோடை வெள்பன் செழுங்கலபி**
**ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து**
**காலிற் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்**
**பாலிக்கும் மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே"**

என்றும் கந்தர் அலங்காரம் 97 ஆம் செய்யுள் மேற்கண்ட செய்தியையே விரிவாகத் தருகின்றது.

இராமாயணத்தில் விபீஷணனின் அண்ணனான இராவணனின் மைந்தனாம் இந்த்ரஜித், எதிர்க் கட்சியில் உள்ள இராமனின் தம்பியான லக்ஷ்மணன் மீது நாகாஸ்த்ரத்தைப் ப்ரயோகம் செய்தான். நாகபாசத்தால் இலக்குவன் கட்டுண்டான். திருமாலின் வாஹநமான கருடன் அங்கு வந்து நாகபாச மயக்கத்திலிருந்து இலக்குமணனை விடுவித்தான். அத்தகைய பராக்ரமமுடைய கருடன் மேல் இடி விழுந்தது போன்ற பேரொலியை எழுப்பிக் கொண்டு கந்தனி மயில் வாஹநம் விழுந்தது.

நாற்புறமும் கடல் நீரால் சூழப்பட்டுள்ளது பூமி. இந்தப் பூமியைத் தான் பாதாள லோகத்தில் இருந்து கொண்டு ஆதிசேஷன் என்னும் பாம்பு தன் ஆயிரம் தலைகள் மீது தாங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பாம்பு மயக்கம் கொள்ளும்படியாக, மால்மருகன் செந்தில் குமரன் ஊர் பரியாம் மரகத மயில் தன் கூரிய பெரிய கால் நகங்களால் பூமியை முழுதும் உழுது ஆழப்படுத்தி அதிரவைத்தது.

பூமியின் கீழே எட்டுத் திசைகளிலும் எட்டு நாகப் பாம்புகள் இருந்து கொண்டு பூமியை வேலி போலத் தாங்கிப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. நெருப்பைப் போன்ற தான கோபத்துடன் அயில் வேலோன் மயில்வாஹநம் உலகில் பறந்து படர்ந்து செல்லும் பொழுது அந்த எட்டுக் குல நாகங்களும் அஞ்சி நடுங்கி ஒடுங்கிப் போய் தளர்ந்து நின்றன.

வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் வெள்ளைக் கலைச்சியாம் ஸரஸ்வதியைச் செந்தாமரையிற் பிறந்த நான்முகப் பிரமன் மணந்து கொண்டார். அவருக்குக் கொடியாக வேண்டி அப்பிரமனை முறையாகப் பூஜித்து வழிபாடு செய்து அருள் பெற்று அவர்க்குக் கொடியாகவும் ஆகி விட்டிருந்தது.பவழம் போற் சிவந்த தலை உச்சியை உடைய ஓர் அன்னப் பறவை. அந்த அன்னப் பறவையைக் கன்னல் மொழி வள்ளி கணவன் மயில் வாஹனம் சண்டையிட்டு வருத்தி வெற்றி கொண்டது. (பிரமனின் அன்ன ஊர்தியைத் தான் மயில் வருத்தியதாக ஞாநவரோதயர் எழுதிய கந்த புராண உபதேச காண்டம் கூறும். ஒரு தெய்வத்திற்கு அதன் வாஹநம் கொடியாக ஆதல் மரபு. அதனை மாற்றிக் கொடியே வாஹநமாகும் மரபை உண்டாக்கி ஆசிரியர் இங்கு கூறியுள்ளார் எனக் கொள்ளல் வேண்டும். சிவனுக்கு ரிஷப வாஹநமாகும், ரிஷபக் கொடி. (அம்பிகைக்கு ஸிம்மம் வாஹநம் அதுவே கொடியுமாம்) விநாயகர்க்கு மூஷிகம் வாஹநம். அதுவே கொடியும். திருமாலுக்கு வாஹநமும், கொடியும் கருடனேயாம். முருகப் பெருமானுக்கு வாஹநம் மயில். மயிற் கொடியும் அவர்க்கு உண்டு. "பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ" என்பது திருமுருகாற்றுப்படை)

தேவ லோகத்துப் பூத கணங்கள், பாடகர்களாம் கந்தருவர், நவநாதர்கள் (மனித உடலும் குதிரை முகமும் உடைய கின்னரர்) கிம்புருஷர் உள்ளிட்ட பதினெண் கணத்தவர்களும் எதிரில் வந்து தொழும் படியாகத் தான் செய்த சண்டைகளில் எல்லாம் வெற்றியே அடைவதற்காகப் பல யானைக் கூட்டங்களின் மேலே "நாம் இறந்தோம் நம் உயிர் போய்விட்டது" என்று அந்த யானைகள் எல்லாம் எண்ணும்படி எதிர்த்து எதிரில் சென்று விழுந்து போராடியது பால வேலனின் கோலமயில்.

எந்தவிதக் குற்றமும் அற்ற தான மாம்பூ, அசோக மலர், முல்லைப்பூ, தாமரை, நீலோற்பல மலர் ஆகிய ஐந்து பாணங்களை உடையவன் மன்மதன். அவன் அந்த ஐந்து மலரம்பு களையும் சிவபிரான் மீது பிரயோகித்தான். அப்போது அவனுடைய அழகிய உடல் கருகி விழும்படி நெற்றிக்கண்ணால் பார்த்தார். அத்தகைய சிவபிரான் திருமேனியில் அணிந்திருந்த பாம்புகள் ஒன்று கூடி மாலின் படுக்கையான ஆதிசேடனுக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் வந்து விடுமோ என உள்ளத்தில் அச்சம் கொண்டு புற்று வளைகளுக்குள் புகும் படியாகப் பெருங் கூச்சலாக அகவியது மயில்.

தினமும் இரவுப் பொழுது முடிவதை அதாவது பகற்பொழுதின் தொடக்கமான, ஸூர்யோதத்தைத் தான் முதலில் உணர்ந்து பின் பிறர்க்குக் "கொக்கறுகோ" எனும் தன் கூவு குரலால் அறிவிப்பதும் , பக்தர்களைத் தாக்க வரும், பூத ப்ரேத, பைசாசக் கூட்டங்களைச் சண்டையிட்டு அழித்துப் பக்தர்கள் வாயினால் 'வாழி ! வாழி !' என்ற வாழ்த்தைப் பெற்றதும் ஆன (முருகவேள் கொடியாம்) கோழியினிடத்தில், தனக்குக் கிடைத்த பல வெற்றிகளையும்,

அவற்றைப் பெறத்தான் கையாண்ட வழி முறைகளையும் சொல்லி மகிழும் வள்ளி மணாளன் ஊர்ந்து மகிழ புள்ளி மயில் வாஹநம்.

மேற்கண்டவாறு மயில் வகுப்பில் மயிலின் பெருமை பேசப் பெற்றுள்ளது.

கந்தர் அலங்காரத்தில் மயிலை நோக்கியே அருணகிரியார் "தடக் கொற்ற" எனத் தொடங்கும் பாடலைப் பாடியிருப்பது மயிலின் தனிச் சிறப்பை உணர்த்துகின்றது. இது "மயில் அலங்காரப்" பாடல் ஆகும். முருகவேள் தம் வாஹநம் தனியே வெளிச் செல்ல அநுமதி தந்துவிட்டால் யாவருடைய கஷ்டங்களையும் தீர்ப்பதற்காக மயில் தன் தோகையை நன்கு பெரியதாய் விரித்து வடக்கே உள்ள மேருமலைக்கு அப்புறத்திலும் ஏழு கடல்கட்கு அப்பாலும் ஸூரிய சந்திரர்கட்கு அப்பாலும், பொன்மயமான சக்ரவாளகிரிக்கு அப்பாலும், திசைகளுக்கு அப்பாலும் திரிந்து வரும் என அருணகிரியார் கூறியுள்ளார். மயிலின் தோகையின் அசைவால் உண்டாகும் பெருங்காற்று பட்டு மேருமலையே அசைந்தது. அடியிட்டு நடக்க மலைகள் தூளாயின. அந்தத் தூள்நிறைந்து கடல் மேடிட்டது என்கின்றது "குசைநெகிழா" எனும் கந்தர் அலங்காரப் பாடல்.

"ஸ்ரீ கீர்த்தி" எனப்பெறும் திருப்புகழ், 'ஸ்கந்தாநுபூதி ', ஸ்கந்தரந்தாதி முதலிய தம் நூல்களிலும் மயிலைப் பலவகைகளில் புகழ்ந்துள்ளார் அருணகிரிநாத ஸ்வாமிகள்.

காப்பு, நூற்பயன் பாடல்களோடு 12 பாக்களைக் கொண்ட மயில் விருத்தம் மயிலின் பெருமையை விரிவாகத் தருகின்றது. தணிகைக் கந்தப் தேசிகர் பாடிய மயிற்பத்தும், வண்ணச்சரபம் தண்டபாணி ஸ்வாமிகள் பாடிய மயில் அலங்காரப் பாடல்களும், தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் பாடிய மஞ்ஞைப் பாட்டும் மயிலைப் புகழ்ந்து கூறும் பாடல்களாம்.

"சால விளங்கும் விந்து எனும் தடமாமயிலாம் தாலேலோ" என்ற தொடரில் மயில் விந்து தத்வம் என்கிறார் திருப்போரூர்ச் சிதம்பர ஸ்வாமிகள்.

மயில் பாரத தேசத்துத் தேசியப் பறவை என்பதும் நினைந்து பெருமைப்படத் தக்கதாகும்.

மயில் ஓங்கார வடிவை உணர்த்தும். சுத்த மாயா தத்துவத்தைக் குறிக்கும். இது 'குண்டலி' எனவும் பெறும். ("ஆன தனிமந்தர ரூப நிலை கொண்ட தாடு மயில்" – திரு. வாதினை)

மனிதனின் தலைப்பகுதியே மயில் என்பார் ஸ்ரீ வள்ளிமலை ஸ்வாமிகள். கழுத்தில் உள்ள இரு நெட்டுக்குத்து நரம்புகளைக் கால்களாக்கி மூக்கை மயிலின் மூக்காக வைத்துப் பார்க்கின். இது புலனாகும் என்பார் ஸ்வாமிகள். மனத்தையே மயிலாக்கி அதில் எப்போதும் மால் மருகனாம் முருகன் உலாவரச் செய்யும் என்றும் சொல்வார் எம் குருநாதர்.

நடன மாடிய மயிலின் தாள ஜதி தான் 'திதத்தத்த' எனத் தொடங்கி 54ஆம் கந்தர் அந்தாதியைப் பாடி வில்லிபுத்தூராரை வாதில் வெல்வதற்கு அருணகிரியார்க்கு வழிகாட்டியது என்றும் சொல்வர் பெரியோர்.

இவ்வாறெல்லாம் பலவாறாகப் புகழ்ந்து பேசப் பெற்ற நீல மயில் வாஹநத்தின் மீது நீல வள்ளி மணாளனை ஏற்றி நெஞ்சில் நிறுத்தி நினைந்து நீள் பவக் கடலைக் கடந்து நிற்போமாக !

# கந்தனே கனியமுதம்தானே?

- திரு. ரா. கணபதி

இவ்வருடத்திய 'திருப்புகழ் அன்பர்கள்' ஆண்டு மலருக்குத் 'திருப்புகழ் கனியமுதம்' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். மிகவும் பொருத்தமான பெயர். ஏனெனில் அப்புகழுக்குரிய நாயகனே கனியமுதம்தானே? "பழம் நீ!" என்று அம்மை–அப்பர்கள் போற்றிய வனாயிற்றே! என்ன பழம்? ஞானப் பழம். அதாவது எந்நாளும் அழுகாத, அழியாத அம்ருதமான பழம். அமுதக் கனி என்பதும் கனியமுதம் என்பதும் அதுவேதானே?

தாயைப் போலப் பிள்ளை என்பார்கள். அப்படித்தான் நமது சக்தி குமாரனும். ஞானாம்பிகையின் சாக்ஷாத் வடிவான ஞானக்குழந்தை அவன். அவள் ஞானப்பால் ஊட்டுவதாகவே பொதுவில் சொல்வது. ஆனால் ஒரு மாறுபாட்டழகோடு இங்கு அப்பாலே வேலாகியிருக்கிறது. வேலேந்தும் வேந்தனை ஞானசக்திதரன் என்றே சொல்கிறோம்.

'பழம் நீ – பழநி' என்று அருமைக் குழந்தையை அம்மா கூறினாளென்றால், அந்த அம்மாவை அப்படிக் கூறுகிறார் திருப்புகழ்க் கவியமுதம் ஈந்த அருணகிரி நாதர். சொற்சித்திர ஜாலத்துடன் அப்படிக் கூறுகிறார், பழநியம்பதி வாழ் ஞானபண்டித ஸ்வாமியைப் போற்றும் 'குழலடவி முகில் பொழில்' எனத் தொடங்கும் பாடலில்:

**"பழநி மலைவரு பழநி மலைதரு**
**பழநி மலைமுரு கவி சாகா!"**

இனிய சொற்கள் நிருத்தியம் புரிகின்றன, இல்லையா?

ஆயின் பொருள் புரியவில்லையே என்கிறீர்களா?

சரி, இப்போது சந்தத்தையொட்டி மேற்கொண்டவாறு பதப் பிரிவினை செய்ததை மாற்றிப் பொருளையொட்டி வேறு விதத்தில் சந்தி பிரித்துக் கொடுக்கிறோம்: 'பழநி, மலை வரு பழநிமலை, தரு பழநிமலை முருக, விசாகா!'

இப்போதும் முன்னைவிட ஏதோ சிறிதுதான் புரிகிறாற் போலிருக்கிறதே தவிர முற்றிலும் புரிந்து கொள்வதற்குத் தொலைதூரத்தில்தான் இருக்கிறோம் என்கிறீர்களா?

சரி, பதப் பொருளும் கூறுகிறோம். அதோடு அவசியமான விளக்கமும் தருகிறோம்.

முதலில் 'பழநி' என்கிறாரே, அங்குதான் அந்த அன்னையை, ஞானாம்பாளைப் 'பழமாக இருக்கிறவள்' என்று அழைத்து விடுகிறார். பிள்ளைக்கே உலகில் பிரக்கியாதியாகவுள்ள 'பழநி' என்ற பெயர் அம்மாவுக்கு இட்டு அப்படி அழைக்கிறார்.

'பழம் நீ' என்ற இரு பதம் சேர்ந்து பிள்ளைக்கு அப்படிப் பெயர். 'தத்வம் அஸி' – 'பிரம்மம் நீ' – என்ற மஹாவாக்யத்திற்கு நேர் ஈடான சொற்றொடர், 'பழம் நீ'. அந்தத் 'தத்' 'பிரம்மம்' நான். அது ஞானமாம் பழமன்றி வேறென்ன? தாய்–தந்தைக்குப் பிரணவோபதேசம் செய்த குழந்தைக் குருநாதனுக்கு இப்படி மறைமுகமாக அத் தம்பதியரிருவரும் ஒன்று சேர்ந்து மஹாவாக்யோபதேசம் செய்து திருப்தியடைந்தனர் போலும்! பிள்ளை 'பழநி' என்று பெயர்பெற்ற விஷயம் இப்படி.

அன்னைக்குப் 'பழநி' என்று பெயரிட்டிருப்பது எப்படி? இங்கே பழம்+நீ என இரு சொற்கள் இல்லை. 'பழநி' என்பது ஒரே சொல். 'பழம்' என்று அஃறிணையில் ஜடமாக இருப்பதையே உயர்திணையில் சேதனமான பெண்பால் பெயராகச் சொல்கையில் 'பழநி' என்று அழகுபட ஆக்கியிருக்கிறார், வாக்கிற்(கு) அருணகிரி. 'பழநி'ப் பெயர் பெற்ற அந்தப் பெண்ணை, அகில சராசரத்திற்கும் அன்னையை, 'சேதனம்' என்று சும்மாச் சொல்லிவிட்டால் போதுமா? அத்தனை சேதன ஜீவர்களுக்கும் மூலமாகப் பரமாத்மாவின் உயிர்– உணர்வு–ஆற்றல் அறிவாக இருக்கும் மஹாசைதன்ய ஸ்வரூபிணியே அல்லவா அவள்? பரமாத்மனை 'ஸத்' என்கையில் அதோடு இரண்டற ஒன்றிய 'சித்' என்பது அவளைத்தான். அப்போது உயிராகவும், உணர்வாகவும், ஆற்றலாகவும், அறிவாகவும் அவள் இருந்தாலும் அறிவு என்ற ஒன்றிலேயேதான் மற்ற மூன்றையும் அம்சமாக்கி, அந்தச் 'சித்'தை 'ஞானம்' என்றேதான் பொருள் கொள்வது வழக்கம். ஞானமே உருவான ஞானாம்பாளைத்தான் அருணகிரியார் 'பழநி' என்றார். 'பழம்' என்று ஞானத்தைச் சொல்வதற்கு நிரம்ப ஆதாரமுண்டு. 'சித்–ஏக–ரஸரூபிணி' என்று அவளை லலிதா ஸஹஸ்ரநாமம் பெயரிட்டழைக்கிறது. 'ஞானமென்ற ஒரே ரஸத்தின் வடிவினள்' எனப் பொருள். இயற்கையில் ரஸம் தேங்கி நிற்பது பழத்தில் தானே? ஆகையால் ஞான ரஸ ரூபிணியைப் 'பழநி' என்றார்.

அடுத்து 'மலை வரு பழ நிமலை' என்கிறாரே, அதற்குப் பொருள், 'இமய மலையில் வருகின்ற', அதாவது 'இமவான் குமாரியாக அவதரித்த பாம் பொருளான, தூயோன்' என்பது.

மலம் – அழுக்கு, நிமலம் – அழுக்கற்றது; தூய்மையானது; ஞானநூல்கள் கூறும் ஆணவ மல, கார்மிக மல, பேத மலங்களான மும்மலம் கடந்த துரியத் தூய்மை. அத் தூய்மையே தாய்மை வடிவு கொண்டால் 'நிமலை'.

சிவ–சக்தியருக்குக் குழந்தையாய் வந்தவனை மாயாலோகத் தோற்றத்திற்கும் முந்தையதான ஆதிக்கும் ஆதியாம் அநாதியான ஞானப் பழமாகச் சொல்கிறோமல்லவா? அவ்வநாதியே இக்குழந்தையாய் வந்ததென்றுதானே அர்த்தம்? அப்படியேதான் அப் 'பழ' – அதாவது மிகவும் பழமையான, நிமலையும் பர்வதகுமாரியாக அவதரித்த துண்டு எனக் காட்டவே 'மலை வரு பழ நிமலை' என்றிருக்கிறார்.

அப்பழமை பொருந்திய நிமல வடிவினள் 'தருகின்ற பழநி மலை முருக' – புரிகிறதல்லவா? கெட்டியினும் கெட்டியான மலை தந்த குமரியே கனிவினும் கனிந்த கனிப்பழநி ஆகிறாளென்றால் அப்பழநி தந்த நம் பழநியாண்டவன் எத்தனை கனிவானவனாக இருப்பான்?

'விசாகா' என்று அவனை அழைக்கிறார். விசாக நாமத்துக்கு வேடிக்கைபோல் (ஆரம்பித்துப் பொருள் பொதிந்த விளக்கம் காஞ்சி முனிவர் ஸ்ரீ மஹா பெரியவாள் தருவார்: "அப்பன் பேர் ஸ்தாணு – அப்படியென்றால் வெறும் மரக்கட்டை! அம்மாக்காரிக்கோ 'அபர்ணா' என்று ஒரு பேர். 'அபர்ணா' என்றால் இலையில்லாதது; அதாவது வெறும் மரக்கட்டைதான். பிள்ளையின் பேரைப் பார்த்தாலோ விசாகன். 'வி–சாக' என்றால் கிளை இல்லாதது. அதாவது, இதுவும் நடு மரக்கட்டைதான். இப்படியெல்லாம் பேர் இருப்பதற்கு என்ன உள்ளர்த்தம்? அந்த மூன்று பேருமே ஒரே வஸ்துதான்! பொதுவாக, 'ஈச்வரன் – ஸத்; அம்பாள்–சித், குமாரஸ்வாமி–ஆனந்தம்' என்று பிரிவினை பண்ணுவதுண்டு. 'ஸச்சிதாநந்தம்' என்று ஏகமாக ஒன்றை நம்முடைய அறிவால் புரிந்து கொள்ள முடியாததாலேயே இப்படிப் பிரித்துச் சொல்கிறது. 'ஒன்றும் தெரிந்து கொள்ளாமல்,

ஆனாலும் அடிப்படை உண்மையாக இருக்கிற 'ஸத்' ஈச்வரன்'. அதோடு தெரிந்த கொள்ளும் அறிவாகச் சேர்ந்து கொள்ளும் 'சித்' அம்பாள். அந்த இரண்டோடும் 'அநுபவிப்பது' என்பதாகச் சேர்ந்து கொள்ளும் 'ஆனந்த'மே சுப்ரமண்ய ஸ்வாமி' என்று சொல்வது. 'அறிவு இல்லாத வெறும் ஸத்'வைத்து மரக்கட்டை மாதிரி. அதற்கு சித் பிறக்கிறது மரத்தில் இலை உண்டாகிறாற் போல. அப்புறம் ஆனந்தம் உண்டாவது பழம் பழுக்கிற மாதிரி' என்று பொது அபிப்பிராயம். 'இதெல்லாம் சரியேயில்லை. மூன்றும் ஒன்று சேர்ந்த ஏகந்தான். முதலில் ஸத், அப்புறம் சித் அதற்கும் அப்புறம் ஆனந்தம் என்கிறதெல்லாம் தப்பு. அந்த ஸத்துக்குள்ளேயே பாக்கி இரண்டும் எப்போதுமே அடக்கம்தான்' என்ற பெரிய தத்வத்தைக் காட்டவே அம்பாள் அபர்ணா ஆனதும், சுப்ரம்மண்ய ஸ்வாமி விசாகன் ஆனதும்.

"இலையில்லாதவள் 'அபர்ணா' என்கிற மாதிரி பழமில்லாதவனை 'விபலன்' என்றுதானே சொல்லணும்? ஏன் 'விசாகன்' என்று கிளையில்லாதவனாகச் சொல்லியிருக்கிறது? – என்றால், 'விபலன்' என்றால் பயனற்றவன், 'யூஸ்லெஸ்' என்று அர்த்தமாகிவிடும்! அதனால்தான் பழங்கள் பழுத்துத் தொங்குகிற கிளையை வைத்து 'விசாகன்' என்றது. சாகை என்றால் கிளை".

வெறும் கட்டையான 'ஸத்'தில் தொடங்கி பழமான 'ஆனந்த'த்தில் முடிவதாக உலகம் சொல்வது தவறானது என்று காட்டத்தான் போலும், அருணகிரிப் பெருமான் பழமாம் பழநியில் தொடங்கி வி–சாக மரக்கட்டையில் முடித்திருக்கிறார்.

* * *

# மான் மகளும், தெய்வயானை மகளும்

- புலவர் மா.கி. இரமணன்

**கவிப்பிரசாதம்:**

'செனித்த புத்திரரிற் சிறியோன், மதித்த முத்தமிழிற் பெரியோன்' ; 'மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று, தேடி விளையாடி, அங்ஙனே நின்று, வாழு மயில் வீரன் ! செந்தில் வாழ்கின்ற பெருமாள் !'; 'கந்தர் அநுபூதி பெற்று, கந்தர் அநுபூதி சொன்ன, எந்தை அருணகிரி'க்கு அருளிய திறனே தனிவகை !

'அடியவர் இச்சையில் எவை எவை உற்றன, அவை தருவித்து அருளும் பெருமாள்'; 'வேண்டியபோது அடியர் வேண்டிய போகமது, வேண்ட, வெறாது தந்துதவும்' கந்தன், இப்பிறவியில் மட்டுமா? ஏழுபிறவியினும், அருணகிரிநாதர் தனது பக்தன் என மகிழ்ந்து, கவிப்ரவாகத்தைத் தந்து அருளினார். வேடிச்சி காவலன் வகுப்பில் இதனை "எழுமையும் எனைத் தனது கழல் பரவு பக்தன் என, இனிது கவி அப்படி பிரசாதித்த பாவலன்" எனப் பாடுகிறார்.

**தேவியர் இருவர்**

"இந்த இப்பிறவிக்கு யான் இரு மாதரை, சிந்தையாலும் தொடேன் என்ற செவ்வரம்", இராமன் சீதைக்கு வழங்கியது. இந்த ஏகபத்தினி விரதம் ஒருவகை நெறி.

அடுத்த கிருஷ்ணாவதாரத்தில், ராதை, ருக்மணியோடும், மற்றுள்ள கோபிகைகளோடும் ராசலீலை ஆடி, ஜீவான்மாக்கள், பிரேம பக்தி மூலம் பரமான்மாவை அடையும் தத்துவத்தைக் காட்டியது ஒருவகை.

இச்சா சக்தியாகிய வள்ளியும், கிரியா சக்தியாகிய தேவயானையும், ஞானசக்தியாகிய முருகனை அடைந்த அருள் பெற்றவகையே அற்புதம் நிறைந்ததாகும்.

சித்தி, புத்தியுடன் விநாயகரும், வள்ளி–தெய்வானையுடன் முருகனும், ஸ்ரீதேவி பூதேவியுடன் நாராயணனும், ராதா–ருக்மணியுடன் கண்ணனும் காட்சி தரும் கோலம், கண்ணுக்கு இனியதாகும் ! இதை ஊனக்கண்ணால் உணர இயலாது. உணர்வுக் கண்கொண்டு காண வேண்டும்.

**"தினை வன மானும், கனவன மானும்**
**செறிவுடன் மேவும் திருமார்பா"** **(திருத்தணி)**

தனிமயிலேறும் திருத்தணிப் பெருமானின் திருப்புகழில், மான்மகளும், தெய்வயானை மகளும் சேர்ந்த திருக்கோலத்தைக் காணலாம்.

கருணை பொங்கும் கயிலாயத்தில், பாலமுருகனின் லீலைகளைக் கேட்டுப் பரவசமுற்ற, திருமால் மகளிர் அமிர்தவல்லி, சுந்தரவல்லி இருவரும், குமரனைக் கணவனாய்ப் பெற விழைந்து தவமியற்றினர்.

அமிர்தவல்லி இந்திரன் மகளாய் வந்து, வெள்ளையானை ஐராவதம் வளர்க்க, தேவயானையை, தேவர் சிறைமீட்டதன் பரிசாகத்தர திருப்பரங்குன்றில் குமரன் ஏற்றார்.

சுந்தரவல்லி, பார்வதியின் தோழியான காஞ்சனை என்னும் தெய்வகன்னி மானாக வர, அவளுக்கு வள்ளியாம் மகளாக, வந்து குறவர் குலக்கொடியாய் வளர்ந்து, குமரனை காந்தர்வ மணம் கொள்கிறார்.

### தேவகுஞ்சரி பாகன்

வள்ளி, தெய்வானையைச் சேர்த்துப் பாடும்போது, முதலில் தெய்வானையையும் பிறகு வள்ளியையும் முறைமாறாமல் போற்றுகிறார் அருணகிரிநாதர்.

**"குஞ்சர வஞ்சியும், மான் மடந்தையும்**

**இன்ப மிகுந்திடவே அணைந்தருள்" (ஏரகம்)**

**"தெய்வ யானையங் குறமின் மணவாளா" (பழநி)**

நான்கு தந்தங்கள் உடைய வெள்ளை ஐராவத யானை தந்த மகள் தேவயானையைப் பல இடங்களில் போற்றிப் பாடுகிறார்.

**"கொம்பு நாலுடைய வெண் கம்பமால்**
**கிரி வருங் கொண்டல்" (1105)**

"தேவ குஞ்சரி பாகா நமோ நமோ" என்று பழனியில் போற்றி, தேவசேனை 'முத்தி (தரு) மாது' என, "முத்தித் தரு பத்தித் திருநகை அத்தி" என முருகன் தந்த முதல் வாக்காலும் "அமுதத் தெய்வானை திரு முத்திமாதின் மணவாளா" (764) என்ற திருமுட்டத்துத் திருப்புகழாலும் போற்றுகிறார்.

'அரிய கேவலி', அமுதவல்லியாக வந்த 'அமுத தெய்வானை', 'அமுதமாது', 'சுரர் வாழப் பிறந்த சுந்தரி', 'அண்டத் திருமயில்', 'தேவபூ', 'சொர்க்கக்கிளி', 'வேழமங்கை', 'சசிதருமயில்', 'மிகுத்த பண்பயில் குயில் மொழி. அழகிய கொடிச்சி', என்று போற்றப்படுகிறார். மேலும்

**"தெய்வ யானைக்கு இளைய வெள்ளையானைத் தலைவ**

**தெய்வ யானைக்கு இனிய பெருமாளே" (திருத்தணி)**

**"யானை அளவிற் றுவளும் ஆசைக்காரன்" (வேளைக்காரன் வகுப்பு)**

**"தத்தத்து அத்தி தத்தை தாத" (கந்தர் அலங்காரம் 54)**

என்றெல்லாம் போற்றினாலும், தெய்வானை சேர்க்கையை விட முருகாற்றுப்படை தமிழே இனித்தது என்கிறார்.

**"கைமாமயில் செவ்வி நற்கீரர்சொல் தித்தித்ததே" (க.அந்.51)**

தேவ குஞ்சரியைத் தொழுதால் நம் வறுமை தீரும், சொர்க்கபுரி தேடிவரும், பூதவேதாள வகுப்பு போற்றும் அவர் புகழை நாமும் பாடுவோம்.

**"அகரு மிருகமத களப பரிமள விகட முகபட கடின புளகித**

**அமிர்த பூதரி, அண்டர் செழுங்கொடி,**

**குமுதவாய் மயில் குஞ்சரி, மஞ்சரி**

**அக்கமொரு கோடிபெறு வஜ்ர பாணிக்குமரி**

**தக்க அமராவதி புரக்கும் ஆணை"**

## வள்ளி மணாளன்

"கற்றிடும் அடியவர் புந்தியில் உறைபவர்" கணபதி. ஆனால் கல்வியற்ற, கொலைபுரி வேடர் குலத்தோரைத் தானே விரும்பிச் சென்று வேடிச்சியை மணந்து, அவர்தம் குலத்தோரை அறிவூட்டி ஏற்பவர் கந்தர்.

**"வரிசிலை மலைக்குறவர் பரவிய புனத்த தணில்**
**மயிலென இருக்குமொரு வேடிச்சி காவலனே"**

**"அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும்**
**அறியென இமைப்பொழுதின் வாழ்வித்த வேதியனும்"**

– வேடிச்சி காவலன் வகுப்பு

கல்வியற்றவர் ஆனால் கள்ளமற்றவர், வேட்டையாடுவோர் ஆயினும் அன்பை நாடுவோர் குறவர். எனவேதான் வேடர்குல மாணிக்கங்களைத் தெய்வம், தேடி வந்து அருள் செய்கின்றன.

எம்பிரான் இராமன், வேடர்குலத் தலைவன் குகனைத் தம்பியாக ஏற்றார்.

சிவபிரான், 'வேடன் உமிழ் தருநீராடி', பன்றியின் ஊன் உண்டு கண்ணப்பனுக்கு அருளியதைப் பாடுகிறார் அருணகிரிநாதர்:

**"கூசாது வேடன் உமிழ்தரு நீராடி ஊனுணெனுமுரை**
**கூறாம னீய அவனுகர் தருசேடங்**
**கோதாம் எனாமல் அமுதுசெய் வேதாக மாதி முதல்தரு**
**கோலோக நாத குறமகள் பெருமாளே" (1210)**

இத்தகு வேடர்குல மாதை வேட்ட வள்ளி மணாளன் வேடர் யாவருக்கும் சொர்க்கம் தந்து ஆட்கொண்டார்.

**"வேடர்க்கு நீள் சொர்க்கம் வாழ்விக்க ஓர் வெற்பின்**
**மீதுற்ற பேதைக்கொர் மணவாளா" (1036)**

இச்சா சக்தியினால், நாம் காட்டும் பிரேமையால் ஞான சக்தியாம் முருகனைப் பெற முடியும். ஜீவான்மாவாகிய வள்ளி, பரமான்மாவின் மேல் கொண்ட அன்பால், அவனே தேடி வந்து ஆட்கொண்டான்.

## பிரியாத பேரருள் :

"வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே", "நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எப்போதும் கோலக் குறத்தியுடன் வருவான்" ஏன் வள்ளியிடம் மட்டும் அத்தனை அன்பு?

குறிஞ்சிக் கடவுள் குமரன். மலைவாழும் தெய்வம். தொல்காப்பிய இலக்கணம் முதல், பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய சங்க இலக்கியம் வரை தமிழ்த் தெய்வமாக முருகன், பழங்காலந் தொட்டே போற்றப்படுகிறான். பத்துப்பாட்டில் முதல் பாட்டே நக்கீரரின் திருமுருகாற்றுப்படை. எனவே பிரமம், பிரசாபத்யம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்ற எண் வகைத் திருமணங்களில் தமிழ் மணம் காதல் கொண்டு சேரும் காந்தர்வ மணம். இதையே வள்ளி நாடகம் மூலம் ஏற்கிறார். வெற்றியின் பரிசாகக் கிடைத்த தெய்வானை மணம் ஆசுர மணமாகும்.

வள்ளி எழில் ! சுந்தரக் குறப்பெண் சுந்தரவல்லி எழில் இதோ:

**"குயில்மொழிக் கயல்விழித் துகிரிதழ்ச் சிலைநுதற்**

**சசிமுகத் தினநகைக் கனகுழற் தனகிரி**

**கொடியிடைப் பிடிநடைக் குறமகள்" (672)**

'பச்சைக் கொச்சைக் குறவி' வடிவும், முக்கனி சக்கரை ஒத்த மொழியும் 'பீலியும் இலையும் உடுத்து' பரண் மீதிருந்து கவண் கல் எறிந்து வள்ளி பறவைகளை விரட்டுகிறாள்.

ஆசையெனும் கிளிகள், பக்தியெனும் தினையைப் பாழாக்காது, கந்தனெனும் மந்திரக் கவண் கல்லால் விரட்டுகிறாள்.

நாரதர் வழி வள்ளியன்பை யறிந்து, தானே வந்து தலையளித்து ஆட்கொள்ள வான் கருணையுடன் வருகிறான் முருகன்.

வள்ளிக்கு ஸ்பரிசதீட்சையும், உபதேசமும், தரிசனமும், தானே முன்வந்து தருகிறான் கந்தன்.

**"வேண்டும் அடியவருக்கு . . .**

**வேண்டும் அளவில் உதவும் பெருமாள்" (கழுகுமலை)**

வள்ளி உடுக்கத் தழை ஆடை தந்து, தினை குத்த யானை 'தந்த' உலக்கையும் தந்து பிரணவ உபதேசமும் செய்கிறார்.

வள்ளிக்கு அடிமையென சாசன ஓலை எழுதித்தர அதை வள்ளி காதோலையாக அணிந்து கொண்டாள். "குறமாதின் . . . குழையோலை" (1002) அது மட்டுமன்றி மேருமலையில் அடிமை சாசனம் எழுதி வைத்தார் (1199).

'வள்ளி சன்மார்க்கம்' எனும் ஒரு வழியையே அருணகிரி புதிதாகத் தோற்றுவித்து, வள்ளியிடம் உள்ள பிரேமை பக்தியால், அவள் பாதம் தொட்டு முருகன் வணங்குதலையும் பாடுகிறார்.

**"வடிவார் குறத்தி தன் பொன்னடிமீது நித்தம் உந்தன்**

**முடியானது உற்று உகந்து பணிவோனே" (ஏரகம்)**

'பாகுகனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணாளன், வள்ளி யிருந்த காட்டை, தாளம் இட்டு இருகையாலும் வணங்குகிறார். இதனால் இலஜ்ஜை இல்லையாம்.'

**"இலஜ்ஜையற்று, எழுபாரும் வெறுத்துசிரிப்ப" (1186)**

இத்தகு குணப்பெண் குறத்தியான மருமகளை மாமியாரும் மெச்சுகிறார்.

**"பார்வதியார்க்கும் இனித்த பெண் ஆகிய மான்மகள்" (789)**

யாவரும் போற்றிப் பாராட்டி வணங்கும் வள்ளி சன்மார்க்கமே, வடிவேலன் அருளைப் பெற ஏற்ற நன்மார்க்கமாகும்.

கல்வி, அநுஷ்டானம், சாஸ்திரம், சம்பிரதாயம் இவை போன்ற எல்லைகளைத் தாண்டி, பரிபூரண பிரேம பக்தி கொண்டு முயன்றால், ஞான சக்தியாக வேலவன் தேடி வந்து சகல செல்வ யோக மிக்க வாழ்வருள்வான். இது வள்ளி மார்க்கம். பூஜை, பஜனை முதலிய அனுஷ்டானங்களால் ஆறுமுகன் அருளைப் பெறுவது தெய்வானை மார்க்கம். "வல்லி மார் இருபுறமாக, வள்ளியூர் உறைபெருமாள்" அனுஷ்டான பக்தியையும், பிரேம பக்தியையும் ஏற்று அருள் செய்வார்.

# ஒருத்தன் அருளிய பெருத்த வசனம்

- திருப்புகழ் அடிமை எஸ். நடராஜன்

உலகமக்கள் 'ஏழுகடல் மணலை அளவிடின்' அதிகமான பிறவிகள் எடுத்து, நோய்களாலும், 'இடர் சங்கைகளாலும்' அவதிப்பட்டு, 'புவி மீதே எடாத சுமையே சுமந்து எணாத கலியால் மெலிந்து', 'கொள்ளித் தலையில் எறும்பது' போலக் குலைந்து போவதைக் கண்டு, பெரும் கழிவிரக்கத்தைக் கொண்ட நம் அருணை முனிவர், 'எவரும் யாதும் யானான' நிலையில் மக்களின் துன்பங்களையும் பாபச் சுமையையும் தன் மேல் ஏற்றிக் கொண்டு, கந்தப்பிரானிடம் 'விழி புனல் தேக்கிய'பாக்களைச் சமர்ப்பித்து. அருள் வேண்டுகிறார். இதன் காரணமாகவே, ஆன்றோர்கள் அவரை 'கருணைக்கு அருணகிரி' எனச் சிறப்பித்து அழைத்தனர்.

நம் குருநாதராகிய அருணகிரியாரின் ஒப்பில்லா 'நாணம் அகற்றிய கருணை' வேறொரு துறையிலும் வெளிப்படுகிறது. இதை அநேகர் கவனித்திருக்க மாட்டார்கள். 'வேத நன் முடிவாகிய' உபநிடதங்களில், மறை இருடிகள் தங்கள் தங்கள் அனுபவங்களை, 'உள்ளக் கண் நோக்கி அறிவூறும்' நிலையில் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த வசனங்கள் 'சொல்லொணாத ஆனந்த' மொழிகளாக அமைந்திருக்கின்றன. தெள்ளத் தெளிவாக இல்லை. உதாரணமாக, தைத்திரீய உபநிடதத்தில், பிரும்மானந்தத்தைப் பற்றிக் கூறும்போது, மனிதர்களின் ஆனந்தத்தைப் போல் நூறு மடங்கு தேவர்களின் ஆனந்தம், தேவர்களின் ஆனந்தத்தைப் போல் நூறு பங்கு பிதிருக்கள் ஆனந்தம் என்று வரிசையாகச் சொல்லிக் கொண்டு போய் முடிவில் பிரும்மானந்தத்தைக் கூறுகிறது. இந்த 'பரம சுக வீடு' எப்படி இருக்கும்? இதற்கு பதிலை, கீழ்க்கண்ட பிரசித்தமான வரிகளில் செப்பிப் போந்து விடுகிறது. "யதோ வாசோநிவர்தந்தே அப்ராப்ய மனஸாசஹ" – அதாவது, வாக்கால் வர்ணிக்க முடியாது மனதால் எண்ண இயலாது.

'மவுன உபதேச சம்பு' தக்ஷிணாமூர்த்தி கோலத்தில், கல்லாலின் கீழ் சனகாதி நால்வருக்கு ஞானபோதத்தை ஊட்டின உடன், அந்த தலை சிறந்த யோகிகள் பிரும்மானந்தமாகிய ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடைந்து, முக்தி அடைந்துவிட்டனர். தங்கள் அனுபவத்தை உலகினர்க்கு எடுத்து உரைத்தாகச் சரித்திரம் இல்லை.

குமரகுருநாதன். 'சிவனார் மனங்குளிர உபதேச மந்திரத்தை' உரைத்தபோது என்ன நிகழ்ந்தது? சச 'ஜதி தாண்டவத்தர், சடையிடை கங்கை வைத்த நம்பர்' உரைமாண்டு செயல்மாண்டு சித்தம் அவிழ்ந்து, என்றும் மோன நித்திரையில் சின்முத்தரையுடன் திகழ்கிறார். நம் போன்றவர்களுக்கு அணுகவும் முடியாது, புரிந்து கொள்ளவும் முடியாது.

அருணைத் தலத்தில் அற்புதம் நிகழ்கிறது. 'சுருதி மறைகள், இருநாலு திசையில் அதிபர், முனிவோர்கள், துகளில் இருடி எழுபேர்கள், சுடர் மூவர், பகுதி புருடர், நவநாதர், உடுவின் உலகோர்கள், மறையோர்கள், அரிய சமயம் ஒரு கோடி, அமரர் சரணர் சதகோடி, அரியும் அயனும் ஒருகோடி இவர் கூடி அறிய அறிய அறியாத' பிரம்மண்யப் பொருளான ஸ்கந்த மூர்த்தி, மானிட வடிவம் தாங்கி, அருணகிரியாரின் 'வெகுமாயை யிருள் வெந்தோட, மூல அழல் வீச, உபதேசமது தண் காதில் ஓடி' அருள் பாலிக்கிறார். தம்மை ஆட்கொண்ட கருணைத் தெய்வத்தைத் திருவகுப்பில் அடையாளம் காட்டுகிறார். அருணை வள்ளல் – ஆடக விசித்ரகன கோபுர முகப்பில் அருணாபுரியில் நிற்கும் அடையாளக்காரன்'.

தனக்குக் கிடைத்த உபதேசப் பெருமையை, வெளிப்படையாகக் கூறப்புகுகிறார் ஓசை முனிவர். ஆனால் முதலில், 'குருபர சம்ப்ரதாயமோடு ஏயு நெறி'யில் நின்று,

முன்னவர்களைப் போலத்தான் பேசுகிறார். 'சொல்லுகைக்கில்லையென்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும் எல்லை' என்பது தைத்திரீயத்தின் எதிரொலி தானே? குருபரன் கூறிய உபதேசத்தை எடுத்துக் கூற இயலவில்லையே என்று இரக்கப்படுவார். 'வள்ளிக்கோன் அன்று எனக்கு உபதேசித்தது ஒன்று உண்டு (ஆனால் அதை) கூறவற்றோ?'. நான் பெற்ற இன்பம் இந்த வையகம் பெற வேண்டும் என்ற அளவிலாக் கருணையுடன் முருகனிடமே வேண்டுவார் 'மனவாக்கும் செயலாலே அடைதற்கு அரிதாய், அரு உருவாகி ஒன்று போலே இருக்கும் பொருளை எவ்வாறு புகல்வதுவே?'

'கருணை வாரி, கருணை மேரு' என்றெல்லாம் அருணகிரியாரால் போற்றப்படும் குமரன், மனமிரங்கி 'பெருமையை வெளிபட மொழிவாயே' என்று ஆணை இடுகிறார். உடனே உதிக்கிறது. அருணகிரியின் உபநிடதம். இதுவே பெருத்த வசன வகுப்பு ஆகும். வடமொழியில் 'மஹா வாக்யம்' என்பதையே, அருணகிரியார் பெருத்த வசனம் என்று அழைக்கிறார். நான்கு வேதங்களிலும், அதன் அதன் சாரமாக ஒரு மஹா வாக்யம் அமைந்திருக்கிறது. ஆதி சங்கரர், தான் நிறுவிய நான்கு மடங்களுக்கு, ஓரோர் வாக்கியத்தை உபதேச கிரமமாக ஏற்பாடு செய்துள்ளார். ரிக் வேதத்திற்கு 'ப்ரக்ஞானம் பிரஹ்மம்' – யஜுர் வேதத்திற்கு 'அஹம் பிரஹ்மாஸ்மி' – சாமத்திற்கு 'தத்வமஸி' – அதர்வதத்திற்கு 'அயமாத்மா பிரஹ்ம'. இதைத் தவிர வேறு அநேக மஹா வாக்கியங்கள் உள்ளன. அறுமுகன் அருணகிரியாருக்கு உபதேசித்தது 'சும்மா இரு சொல்லற' என்ற பெருத்த வசனம். மஹா வாக்கியங்களின் உட்பொருளாக இருப்பவன் குஹப் பெருமான் என்ற ரகசியத்தை, ஆதி சங்கரர் தான் இயற்றிய 'ஷண்முக புஜங்கத்தில்', பறை சாற்றுகிறார்.

உட்பொருளாக இருப்பவனே வெளியில் வந்து, மானிட சட்டை தாங்கி ஞான மொழி பேசினால், உபதேசம் பெற்றவரின் அனுபவம் எப்படி இருக்கும்? 'அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே' என்று வியந்து கூறுகிறார் அருணகிரிபெம்மான். 'நான் என்பது அற்று, உயிரொடு ஊன் என்பதற்று, வெளி நாதம் பரப்பிரம ஒளி மீதே ஞானஞ் சுரப்ப மகிழ ஆநந்த சித்தியோடே நாளுங்களித்து' பல நாட்கள் இருந்திருப்பார் என்பதை ஊகிக்க முடிகிறது. மோன நிலை கலைந்து, வாய் திறந்து தன் அனுபவத்தை உலகிற்கு எடுத்துச் சொல்வதை, வகுப்பில் தானே குறிக்கிறார். 'மவுன முகுள நிகில கவிமாலை' இந்த மஹாவாக்ய வகுப்பைச் சற்று ஆராய்வோம்.

அருக்கன் உலவிய சகத்ரயமுமிசை அதிற்கொள் சுவையென அனைத்து நிறைவதும். எல்லா ஜீவராசிகளும் எல்லாக் காலத்திலும் நாடுவது இன்பம். ஐம்புல வேடர்களின் உந்துலால், புறக் கருவிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளின் மூலம் இன்பத்தைப் பெற முயற்சிக்கிறோம். ஆனால் இப்படிப் பெறும் சுகம் நிலையற்றது. முருகனின் 'ரகசியம் உற்ற அநுபூதி' மொழி கிட்டின உடன் மூன்று உலகங்களில் கிடைக்கும் எல்லா இன்பமும் தமதாகிவிட்டது என்கிறார். 'சொல்ல ஒணாதது இந்த ஆனந்தமே'.

அவஸ்தை பலவையும் அடக்கி அகிலமும் அவிச்சி பெற இனிதிருக்கு மவுனமே. அவஸ்தை என்றால்நிலை. சாதாரண மனிதன் மூன்று நிலைகளில் மாறி மாறி நிற்கிறான். விழிப்பு, கனவு, ஆழ்ந்த தூக்கம். யோகியர் தன் மயமாக நிற்பது துரீயம் "துரிய நிலையே கண்ட முத்தர்". இதற்கும் மேலானது துரீயாதீதம். இந்த ஐந்து அவஸ்தைகளையும் கடக்க வேண்டும் என்று அந்தாதியிலும் பேசுவார் – 'ஐஅவத்தை மன் யாக்கை சிதைவதன் முன், சேர்ப்பது மால் அயன் வாசவன் செப்பிய செப்பதத்தே'. அருணகிரியாருக்கு உபதேச மந்திரத்தின் விளைவாக, ஐந்து நிலைகளும் ஒடுங்கி, 'உரை அவிழ உணர்வவிழ உளமவிழ உயிர் அவிழ உளபடியை உணரும் அநுபூதி' நிலை எய்தப் பெற்றார். இதுவே ஞானத்தின் வரம்பாகிய மோனம்.

அசட்டு வெறுவழி வழக்கர் அறுவரும் அரற்றுவன பொருள் விகற்பம் ஒழிவதும், என் சமயம் உன் சமயம் என்று 'காதி மோதி வாதாடும்' சமயவாதிகளால் உண்மைப் பொருளைக் காண இயலாது என்பது அருணை முனிவரின் திடமான கொள்கை.– 'சமய பேதத்திற்கு அணு கொணா மெய்ப் பொருள்'. பெருத்த வசனத்தின் ஞான ஒளியின் முன் சமய சத்தரவு எனும் இருள் அழிந்து போகிறது.

அழுக்கு மலவிருள் முழுக்கின் உழல்வதை அடக்கி அவநெறி கடக்க விடுவதும். ஞான ஓடக்காரனாகிய (ஸவர்க லோக மீகாமன்) முருகன் தன் அடியார்களை, லோகாயத வாழ்க்கையாகிய பவ சாகரத்தைக் கடக்க உதவி புரிகிறான்.

எருக்கும் இதழியும் முழக்கம் இறை குரு எமக்கும் இறையவன் எனத் திகழுவதும். 'தந்தைக்கு முன்னம் தனி ஞானவாள் ஒன்று சாதித்தருள் கந்தஸ்வாமி', எனக்கும் அந்த உபதேச வாளை அருளினார் என்று பூரிப்புடன் புகல்கிறார். 'இரவு பகல் போன ஞான பரம சிவ யோக தீரம் என மொழியும், மோன உரையில் உபதேசவாள்' தானே இது ?

இரட்டை வினைகொடு திரட்டு மல உடல் இணக்கம் அற ஒரு கணக்கை அருள்வதும். புண்ணியம் மட்டுமே செய்தவர்கள் தேவ லோகம் புகுவார்கள். பாபம் மட்டும் செய்யும் துராத்மாக்களுக்கு நரகம். இரண்டும் கலந்து செய்தவர்களே மனிதனாகப் பிறக்கிறார்கள். அதனால்தான் மானிடப் பிறவிக்கு மிஸ்ரம் என்று பெயர். இதை ஒழிப்பது எப்படி ? அந்தாதியில் விடை காணலாம். பிரமனுக்குச் சவால் விடுகிறார்" திசாமுகனே ! தீட்டப்படா இனி உன்னால் என் சென்னி. ஏன் தெரியுமா ? 'படா இவனையே நினைகுவன்' – அழிவில்லாத முருக மூர்த்தியுடன் நான் கலந்துவிட்டதால், இனிமேல் என்னிடம் உனக்கு தலைலிபியை எழுதும் ஜோலி கிடையாது. குருபரனின் பெருத்த வசனத்தால் அருணகிரிநாதருக்கு 'கூகா என என் கிளை கூடி அழப்போகா' நிலை வாய்த்தது.

இருக்கு முதலிய சமஸ்த கலைகளும் இதற்கு இது எதிரென இணைக்க அரியதும் அபர ஞானமாகிய சாஸ்திர அறிவு, ஞான மார்க்கத்திற்கு வழி காட்டுமே ஒழிய, உபதேசத்தால் மட்டுமே பெறக்கூடிய ஞானபோதத்தைத் தராது. 'வாசித்துக் காணொணாதது', 'வேதத்தில் கேள்வி இலாதது' 'சிவகலை அலதினி உலக கலைகளும் அலம் அலம்'.

இறக்க எனதெதிர் நடக்கும் யமபடர் கடக்க விடுவதோர் இயற்கை அருள்வதும். சிவனை நிகர் பொதிய வரை முனிவன் அகத்தியருக்கு அருளிய 'சீல அகத்திய ஞான தேனமுதத்தை' தனக்குக் குமரன் அருளினான். தமராகி வைகும் இப்பேர்ப்பட்ட ஞான தபோதனரை யமபடர் என்ன செய்ய முடியும் ? திருப்புகழில் அழகாக உருக்கமாகப் பாடுகிறார். 'கரணம் மாய்த்து எனை மரண மாற்றிய கருணை வார்த்தை இருந்தவாறு என் ?' இந்தக் கருணை வார்த்தையே பெருத்த வசனம்.

நெருக்குவன உபநிடதத்தின் இறுதிகள் நிரப்பு கடையினில் இருப்பை உடையதும். வேதங்களின் முடிபு உபநிடதங்கள். அவை கண்ட முடிவு என்ன. சீவன் சிவஸ்வரூபம் என்பதே அது. இந்த அநுபவம், உள்ளுணர்ச்சியில் காணப் பெற்றால் அதுவே கைவல்யம். ஷண்முகனின் உபதேசப் பெருமையால், அருணகிரிக்கு இது சுலபமாகக் கிடைத்தது.

நெருப்பு வனம் வெளி மருத்து வனமென நிறைத்த நெறிமுறை கரக்கும் உருவமும். நம்மை பிரபஞ்சத்துடன் பிணைத்திருக்கும் கட்டில், முதன்மை இடம் பெற்றிருப்பவை பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வெளி ஆகும். ஆறுமுகனின் உபதேசம் பெற்றவுடன், அருணகிரியாருக்கு இந்த ஐம்புத விலங்கு அவிழ்ந்துவிட்டது. அலங்காரத்திலும் இதே கருத்தை பாடி இருக்கிறார்.

'தேனென்று பாகென்று உவமிக்கொணா மொழி தெய்வ வள்ளி
கோன் அன்றெனக்கு உபதேசித்ததொன்று உண்டு; கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன்று அசரீரியன்று சரீரியன்றே'

நினைப்பு நினைவது நினைப்பவனும் அறு நிலத்தில் நிலை பெற நிறுத்த உரியதும். மனதில் ஒரு பொருளைக் கருதும் போது, மூன்று தத்துவங்கள் செயல்படுகின்றன. கருதுபவன், கருத்து கருதும் தொழில் – இவை வடமொழியில் திரிபுடை எனப்படும். 'அறிவை அறியும் அறிவு' என்று சொல்லப்படும் சூழ்நிலை தியானத்தில் இம்மூன்றும் ஒன்றுபட்டு, 'மயிலாடும் சுத்த வெளி' யாகிய சிதாகாசம் வெளியாகும். இந்நிலையில் எது எஞ்சி நிற்கும்? 'செயல் ஒழித்து அனுபூதி மீமிசை திகழும் அற்புத மவுன நிர்க்குண சிவமயமே'. பகவத்பாதர் 'ஆத்மபோதம்' என்ற நூலில் இதைச் சித்தரித்து இருக்கிறார்.

"ஞாத்ரு ஞான ஞேய பேத; பரே நஆத்மனி வித்யதே
சிதானந்தைக ரூபத்வாத் ஆதிப்யதே ஸ்வயம் ஏவ தத்"

சவிகல்ப சமாதியில் திரிபுடை பேதம் காணப்படும். இதற்கு மேல் நிலையான நிர்விகல்ப சமாதியில் இப்பேதம் நசிந்து போய், ஜீவாத்மா பரப்பிரும்மத்தில் மூழ்கி இருக்கும். 'ஏக போகமாய் நீயும் நானுமாய் இறுகும் வகை பரம சுகம்' இதுவே.

நிலைத்த அடியவர் மலைத்தல் அதுகெட நிவிர்த்தியுற அநுபவிக்கு நி தியமும். 'சீவாத்தும ஞான ஊராட்சியதான ஓர் வாக்கை' கேட்டார் திருப்புகழில். அது கிடைத்தவுடன், உலக பசுபாச தொந்தமெல்லாம் அழிந்து, கனத்த பொக்கிஷம் போல் அநுபூதி நிலை வாய்த்தது. 'மத்த மலத்ரய மித்தைத் தவிர்த்தருள் சுத்த பவித்ர நிவர்த்தி அளிப்பவன் மலைமகள் குமாரன் அல்லவா?'

உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர உளத்தொடுரை செயல் ஒளித்து விடுவதும். 'உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்' முருகன் வாங்கிக் கொண்டு, பதிலாக தன் திருவருளாகிய அகண்ட சச்சிதானந்தக் கடலில் மூழ்கடிக்கிறான். 'அருமனம் ஒழிக்கும் அநுபூதிச் சுகோதயன்' இவன்தான் காண்.

ஒளிக்கும் ஒளியென வெளிக்கும் வெளியென உயிர்க்கும் உயிரென நிகழ்ச்சி தருவதும் பெருத்த வசனம் பெற்ற உடன், பேத அபேதங்களெல்லாம் மறைந்த, ஒரே அகண்டாகார ஜோதி தோன்றி தன்னையும் விழுங்கிவிட்டது என்று நூலை முடிக்கிறார் அருணை முனிவர். 'யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தற்பரமே'.

உரத்த தனிமயில் உகைத்து நிசிசரர் ஒளிக்க அமர்பொரு சமர்த்தன் அணிதழை உடுத்த குறமகள் மணக்கும் அறுமுகன் ஒருத்தன் அருளிய பெருத்த வசனமே. என்னை ஆட் கொண்டு 'கதித்த நித்திய சித்தி' எனக்கு அருளினவன் யார் தெரியுமா? விந்து தத்துவமாகிய சுத்த மாயை எனப்படும் மயிலை நடத்தி, என்னுடைய அக்ர சம்பத்துகளாகிய காமக்ரோதாதிகளாகிய அறுபகையை ஒழித்து, தன் அருள் சத்தியாகிய வள்ளி நாயகியுடன் எப்போதும் விளங்குகின்ற ஷண்முகனே அவன் என்று தன்னுடைய ஆன்மீக அநுபவத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டி முடிக்கிறார். நம் குருநாதராகிய 'கருணைக்கு அருணகிரி'. நாமும் இவ்வகுப்பைப் பொருள் உணர்ந்து தினந்தோறும் பாராயணம் செய்து, நமக்கும் அந்தப் பேரின்ப நிலை எய்த, அறுமுகனை இறைஞ்சுவோம்.

'சும்மா இருவென நீ சொல்லப் பொருள் ஒன்றும் அம்மா அறிந்திலமென்று அன்று உரைத்த – எம்மான் அருணகிரி நாதன் அநுபவம் நாயேற்குக் கருணைமொழி போருரா காட்டு'

# சுந்தர மந்திரம்

**திரு. பி. ஆர். குமார்**
(நிலைய இயக்குநர் : அகில் இந்திய வானொலி, சென்னை.)

பகவான் ஸ்ரீ ரமணர் திருவண்ணாமலையில் ஐம்பத்து நான்கு ஆண் டுகள் இருந்தார். இப்போதும் இருக்கிறார் ! பதினாலு வயதில் *1896* ஆம் ஆண்டு அங்கு வந்தார் அவர்.

"நான் எங்கே வருவது ? எங்கே போவது ? இருந்த இடத்திலேயே இருக்கிறேன் !" என்று பகவான் சொல்வார். "நான் இருக்கிறேன்" என்ற இடைவிடா உணர்வின் மூலம் ஆன்ம அறிவைப் பெற முடியும் என்று நிருபித்துக் காட்டிய ஒரே உலக ஞானி பகவான் ஸ்ரீ ரமணர்.

அண்மையில் ஒரு டி.வி. விளம்பரத்தைப் பார்த்தபோது அதை மேற்கூறிய செய்தியோடு பொருத்திப் பார்க்கத் தூண்டியது.

அது ஒரு கார்க் கம்பெனி கொடுத்த விளம்பரம். விளம்பர வாசகம் இதோ !

'சக்கரங்கள் என்பவை மனிதனின் கால்களின் விஸ்தரிப்புதான் !'

விளம்பர வாசகங்கள் சிந்திக்க வைத்தன.

பல மாதங்கள், ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள், கப்பலில் பயணம் செய்து, வெளிநாட்டினர் பலர் பகவானைத் தரிசிக்கத் திருவண்ணாமலை வந்தார்கள். நம் இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் வந்து பகவானைத் தரிசனம் செய்தார்கள். எல்லோரும் வந்தார்கள் ! பகவான் எங்குமே போகவில்லை !

சக்கரம் சுழன்று சுழன்று எல்லோரையும் பகவானிடம் கொண்டு சேர்த்தது ! பகவான் இருந்த இடத்தில் தான் இருந்தார் !

இப்போது நடந்தது இது ! அதாவது சென்ற நூறு ஆண்டுகளில் !

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் என்ன நடந்தது ? மனிதர்கள் நடந்து கொண்டே இருந்தார்கள் ! நூற்றுக்கணக்கான மைல்கள் (அப்போது மைல்தான் !) நடந்தார்கள் ! நடக்க முடியாத போது குதிரை, யானை மீதேறிப் பயணம் செய்தார்கள் ! மன்னர்கள் மட்டுமே தேர்ப் பவனி வர முடிந்தது !

மைல் கணக்கில் பலர் நடந்து சென்றார்கள் ! அவர்களில் ஒரு சிலர் தாங்கள் சென்ற ஊர்களிலெல்லாம் தாங்கள் அந்த அந்த ஊருக்குச் சென்றதற்கான சான்றை விட்டுச் சென்றிருக்கிறார்கள் ! அவர்கள் யார் என்று கேட்கிறீர்களா ?

அவர்கள் தான் நம்முடைய நாயன்மார்களும் ஆழ்வார்களும் ! இவர்களின் நம் கருத்தைக் கவர்பவர் "வன் தொண்டர்" "தம்பிரான் தோழர்" என்றழைக்கப்பட்ட சுந்தரர்தான் ! ஏனென்றால் இவர் வாழ்ந்ததே பதினெட்டு ஆண்டுகள் தான் ! இச் செய்திகள், சுந்தரப் பெருமாள் கோயில் 'சைவத் தமிழ் மணி' வித்துவான் திரு. மா. சிவகுருநாதப் பிள்ளை எழுதி வெளியிட்டுள்ள 'தேவார மூவர் தல யாத்திரை – ஓர் ஆய்வு' என்ற நூலிலிருந்து கிடைக்கின்றன.

செய்திகள் அற்புதமாக உள்ளன.

பதினெட்டு ஆண்டுகளே தம் வாழ்நாளாகக் கொண்ட சுந்தரர் தம் இறுதி இரண்டாண்டுகளில் *(16–18)* பதினொரு தல யாத்திரைப் பயணங்களைச் செய்துள்ளார்.

திருவொற்றியூரில் சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சத்தியத்தினின்றும் வழுவி அந்நகரை விட்டு நீங்கியபொழுது தம் இரு கண்களை இழந்தார். அவ்வாறு தம் இரு கண்களை இழந்தும் யாத்திரையைத் தொடர்ந்த சுந்தரருக்குத் திருவெண்பாக்கத்தில் இறைவன் ஊன்றுகோல் அளித்ததிலிருந்து, இவர் திருவொற்றியூரிலிருந்து காஞ்சிபுரம் வழியாகத் திருவாரூருக்குக் கால்நடைப் பயணமாக யாத்திரை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. இவ்வாறு நெடுந்தொலைவு நடந்து செல்வதற்கேற்ற உடல் உரம் மிக்கவர் இவர் என்பதை, "மல்லின் மல்கு திரள் தோள் ஊரன்" "மலை மலிந்த தோள் ஊரன்" என்னும் இவருடைய தேவாரத் தொடர்கள் உணர்த்துகின்றன.

இவர் தமது எட்டு ஒன்பதாவது யாத்திரையின்போது குதிரை மீதமர்ந்து சென்றிருக்கிறார்.

"தானெனை முன் படைத்தான்" என்னும் தன்னேரிலாப் பதிகம் பாடியவாறு சேரமான் பெருமாள் குதிரையில் பின்தொடர, வெள்ளை யானை மீதமர்ந்து சுந்தரர் மேற்கொண்ட பதினோராவது யாத்திரை திருவஞ்சைக் களத்தில் இருந்து தொடங்கி திருக்கயிலையுடன் நிறைவடைகின்றது.

இவரது யாத்திரைகள் பெரும்பாலும் திருவாரூரை மையமாகக் கொண்டு அமையப் பெற்றவையாகும். அதற்குக் காரணம், ஆரூர் பெருமான் பேரில் இவர் கொண்ட பேரன்பும், பரவையார் மாட்டுக் கொண்ட தனிப் பெரும் காதலுமேயாகும். திருவொற்றியூரினின்றும் காஞ்சியினின்றும், திருவஞ்சைக் களத்தினின்றும், இவர் ஆரூர் தியாகப் பெருமானை நினைந்து பாடிய பதிகங்கள் இவரது ஆரூர்ப் பெருமான் அன்பை உணர்த்துகின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார், கொடுங்கோளூர் என்ற திருவஞ்சைக் களத்தில் சேரன் அரண்மனையில் சில நாள் தங்கியிருந்தார். ராஜ உபசாரம் கிடைத்தது அவருக்கு. பொழுது போனதே தெரியவில்லை. சேரனின் நட்பு வெள்ளத்தில் அமிழ்ந்த சுந்தரர் ஒரு நாள் திடீரென்று திருவாரூரை நினைத்தார். "ஐயையோ, ஆரூரானை மறந்து விட்டேனே" என்று வருத்தப்பட்டு

**"பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்**
**போகமும் திருவும் புணர்ப்பானைப்**
**பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்**
**பிழையெலாம் தவிரப் பணிப்பானை**
**இன்ன தன்மையன் என்றறியவொண்ணா**
**எம்மானை எளிவந்த பிரானை**
**அன்னம் வைகும் வயற் பழனத்தணி**
**ஆரூரானை மறக்கலுமாமே"**

என்று பதிகம் பாடினார். (சமீபத்தில் ஒரு பட்டி மன்றத்தில் கேட்டது! இறைவன் கூறுகின்றானாம். "சுந்தரர் பொன்னைப் பாடுவார்! சம்பந்தர் தன்னைப் பாடுவார்! திருநாவுக்கரசர் என்னைப் பாடுவார்")

சேரமானிடம் விடை பெற்றார் சுந்தரர். பொன்னையும் மணியையும் பரிசுப் பொருள்களையும் ஒரு பெரிய மூட்டையாகக் கட்டி வேலையாளின் தலையில் வைத்து, அவரோடு அனுப்பினான் சேரன்.

இந்த வேலையாளும் மற்றும் பரிசனங்களும் புடைசூழ, சுந்தரர் சேரமானிடம் விடைபெற்றுக் கொண்டு காடும் மலையும் தாண்டி, திருமுருகன் பூண்டி என்ற தலத்துக்கு வரும் வழியில் இரவைக் கழிக்க ஒரு சோலையில் தங்கினார்.

இந்தச் சமயம் பார்த்துத் தான் இறைவனும் ஒரு திருவிளையாட்டில் இறங்கினார். எப்போது பார்த்தாலும் சுந்தரர் தமக்கு வேண்டிய பொன்னையும் மணியையும் மற்றும் பொருள்களையும் தமது தோழர் தம்பிரானிடம் கேட்டு வாங்குவார். இப்போது புதிதாக ஒரு சேரமான், தோழராக வந்தது, தம்பிரானுக்குப் பிடிக்கவில்லை. தமது பூத கணங்களை ஏவிவிட்டார். அவை வழிப்பறி செய்யும் வேடுவராக வந்து, சுந்தரரிடம் இருந்த எல்லாவற்றையும் அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டன.

சுந்தரருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. உடனே பக்கத்திலிருந்த திருமுருகன் பூண்டி ஈச்வரனிடம் சென்று முறையிட்டார்.

**"வில்லைக் காட்டி வெருட்டி**
**வேடுவர் விரவலாமை சொல்லிக்**
**கல்லினால் எறிந்திட்டும் மோதியும்**
**கூறை கொள்ளுமிடம்**
**முல்லைத்தாது மணம் கமழ் முருகன் பூ**
**எல்லை காப்ப தொன்றில்லையாகில் நீர்**
**எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே!"**

"நீர் இந்தக் காட்டில் உட்கார்ந்திருக்கீரே, என்ன பயன் ? எங்கு பார்த்தாலும் திருடரும் கொள்ளைக்காரரும் வேடரும் ! வழியிலே போகும் அப்பாவி மனிதரிடம் சூறையாடும் இந்தக் கொடிய வேடர் இருக்க, நீர் எதற்காக இருக்கிறீர் ?" என்று திட்ட ஆரம்பித்தார்.

உடனே திருமுருகன் பூண்டி இறைவன் மனமிரங்கி, வேடர் கவர்ந்த பொருள்களையெல்லாம் அன்றிரவில் தானே கோவில் வாசலில் கொண்டு வந்து குவித்துவிடச் செய்தார். சுந்தரரும் மகிழ்ச்சியடைந்தார்.

"நீங்கள் திருமுருகன் பூண்டி ஆலயத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வரவும் !" என்று பணித்தார். நண்பர், பெரம்பலூர் அருள்வாக்கு ஜோதிடர்சி அய்யாசாமி நாட்டார் அவர்கள். "அதுவும் ஒரு அமாவாசையன்று சென்று பாருங்கள் !" என்றார் அவர்.

திருப்பூரிலிருந்து எட்டு கி.மீ. வடமேற்கில் இருக்கிறது திருமுருகன் பூண்டி ஆலயம். இதிலிருந்து அவிநாசி மேலும் ஐந்து கிலோ மீட்டர் போக வேண்டும், கொங்கு நாட்டிலே வேடுவர் வசித்த காடாக ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். இந்தக் கோவில் மேற்குப் பார்த்த சந்நிதி. கோபுரம் இல்லை. உள்ளே போகப் போக பள்ளத்தில் இறங்கி மண்டபத்தை அடைய வேண்டும். மிகப் பழைய கோவில் என்ற காரணத்தாலும், இங்கு பழைய கல்வெட்டுச் சாசனங்களும் சிற்பங்களும் இருப்பதனாலும் அரசாங்கத்தின் "பாதுகாக்கப்பட்ட" சின்னமாகக் காவல் போட்டு வைத்திருக்கிறார்கள்.

அமாவாசையன்று கோவிலில் "திமு திமு" வென்ற கூட்டம். சுற்று வட்டார கிராம மக்கள் பலரும் வருகிறார்கள். குளித்து, ஸ்ரீ முருகநாதனை வழிபட்ட பிறகே வீட்டிற்குப் போய் அடுப்பு மூட்டி உலை வைப்பார்களாம். இவ்வாறு நாற்பது ஆண்டுகளாக வருவதாக ஒரு மூதாட்டி என்னிடம் தெரிவித்தார். "என்ன ? போன அமாவாசைக்கு வரவில்லையே ?" என்று ஒரு பெண்மணியிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். ஆலய சிவாசச்சாரியார், சிவாகம விசாரத கே. அர்த்தநாரி சிவம். "கோவிலோடு மிக வலுவான தொடர்பு வைத்திருக்கிறார்கள் பொதுமக்கள்" என்று குறிப்பிட்டார் திருப்பூர் ஸ்டேட் பாங்க் அதிகாரி டி.ஏ. முருகேசன். இவரும் இவரது மனைவியாரும், நேரம் கிடைக்கும் போதெல்லாம் இவ்வாலயத்திற்கு வந்து 'திருப்புகழ் முற்றோதல்' செய்கிறார்கள்.

இங்குள்ள மூலவரின் பெயர் முருகநாதர். முருகன் வழிபட்டதால் முருகன் பூண்டி என்ற பெயர் வந்ததாகச் சொல்வர்.

சந்நிதிக்கு வலப்புறத்தில் ஆறுமுகப் பெருமான் கோவில் கொண்டிருக்கிறார். அற்புதமான கோலம் வள்ளி தெய்வயானையுடன் ஒளி காட்டும் போது, பின்னால் உள்ள மூன்று முகங்கள் நிலைக் கண்ணாடியில் தெரிகின்றன !

**"அவசியமுன் வேண்டிப் பலகாறும்**

**அறிவினுணர்ந்தாண்டுக் கொரு நாளில்**

**தவசெபமுந் தீண்டிக் கனிவாகிச்**

**சரணமதும் பூண்டடற்கருள் வாயே**

**சவதமொடுந் தாண்டித் தகரூர்வாய்**

**சடுசமயங் காண்டடற் கரியானே**

**சிவகுமரன் பீண்டிற் பெயரானே**

**திருமுருகன் பூண்டிப் பெருமாளே"**

திருமுருகன் பூண்டியில் கோவில் கொண்டுள்ள ஆறுமுருகப் பெருமானைப் பற்றி அருணகிரிநாத சுவாமிகள் பாடிய ஒரே திருப்புகழ்தான் இது ! சென்னை திருவல்லிக்கேணி முருகன் திருவருட்சங்கத்தார், இத்திருப்புகழைச் சலவைக் கல்லில் பொறித்து, ஆலய வாயிற்படிக்கருகே பதித்துள்ளனர்.

ஆலயத்தின் வெளியேயும் உள்ளேயும் அமைந்துள்ள தீர்த்தங்களில் நீராடி மனத் தெளிவு பெறப் பலர் இங்கேயே தங்கியுள்ளனர். அவர்களுக்கென்று கோயிலில் இடவசதி செய்யப்பட்டுள்ளது. தெளிவு பெற்றவர்களுக்கு ஆலயத்தின் சார்பாகச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இங்கே வந்து நீராடிச் சென்றால் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.

திருமுருகன் பூண்டியில் ஒரு நடராஜர் சந்நிதியுண்டு. இந்த நடராஜரின் தாண்டவம் பிரம்ம தாண்டவம் என்று சொல்லப்படும். சுந்தரரின் திரவியத்தை அபகரித்த சம்பவம் "சுந்தரர் வேடுபறி" என்ற ஒரு திருவிழாவாக இங்கே வருடா வருடம் கொணடாடப்படுகிறத.

சுந்தரர் தம் வாழ்நாளான பதினெட்டு வருடத்திற்குள், சுமார் எண்பத்து நான்கு இடங்களுக்குச் சென்றிருக்கிறார். 'தம்பிரான் தோழராக' விளங்கி இறைவனை உரிமையுடன் கடிந்து பாடியிருக்கிறார். அப்பொழுதெல்லாம், நம்முள்ளேயே இறைவன் இருக்கிறான் என்று பகவான் ஸ்ரீரமணர் எடுத்துக்காட்டிய "சகஜநிலை" தோன்றியிருக்குமோ ? அதுதான் 'சுந்தர மந்திரமோ ?'

* * *

# திருப்புகழ் காட்டும் சமூக நீதியும் சமுதாய ஒற்றுமையும்

**- நீதிபதி திரு. சேது முருகபூபதி**

திருப்புகழ் என்றால் என்ன? எதைத் திருப்புகழ் என்கிறோம். புகழ் என்ற வார்த்தைக்கு உயிரின் நிறம் என்று பொருள். நிறம் என்ற சொல்லுக்கு சரீரம் விடும் ஒளி என்று பொருள், உயிரின் நிறத்தைப் பற்றிக் கூறும் உயிர் உய்வியல் இலக்கியங்கள் அத்தனையுமே திருப்புகழ்தான். இப்படித் தமிழ் தோன்றிய காலத்தில் இருந்து அருணகிரிநாதர் தமிழ் எழுதிய காலம் வரை ஆன்ம உய்விலக்கியங்கள் தமிழில் எழுதப்பட்டு இருந்தாலும், திருப்புகழ் தனக்கென்ற ஒரு தனிமுறையையும் இசை இலக்கியச் சிறப்பையும் கொண்ட சமூக நீதியும், ஆன்ம உய்வும், தமிழின் சிறப்பு, தமிழகத்தின் இயற்கை வனப்பு போன்றவைகளை மிக அழகாகப் பேசும் ஒரு சந்தக் கவி நூல்.

திருப்புகழ் என்ற சந்தவடிவான நூற்றாண்டில் நம் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலையில் பிறந்த அருணகிரிநாதர் என்ற தமிழனால் எழுதப்பட்ட ஆன்ம உய்விலக்கியமாகும். தமிழகம் தமிழனால் ஆளப்படாத நேரத்தில் பிறந்த ஆன்மீக நூல் திருப்புகழ். தமிழன் அரசியல் அடிமையாய் இருந்த நேரத்தில் பிறந்த நூல் திருப்புகழ். திருப்புகழைப் படித்தால் மனித இனம் எங்கே உள்ளது, உண்மை எங்கே உள்ளது, என்பது புரியும். உண்மைக்கும் நமக்கும் உள்ள இடைவெளி தெரியும். இப்படித் தோன்றிய இடைவெளியை மேவி உள்ளது எது என்பது தெரியும். இப்படி இடைவெளி தோன்றக் காரணமாய் இருந்தது எது என்பது தெரியும். இப்படி இழந்தவைகளில் முக்கியமாக இந்த இனம் சமூக நீதியை இழந்துவிட்டது தெரியும்.

சமூக நீதி என்றால் என்ன? சமூகம் என்ற வட சொல்லுக்கு கூடி வாழ்தல் அல்லது கூட்டம் என்று பொருள்படும், நீதி என்ற வட சொல்லுக்கு நேர்மை அல்லது மனஉறுதி அல்லது கற்பு எனப்பொருள்படும். இந்த தலைப்பிற்கு கற்பு என்பது பொருந்தும். கூடிவாழும் வாழ்க்கைக்கு கற்பு மிகவும் அவசியம்.

இந்த கற்பு என்ற மன உறுதி உண்மையையும், ஒழுக்கத்தையும் அடியொற்றி இருக்க வேண்டும் ஒழுக்கம் சிதைந்தால் எல்லாமே சிதைந்துவிடும்.

இப்படி சமூகத்தில் ஏன் ஒழுக்கம் சிதைகிறது. எதனால் சிதைக்கப்படுகிறது சிதைக்கப்பட்டதனால் மனிதனாய் பிறந்த நீ எதை எதையெல்லாம் இழக்கிறாய் என்பதை படம் பிடித்து காட்டுவது திருப்புகழ்.

எதனால் ஒழுக்கம் சிதைகிறது. உன்னையார் என்பதை நீ மறந்துவிட்டாய். மறந்ததினால் தொடர்பு என்ற ஞானம் துண்டிக்கப்பட்ட நிலையில் அறிவு முழுமையாக வேலை செய்யாது. இந்தக் குறை உடைய அறிவு, தடுமாறுகிறது. இப்படி தடுமாற்றத்தி ல் இருக்கும்போது மனது உறுதியை இழக்கிறது. உறுதியை இழந்த மனமுடையவர்களில் உள்ளங்களில் சபலம் குடியேறும், இப்படி சபலம் குடியேறிய மனங்களை வெகு எளிதாக காமம் பற்றும். காமம் மனதை மேவினால், அறிவு மெலிவு உண்டாகும். மெலிந்த அறிவுக்கு கரப்பான நீ பகுத்தறியும் அறிவையும் இழப்பாய், செய்கையும் சிறுமையாக இருக்கும். பொய் சாக்கும், சம்பிரதாயமும், சடங்கு பேசியும், செய்யும் தொழில் அடிப்படையில் அறம் பேசி, உண்மையை விட்டு விலகி விட்டதனால் உயிரைவிட மேலான ஒழுக்கம் இழந்ததனால் உலுத்துப்போன சமுதாயத்தின் அங்கதனராய் வாழும் நிலைவரும்.

'ஒற்றுமை' என்றால் என்ன 'ஒன்றை' மையமாய் வைத்து இயங்கும் தன்மை. அப்படியானால் ஒன்று என்றால் என்ன? ஒன்று என்ற சொல்லுக்கு 'உண்மை நெறி' என பொருள்படும். இந்த உண்மை நெறிக்கு உதவியாய் வாழ்ந்தாயா? இப்பொழுது நீ யார்?

# திருப்புகழில் பிள்ளைத் தமிழ்

- திருமதி. மு. சுப்புலட்சுமி

## பிள்ளைத் தமிழ்

தலைவனையோ தலைவியையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்து, பத்துப் பருவங்களில் அமைத்துப் பாடும் சிற்றிலக்கிய வகையே பிள்ளைத் தமிழாகும். ஒவ்வொரு பருவத்திலும் குழந்தையின் இயல்புகளை அனுபவித்து அணுவணுவாய்க் காட்டும் சீரிய வகையிது.

**'சாற்றரிய காப்பு, தால், செங்கீரை, சப்பாணி**
**மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய**
**அம்புலியே, ஆய்ந்த சிறுபறையே, சிற்றிலே**
**பம்புசிறு தேரோடும் பத்து'**

என்று பருவங்களைச் சொல்லி இவ்வகையை விளக்குகிறது 'வெண்பாப்பாட்டியல்' என்னும் இலக்கணநூல்.

இது குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை இரண்டு திங்களுக்கு ஒரு பருவமாய்ப் பகுத்துக் கூறுவதாகும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ், வெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டாக இது அமையும். பெண்பாலுக்கு இறுதி மூன்று பருவங்களை நீக்கிவிட்டு, கழங்கு, நீராடல், ஊசல் என்று இடம்பெறும்.

பல்வேறு விதமாக முருகனைப் பார்க்கும் அருணகிரியார், பேராற்றலடன் கம்பீரமாய் நிற்குமிடங்களுக்கிடையில், குழந்தையாகவும் அவனைக் காணுகிறார். பாட்டுக் குழந்தையைத் தருவிக்கும் கவிஞனும் தாய்தானே ! அதனால்தான். உள்கிடக்கும் தாய்மைக் குணம் படைப்புக்கிடையில் எட்டிப் பார்க்கும் வேளையிலெல்லாம் மகவாய்க் கார்த்திகேயனைப் பாராட்டிச் சீராட்டி மகிழ்கிறார் அவர்.

இவ்வகையில், பிள்ளைத் தமிழ் இலக்கிய முறை அருணகிரியாரின் திருப்புகழில் வெளிவந்த இடங்களில் காணப் பெறுகிறது என்பதைக் கொணர்வதே இக்கட்டுரையில் நோக்கமாகும்.

## குழந்தைக் கந்தன்

முருகனைச் சிறியோனாக, அழகு வடிவத்தினனாக, மழலை மொழியினனாக என்று குழந்தைக் கந்தனாகப் பாடி மகிழ்ந்திருப்பதைப் பல பாடல்களில் காண முடிகிறது. உமை மைந்தனென்றும், சிவபெருமான் மகிழும் செல்வனென்றும், கணபதி கைபிடித்து நடை பயிலும் தம்பியென்றும் பலவாய்க் காட்டுகிறார் அருணகிரிநாதர்

**'தேவிம நோன்மணி ஆயிப ராபரை**
**தேன்மொழி யாள்தரு சிறியோனே'**

என்று தேவியின் மைந்தனை விளிக்கிறார்.

இதே போல -

**'புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்**
**கரர்க்குஞ்சங் கரர்க்கின்பம்**
**புதுக்குங்கங் கையடகுந்தஞ் அதனானாய்'**

என்கிறார். உலகைக் காக்கும் சங்கரனுக்கும் சங்கரிக்கும் பிள்ளை என்பதோடு சங்கரர்க்கு இன்பம் தரும் கங்கைக்கும் பிள்ளையென நுணுக்கமாகக் கூறுகிறார்.

இவ்விடத்தில்

**'கங்கைக்கும் நெடியவன் தங்கைக்கும் ஒருமகன்**
**கனிவாயின் முத்தம் அருளே'**

என்ற முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழின் வரிகள் ஒத்து வருவதைக் காட்டுவார் திருப்புகழ் உரையாசிரியர் திரு. செங்கல்வராயப் பிள்ளை. மேலுரைத்த திருப்புகழ் வரிகளின் பிள்ளைத் தமிழின் சாயலை இந்த ஒப்பீடு உணர்த்துகிறது.

தந்தைக்கே மந்திரம் சொன்னவனை, அகத்தியர்க்குத் தமிழ் உரைத்தவனை, கொஞ்சிப் பேசும் மழலை மொழியினனாகக் காணுகிறார் அருணகிரிநாதர்.

**'மழலை மொழி மதலை**
**பழநி மலையில் வரு பெருமாளே'**

என்று எளிமையாகவும் அழகாகவும் கூறுகிறார்.

மழலை பேசிக் குழந்தை நடக்கிறது. இளையோனின் கம்பீரநடையல்ல அது. தத்தித் தத்தி வரும் தளிர் நடையாம் அதனுடையது

**'சடையிறைவர் காண உமை மகிழ ஞான**
**தளர்நடையி டாமுன் வருவோனே'**

என்கிறார். தம் குழந்தை நடை பயில்வதைக் கண்டு மகிழும் தந்தையும் தாயும் எய்தும் மகிழ்வைத் தம் ஓரடியில் கூறிவிடுகிறார். அதிலும் முருகன் சாதாரணக் குழந்தையல்லன் – தெய்வக் குழந்தையாதலால் 'ஞானத் தளர் நடை' புரிகிறானாம்.

மழலை மொழியும், தளர் நடையும் கண்டபின், அவன் எழிலை நாம் காணும் பொருட்டு –

**'உதிக்குஞ்செங் கதிர்சிந்தும்**
**பரபைக் கொன் றுஞ்சிவக்குந்தண்**
**டுயர்க்குங்கிண் கிணிச் செம்பஞ்சடிசேராய்'**

என்று, செவ்விய பஞ்சு போன்று மென்மையான பாதத்தைக் காட்டுகிறார்.

உதிக்கும் செஞ்சூரியனின் ஒளிக்கு ஒப்பான சிவந்த தண்டையும், கிண்கிணியும், மெத்தென்று உதைத்தால் இதம் தரும் குழந்தையின் பாதத்தையும் பாடலில் அற்புதமாகக் கொணர்கிறார் அருணகிரியார்.

இதுவரையில் கண்டவை, திருப்புகழில் இடம்பெற்ற குழந்தையின் பொதுவியல்புகள். இனி, பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையின் நியதிப்படி அமைந்துள்ள சில பாடல்களைக் காணலாம்.

## தாலப் பருவம்

மகவைத் தாலாட்டிச் சீராட்டல் பெற்றோர்க்கு உகந்த ஒன்று. கண்ணே, மணியே, முத்தே என்று வாயாரக் கூறி மகிழ்வர் சாதாரணக் குழந்தையைப் பெற்றோர். நம் குமரனோ தந்தைக்கே குருவானவன். அதனால்தான், சிவபிரான் மனமகிழ்ந்து, 'என் குருவே !' என்று தாலாட்டுகிறார்.

**'சங்கரனு கந்தபரி வின்குருவெ னுஞ்சுருதி**

**தங்களின்ம கிழ்ந்துருகு மெங்கள் கோவே'**

என்கிறது பாடல்.

இந்தச் செய்தியை மகிழ்ந்து வேதங்கள் உரைப்பதாகக் கூறுகிறா ர் அருணகிரியார். அதிலும், சங்கரன் – உகந்து பரிவுடன் உரைப்பதால் அழகாக வடிக்கிறார்.

முத்தப் பருவம்

**'சங்கரி மனங்குழைந் துருகமுத்**

**தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்**

**சந்ததிச கந்தொழுஞ் சரவணப் பெருமாளே'**

இங்கும் தளர்நடையைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். தாயின் மனமுருக முத்தம் தர தளர்நடையில் வருகிறானாம் முருகன். எப்படி வருகிறான் என்பதை மேலும் அழகுற முந்தைய வரிகளில் காட்டுகிறார்.

திருவரை கிண்கிணி கிணின் கிணின் என்றொலிக்க, குண்டலங்கள் அசைந்து சிறிய குழைகளில் ஒளிவீச, சிறிய சதங்கைகள் சிற்றொலி தர, மணி தண்டைகள் கலின் கலின் என்றொலிக்க முத்தம் தர ஓடி வருகிறானாம் குமரன். காட்சியைக் கண்முன் கொணரும் ஆற்றலை அருணகிரிநாதருக்கு அளித்தவனே முருகன்தானே ! தானே காட்சியுமாகி சொல்லாட்சியுமாகி நிற்கிறான் அந்தக் குமரப்பிள்ளை.

## வருகைப் பருவம்

குழந்தையை வா . . . வா . . . என்றழைத்து வர வேண்டுவது இப்பருவம்.

**'வைத்தகொடி தானமயல் விட்டான**

**பத்திசெய ஏழையடி மைக்காக**

**வஜ்ரமயில் மீதிலினி லெப்போது வருவோயே'**

என்றழைக்கிறார். தம்முடைய பாடல்களில் பெரும்பாலானவற்றில், தீய பெண்களை நாடும் இழிவான செயலைச் சுட்டும் அருணகிரியார், முருகனை வருமாறு அழைக்குமிடத்திலும் அதனைக் குறிப்பிடுகிறார். 'இதுவரையில் இன்பமென்று நினைத்துழன்ற துன்ப வாழ்வை விடுத்து, நீயே அனைத்துமாகி நிற்குமிடத்து, நாடி வருவோனை ஆதரவாய்ப் பற்ற ஓடி வருவாய் முருகா' என்று அந்தக் குழந்தையாகிய பெருஞ் செல்வத்தின் வருகைக்காகப் பாடுகிறார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, குழந்தை சரவணன் தனக்கே தனக்காய்ப் பிள்ளையாய் இருக்க, வேண்டும் தந்தையின் ஆழ்மனத்து விருப்பத்தை ஒரு பாடலில் தன்னை மறந்து வெளிப்படுத்துகிறார் அருணகிரிநாதர். தந்தையாக வடிவுற்றாலும், பெற்ற

மனம் பித்தான கோலத்தில், தாய் மனதின் பரிவும், பாசமிகுதியும் இணை சேர கன்றைச் சேரத் துடிக்கும் பசு போலத்தவிக்கிறார் அவர்.

**'தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்**
**திரமாய ளித்த பொருளாகி**
**மகவாவி னுச்சி விழியாந நத்தில்**
**மலை நேர்பு யத்தி லுறவாடி**
**மடிமீத டுத்து விளையாடி நித்த**
**மணிவாயின் முத்தி தரவேணும்'**

தன் மனைவி வயிற்றில் இருந்து, பத்து மாதம் கழித்து, உலகில் தோன்றும் குழந்தையாக முருகன் வர, ஆசைப் பெருக்குடன் உச்சி மோந்து இன்பத்தில் திளைத்து, முகமோடு முகம் வைத்துக் கொஞ்சி, மலை போன்ற புயங்களில் உறவாடி, மடி மீது வைத்து விளையாட அழைக்கிறார். குழந்தையின் மணிவாய் முத்தம் பெற வேண்டும் எனப்பாடுகிறார்.

இது முத்தப் பருவத்திற்குப் பொருந்துமெனினும், ஒரு தந்தையின் பிணைப்பை, தாயின் அன்புத் தவிப்பை, அதற்கும் மேலான ஆழ் நெஞ்சப் பதைபதைப்பை, எதிர்பார்ப்பைக் கொட்டும் பாடலாக இது தனித்து ஒளிர்கிறது.

இதர பாடல்களில், குழந்தையாய்ப் பாவித்துப் பாடியிருப்பினும், இதுவரையில் ஒரு பகுதியே வெளிப்பட்ட பாசமனைத்தையும் அடக்க முடியாமல் கொட்டிவிட்ட உள்ள நெகிழ்ச்சியை இதுவொன்றே தெரிவித்துப் பறைசாற்றுகிறது.

தூய பக்தி நிலை எய்தி, இறையனுபவம் முழுமையாகக் கிடைக்கப் பெற்றால், எல்லாமாய் ஆகி நிற்பான் இறைவன். கவிதையால், எ ந்த நிலைக்கும் கவிஞன் கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றல் பெறுகிறான். அந்த ஆற்றலின் சுகம், தாய்மையனுபவத்தில்தான் முழுமையாக உணரப் பெறும். அத்தகு சிறப்பு வாய்ந்தது அந்த உறவு நிலை. குமரனின் பெருமைகளனைத்தையும் தலங்கள் வாயிலாக உரைத்திட்ட அருணகிரிநாதர், தம் ஆழ்மனத்து பக்தி எல்லை மீற, தாயாக, தந்தையாக மாறிவிடுகிறார். ஆம் ! பக்தி என்ற எல்லையெல்லாம் தகர்த்து, பிள்ளைத்தமிழில் குழந்தையாக எண்ணிக் கந்தனைப் பாடுகிறார். அந்தப் பேரனுபவத்தைப் படிப்போருக்கே மெய்சிலிர்க்கிறதெனில் படைத்தவரின் அனுபவத்தைச் சொல்லால் உணர்த்தல் இயலுமா ?

படித்துச் சிறத்தலினும் உணர்ந்து மகிழ்தல் எத்தனை இனிமையானது ! எத்தனை இதமானது !! மென்மையாகக் குமரன் நம் மனதுள் அமர்ந்து சிரிக்க, அருணகிரியாரின் திருப்புகழ் வாயில் கதவாய் அமைகிறது. பக்தி உயிரில் நுழைந்து எளிய திருப்புகழ் கதவை, அன்புச் சாவி கொண்டு திறந்திட்டால், குழந்தையாய்த் தணிகைநாதன் நம்மை அணைக்க ஓடோடி வருவான். இது பலரின் உணர்வு கண்ட உண்மை. மறுத்தலும் இயலுமோ !!

# திருப்புகழில் நரசிம்மாவதாரம்

- புலவர் வே. சஞ்சீவி எம்.ஏ

**அவதாரம்:**

அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய் நின்ற பெருங்கடவுள் உலகிலுள்ள உயிர்கள் யாவும் உய்ய வேண்டி உருவம் எடுத்து இறங்கி வருகின்றான். இதற்கு அவதாரம் என்று பெயர். அவதாரம் என்றால் இறங்குதல் என்று பொருள். மனங்கடந்து, பொறி கடந்து உலகம் கடந்து காலம் கடந்திருக்கின்ற பரம்பொருள் உலகுக்குள்ளே, காலத்துக்குள்ளே அகப்பட்டுள்ள ஆருயிர்களுக்கு அருள்பாலிக்க வேண்டி காலத்திற்கும் இடத்திற்கும் அகப்பட்டவனைப் போல உருவமும் பெயரும் கொண்டு அவதரிக்கின்றான். 'உலகில் அதர்மமும், பாவமும் மலிந்து தலைவிரித்தாடும்போது அவற்றை அழித்து தர்மத்தை நிலைநாட்ட நானே இவ்வுலகில் பிறப்பேன்' என்று கண்ணன் கீதையில் கூறியது போல உலகம் யாவையும் நிலைபெறச் செய்து காக்கும் தொழிலுடைய திருமால் பத்து அவதாரங்களை எடுக்கிறார். அவையாவன மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், கிருஷ்ணன், பலராமன், கல்கி எனப் பத்தாகும்.

**அருணகிரிநாதரும் திருமாலும் :**

அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ் என்னும் நூலின் பெருமைக்கு இன்றியமையாக் காரணம் இதன் நடுநிலைப் போக்கு ஆகும். முருகக் கடவுளால் தடுத்தாட்கொள்ளப் பெற்று முருகனையே வழிபடு கடவுளாகக் கொண்ட அருணகிரிநாதர் 'தெய்வம் இகழேல்' என்னும் ஔவைப் பிராட்டியின் நன் மொழியைப் பொன்னேபோல் போற்றுவம் என்பதற்கு இவரது திருமுறை ஒரு சான்று. நரகத்தில் வீழ்ந்து இடர்ப்படுபவர் யாவரெனப் பட்டியலிட்டுக் காட்டும்போது 'ஈசர் விஷ்ணுவை சேவை செய்வோர்தமை இகழ்வர்' எனக் குறிப்பிடுகிறார். மெய்ஞ்ஞானம் தந்த திருக்கை வேற் பெருமானைப் பாடும் பணியாகப் பெற்ற அருணகிரிநாதர் கணபதியையும், சிவபிரானையும், பார்வதியையும், திருமாலையும் பற்றிப் புகழ்ந்தும் அவர்தம் திருவிளையாடல்களையும் பலபடக் கூறியுள்ளார். குறிக்கோள் தெய்வமான முருகனை விளிக்கும்போதெல்லாம் 'மால் மருகோனே' என்று விளித்து திருமாலின் லீலைகள், பெயர் நிறம், பராக்ரமச் செயல்கள், பாற்கடல் கடைந்தது. கஜேந்திரமோக்ஷம், மச்சாவதாரம் வராகவதாரம், ஸ்ரீராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம் என்று பல பராக்ரமங்களையும், அவதார லீலைகளையும் கூறி அத்தகைய பெருமானுக்கு உகந்த மருகோனே எனத் தமது குருநாதராம் குமரனைப் போற்றிப் போற்றி மகிழ்வர் அருணைகிரியார். இவரது திருப்புகழ் வாயிலாக நரசிம்மாவதாரம் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

நரசிம்மாவதாரம் : மனிதர்களிடையே மண்டிக்கிடக்கும் யான், எனது என்னும் அகங்கார மமகார ஆணவத்தை அழித்திட வேண்டும். அப்போதுதான் காம வெகுளி மயக்கங்களினின்று விடுபட்டு "எனது யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும் இதய பாவனாதீதம் அருள"ப்பெறும் என்ற கருத்தை வலியுறுத்துவதுதான் நரசிம்மாவதாரம்.

ஓம் இரணியருபா நமோ எனச் சுக்ராச்சாரியாராம் ஆசான் எடுத்துக் கூற அவன் குலை நடுங்கத் தவநெறியில் சத்திய நெறியில் நின்ற பிரகலாதன் 'நமோநாராயணாய' எனக் கூறினதும், இரணியன் கோபம் கொண்டதும் உன் இறைவன் எதனில் உளன்? இத் தூணிலுளனோ? எனத் தூணை அறைந்ததும், அத்தூணினின்று திருமால் இரு உருவான

நரசிங்கமாக வெளித் தோன்றி, இரணியன் கதற அவன் மார்பை நகத்தால் கீறி உடலை இருபிளவாய் வகிர்ந்து உயிரையும் இரத்தத்தையும் உறிஞ்சித் துழாய் மாலையுடன் பசுங்குடரையும் தோள் மாலையாக அணிந்ததும் ஆகிய செய்திகள் திருப்புகழில் பல பாடல்களில் காணப்படுகின்றன. இவ்வரலாற்றினை 'இருகுழை' எனும் பொதுப்பாடலில்

**"அருமறை நூலோதும் வேதியன்**
**இரணியரூபா நமோ வென**
**அரிகரி நாராயணாவென ஒருபாலன்**
**அவனெவ னாதார மேதென**
**இதனுள னோவோது நீயென**
**அகிலமும் வாழ்வான நாயக னென வேகி**
**ஒரு கணை தூணோடு மோதிட**
**விசைகொடு தோள்போறு வாளரி**
**யுகிர் கொடு வாரா நிசாசர னுடல் பீறும்**
**உலகொரு தாளான மாமனும்**
**உமையொரு கூறான தாதையும்**
**உரைதரு தேவா சுராதிபர் பெருமாளே "**

எனத் திருமாலின் நரசிம்மாவதாரப் பராக்ரமரச் செயலைப் பாராட்டி மனவொடுக்கம் வரும்படிக் கற்பிக்கவல்ல முற்றி மதியையும் மாயையின் துர்க்குணங்களை நீக்க வல்லதும் வாக்குக்கு எட்டாததாய் அரும்புவிட்டு விளங்கும் ஞானோபதேசம் செய்தருள வேண்டும் என முருகனிடம் வேண்டுகிறார்.

நரசிம்மாவதாரச் சிறப்பினைத் திருச்செந்தூர்த் திருப்புகழில்

**"சீயமாய் உருவங்கொடு வந்து அசுரேசன் மார்பை**
**யிடந்து பசுங்குடர் சேர வாரியணிந்தநெடும்புயன் மருகோனே "** என்றும்,

பழனித் திருப்புகழில்

**"அரி ஒருமுறை யிரணியன் வலனுயிர்**
**நுங்குஞ் சிங்கம்"** என்றும்,

திருவண்ணாமலைத் திருப்புகழில்

**"நம்பர்ச் செம்பொற் பெயரசுரேசனை**
**நந்தக் கொந்திச் சொரிகுடல் சோர்வற**
**நந்திக் கம்பத்தெழு நரகேசரி"** என்றும்,

திருக்காளத்தியில்

**'சிங்கமதாகத் திரிந்த மால்'** என்றும்,

சிதம்பரம் பற்றிய திருப்புகழில்

**'சிரமோ டிரணியன் உடல் கிழிய ஒரு**
**பொழுதின் உகிர்கொடு அரியெனடமிடு'** என்றும்,

திருவேங்கட மாலைப் புகழும்போது

**'நசிதரு நிசிசர ருடகுடலிடல் செய்த**
**நரகரி ஒருதிரு மருகோனே'** என்றும்,

காசியைப் பற்றிய பாடலில்

**"ஒருதூண்மிசை அம்பற்கொடு வரியாயிரண்யா சுரன்**
**உடல் பீறி அண்டர்க்கருள் செய்த பெருமான்"** என்றும்,

நாகைத் திருப்புகழில்

**"நாரசிங்க வடிவங்கொடு பிரசண்டிரணியோனடுங்க"** என்றும்,

பல்வேறு தலங்களில் பன்னிருகையனைப் புகழ்ந்து பாடி பல்வேறு கருத்துக்களை வலியுறுத்துகின்றார். பொதுப்பாடல்கள், சேவல், மயில்விருத்தம், சீர்பாத, தேவேந்திர சங்க வகுப்பு ஆகிய பாடல்களிலும் நரசிம்மாவதாரச் சிறப்பினைப் புகழ்கிறார்.

இறைவனது இணைமலரடிகளைப் பரவுதல் நல்லதென்று மனத்தால் அறிந்து எஞ்ஞான்றும் திருக்கோயிலுக்குச் சென்று அருளைப் பெறவும் இன்பமும் நற்பண்பும் உற்சாகமும் சேர்ந்து நிரம்பும்படியான அருளைத் தர வேண்டும் எனவும் பழனி முருகனை "இரணியனை நுதியுகிரின் வகிரும் அட்டல் அரி வடிவின்" வாயிலாக வேண்டுகின்றார்.

'நககோடி கொண்டு அவுணர் நெஞ்சம் பிளந்தநாகேசரி'யின் புகழ்பாடி பரம்பொருளை அடையத்திருவருளை நினைத்து மனோலயம் பெறுவது எப்போது என வேண்டுகிறார்.

பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணமில்லாதவன் கருணை இல்லாதவன், முருகன் எழுந்தருளியிருக்கும் மலைகளைப் போற்றும் தன்மை இல்லாதவன், அழகு, குலம், நற்செயல், பக்தி பெருந்தன்மை இல்லாதவன், ஆணவ இருள்கொண்ட அருளிலாதான், பொருளில்லாதவன், நல்ல தன்மை இல்லாதவன், உணர்ச்சியில்லாதவன், நல்ல விழியில்லாதவன் ஆகியோர்க்கு நற்கதி உண்டோ? எனவினவி சிவபதம் அடையும் நாள் எந்நாள்? என 'மாதவன் இரணியன் உடல் இருபிளவாக வகிரும் மால்'வரலாற்றால் மானுடத்திற்கு அறிவிக்கின்றார்.

இப்படி எத்தனையோ கருத்துக்கள் : விரிக்கின்பெருகும். 'திசை திறந்து அண்டம் சீறச் சிரித்தது செங்கட் சீயம் பிளந்தது தூணும்; அங்கே பிறந்தது சீயம்' என்ற நரசிம்மாவதார வரலாற்றால் எங்கும் உளனாகி நின்றருள்புரியும் பன்னிருகையனைப் பொறையாம் அறிவால் அறிந்து, அகந்தையை அடியோடும் அரிந்து மாலோன் மருகனை, மேலான தேவனைப் பணியும் பதத்தைப் பெற்றுய்வோமாக !

# அருணகிரி நாதர் காலத்துப் பழக்க வழக்கங்கள்

- திருமதி லட்சுமிரமணன்

அது விஜயநகர பிரதிநிதிகள் ஆண்டகாலம். அரச சம்பிரதாயங்களும் ஆடம்பரமாக இருந்திருக்கின்றன. 'சக சம்ப' என்று துவங்கும் சிதம்பரம் திருப்புகழ் இதனை விளக்குகிறது.

**"சக சம் பக்குடைசூழ் பல பணி**
**தனிதம்பட்டுடையோ டிகல் முரசொலிவீணை**
**தவளந்தப்புடனே"** **(மதாணி பக்கம் 428)**

உலகெல்லாம் தன்னுடைய பெருமையை பறைசாற்றும் அரசு குடைகீழ் பல்லக்கின் மீது வீற்றிருந்து, உயர்ந்த பட்டுடை அணிந்து, முன்னால் வீர முரசு, வீணை, வெண்சங்கு, தப்பு (ஒரு வகை வாத்தியம்) டோல், தம்பட்டம் இத்யாதிகள் ஒலிக்க, பொன்தடிக்காரன் புடை சூழ, கும்பங்கள் வரவேற்க, கரகங்கள் எல்லாம் நடனமிட்டு வர என்று வெகு ஆடம்பரமாய் வரும் அரசரின் பவனியை இப்பாடல் விளக்குகிறது.

அதே சமயத்தில் ஆடம்பரம் ஏதும் இன்றி சில அரசர்கள் அடியார்களாய் வாழ்ந்திருக்கிறார்கள்.

"உதய தாம மார்பான ப்ரபுடதேவமாராஜ

னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே" என்கிறார் அருணகிரியார். (அதலசேடன் மதாணி பக்கம் 904) அவர் குறிப்பிடுவது இறையன்பு கொண்டு வாழ்ந்த நல்லரசன் ப்ரபுதேவராஜனை.

அதேபோல் வீறு கலிசை என்னுமிடத்தில் வாழ்ந்த சிறந்த அரசனை ப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

**"வீறு கலிசை வரு சேவகனதிதய**
**மேவுமொரு பெருமை உடையோனே"**

பெருமை நிறைந்த கலிசை என்ற ஊரில் வீற்றிருக்கும் சேவகராகிய மன்னரின் (அரசர்கள் தங்களை பிரஜைகளின் சேவகனாக எண்ணிக் கொண்டு அரசோச்சுவது சிறந்த அரசனின் லட்சணமாக அக்காலத்திலும் கருதப்பட்டதை இங்கு உணரலாம்) உள்ளக் கோயிலில் உறைகின்ற ஒப்பற்ற பெருமையை உடையவரே என்கிறார். (சீறலசடன் பக்கம் 139 மதாணி)

தங்கத்திற்குப் புண்களை ஆற்றக்கூடிய சக்தி உண்டாம். அக்காலத் தில் பிறந்த குழந்தைக்கு வசம்பு, கோரோஜனம், தங்கம் இவற்றை சந்தனக்கல்லில் தேய்த்து 'உரைமருந்து' என்று எடுத்துப்போட்டுவார்களாம். தங்கத்தட்டில் உணவருந்தினால் நோயற்று வாழலாம் என்பது நம்பிக்கை. பொன் நோய் நிவாரணி மட்டுமல்ல சுத்திகரிப்புத்தன்மை வாய்ந்தது. உணவில் பழுதிருந்தால் அதன் குற்றங்களை அகற்றவல்லது. அதனால் முழுக்க பொன்னால் செய்த தட்டை வாங்க வசதியற்றவர்கள், வெள்ளித் தட்டின் மத்தியில் கால்சவரனையாவது பதித்து வைத்துக் கொள்வார்களாம்.

"எனக்குச் சற்றுனக்குச் சற்றென" எனும் பாடலில்

"பொற்றட் டிடிக்கை" என்று அருணகிரியார் இதைக் குறிப்பிடுகிறார். (மதாணி பக்கம் 278)

ஒருவனிடம் ஏதாவது பொருள் வேண்டும்போது அவருடைய மூக்கைத் தொட்டுத் தடவிக் கேட்பது அக்கால வழக்கமாம் "அச்சாயிறுக்காணி" என்று துவங்கும் ஆண்டார் குப்பம் பாடலில் (தச்சூர்) இது வெளிப்படுகிறது.

**"அத்தா னெனக்காசை கூட்டித் தயங்க**

**வைத்தா யெனப்பேசி மூக்கைச் சொறிந்து"** **(மதாணி பக்கம் 625)**

எழுத்தை ஏட்டில் பதியவைப்பதற்கு இன்று பல ரக பேனாக்கள் வந்துவிட்டன. மைபோட்டு நிரப்பி எழுதும் பேனாக்களை, 'பால்பாயின்ட்' எனப்படும் இன்ஸ்டன்ட் பேனாக்கள் அகற்றி இடம்பிடித்துக் கொண்டுவிட்டன. அக்காலத்தில் புலவர்கள் தந்தத்தால் ஆன எழுத்தாணியை உபயோகப்படுத்துவார்களாம். 'உரைக்காரிகை' என்ற திருவானைக்கா பாட்டில் 'இபக் கோடெழுத்தாணியைத்தேடு' என்று வருகிறது. 'இபம்' என்பது யானையைக் குறிக்கும் 'கோடு' அதன் தந்தம் (மதாணி பக்கம் 303)

அக்காலத்தில் சீர்காழியில் எழுந்தருளியுள்ள சட்டநாதருக்கு புனுகு சாத்துவார்களாம். புனுகு என்பது ஒரு உயர்ந்த ரக பூனையின் மலமாம். அதனால் ஊர் முழுக்க அதன் நறுமணம் பரவி நிற்குமாம். 'எழுகு நிறை நாபி' என்கிற பாடலில் (மதாணி ப. 467) "புழுகொழுகு காணி கவுணியரில் ஞான புனிதனென ஏடு தமிழாலே" என்று குறிப்பிடப்படுவது இந்த பழக்கத்தைதான். புனிதன் என்று சிறப்பிக்கப்படுவது ஞானசம்பந்தர்.

கார்த்திகைப் பண்டிகை அக்காலத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாம். இது 'பழிப்பர்' என்று துவங்கும் பாடலிலிருந்து புரிகிறது. கார்த்திகைப் பண்டிகையை முன்னிட்டு 'சொக்கப்பனை' கொளுத்த வீடு தோறும் சென்று பணம் வசூலிப்பார்கள் போலும். "கார்த்திகை வருதென வுறு பொருள் பறிப்பர்" என்கிற வரியில் இது தெளிவாகிறது.

நிலவு தன்மையையும் மகிழ்ச்சியையும் அளிக்கவல்லது. அதிலும் முழுநிலவு அழகானது கவிஞர்களின் கற்பனையைத் தூண்டுவது. இதே நிலவும் பௌர்ணமியும் அக்காலத்திலும் மக்கள் மனத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். பௌர்ணமியன்று ஆயர்கள் குழல் வாசிப்பார்களாம். 'முதிருமார' என்று துவங்கும் கதிர்காமத் திருப்புகழில்

**"முழுகியேறி மேலெறிக்கு நிலவாலே,**

**வெதிரிலாயர் வாயில் வைத்து மதுரராக நீடிசைக்கும்"**

என்று வர்ணிக்கிறார் அருணகிரியார்.

நீதி ஸ்தலத்துக்குச் சென்று பெண்கள் ஜீவனாம்சம் கேட்பதும் அந்தக் காலத்திலேயே இருந்த பழக்கம் என்று புரிகிறது. 'அனகனம் பொன்' என்ற பாட்டில் "முனிந்து மன்றங்கண்டுந்தண்டும் பெண்களாலே" என்கிற வரி இதை உணர்த்துகிறது.

இறப்பு என்பது இயற்கை வைத்த நியதிகளில் ஒன்று. பிறந்தவர்கள் எல்லாம் இறந்தேயாக வேண்டும். துவக்கமுள்ள அனைத்திற்கும் முடிவு நிச்சயம். உலகில் எதுவுமே நிரந்தரமானதல்ல. இதை எடுத்துக்கூறி ஆறுதல் சொல்லுவது மக்கள் வழக்கம். இறந்தவர் வீட்டுக்குப் போய் இரங்கல் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்டு சோகத்துக்குள்ளான நண்பரை மற்றவர் பிடித்துக் கொண்டு அழுது இரங்கல் தெரிவிப்பார்களாம். கோடைநகர் திருப்புகழில் "தோள் தப்பாமல் துற்று அழுவாரும்" என்கிற வரி இதை விளக்குகிறது.

# "வேல் மகிமை"

- திருமதி லட்சுமி ராஜரத்னம்

ஆதி மனிதனின் படைப்புக்களில் எல்லாம் அனாதியானதாக மூன்று கண்டுபிடிப்புக்களை அறிஞர்கள் சொல்லுவார்கள். உயிர் வாழ உணவு வேண்டும், குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும். நீரையும், அதிலிருந்து உப்பையும் கண்டு பிடித்தது முதலாவது.

இருந்த இடத்திலிருந்து குண்டு சட்டி ஓட்ட முடியாது என்பது போல், தன்னுடைய அசைவுகளுக்கு அவசியமான சக்கரத்தையும், அதன் மூலம் வாகன இயந்திரப் பிரயோகத்திற்கு வழி வகுத்தது இரண்டாவது.

மூன்றாவது—கற்கால மனிதன் கல்லை ஆயுதமாக்கி, அதில் பரிணாம வளர்ச்சியைப் புகுத்தி, அணு ஆயுத உற்பத்தி மூலம் மீண்டும் கற்காலத்திற்கே போய் விடுவோமோ என்று அஞ்சும்படி செய்கிறானே – இது மூன்றாவது.

கற்பனையை எட்ட விட்டு. விசாலப்படுத்தி, தான் வணங்கும் தெய்வங்களையும், ஆயுதங்களுடன் ஒன்றறக் கலக்கச் செய்து அழகு பார்த்தான் – இது மனிதனின் சிறப்பு.

திருமால் சக்ரதாரியானார்; சிவனுக்கு திரிசூலம்; இராமனுக்கு வில்; பரசுராமனுக்குக் கோடாலி; பலராமனுக்குக் கலப்பை. இவ்வகையில் விசித்திரமானதும், வினோதமானதுமாக அமைந்திருப்பது முருகனின் கை வேல். இந்த வேலாயுதம் அவனுக்கு அன்னை பார்வதி தேவி அளித்தது. "வேலாயுதத்திற்கு மேலாயுதம் கிடையாது. வேலை வணங்குவதே எமக்கு வேலை"

"வேலிருக்க பயமேன் ? வேலிருக்க வினை அகலும்" என்பர் பெரியோர்கள்.

அறிவை அசர வைக்கும் சுரபானம் அருந்தும் அசுரருடன் போரிடப் போகும் முருகக் குழந்தையை "வாழி, வாழி" என்று வாழ்த்தி வேலைக் கொடுக்கிறாளாம் அன்னை சக்தி.

**"பண்டு சுராபான சூரனோடெதிர் போர்கண்**
**டெம்புதல்வா வாழி வாழியெ**
**னும்படி வீறான வேல்தர**
**என்று முளானேம நோகர வயலூரா"**

முருகனுக்கு அன்னை வேல் கொடுத்த இடம் வயலூர். இன்னும் அதன் தடய ஆதாரங்களை அங்கு காணலாம். இதையே கல்லாடம் என்ற பழைய நூல் சொல்கிறது.

சூரனை வதைக்கத் தேவி முருகருக்கு வேல் கொடுத்ததை.

**"அழியாய் பேரளி உமைக் கண்ணின்று**
**தற்பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்த**
**அமையா வென்றி அரக்க நெடுவேலோய்"**

திருமுருகாற்றுப் படையின் பாராயணப் பாடல்களும் முருகனின் வேலைப் பற்றிச் சொல்லுகின்றன.

**குன்றமெறிந்ததும் குன்றப் போர் புரிந்ததும்**
**இன்றெ்ன்னைக் கைவிடா நிற்பதுவும்**

**கற்பொதும்பிற் காத்ததுவும்**

**மெய் விடா வீரன் கைவேல் - என்று**

திருமுருகாற்றுப் படை கூறுகிறது.

வேலின் திருவருளை கண்கூடாகக் கண்டவர் நக்கீரர் பெருமான். அரக்கி அடைத்து வைத்தவர்களை விடுவிக்க நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப்படை பாடினார். மலையைப் பிளந்து அவர்களை விடுவித்தது முருகப்பெருமானின் கைவேல்.

வேல் வகுப்பில் அருணகிரி நாதபெருமான்

**''பழுத்தமுது தமிழர் பலகை யிருக்கு மொரு**

**கலிப்புலவன் இசைக்குருகி வரைகுகையை**

**இடித்து வழிகாணும்''**

நக்கீரனின் இசைக்கு முருகப்பெருமான் மட்டுமல்ல; வேலும் உருகியது; துயரை அகற்றியது. சொல்லற்கரிய திருப்புகழை உரைத்தவரின் பகையை அறுப்பது வேல்.

தனித்துச் செல்லும் பொழுது – இரவு, பகல், வலது, இடது என்று எந்த ஆபத்து வராமலும் சூழ்ந்து காப்பது முருகன் கைவேல். வேல் வகுப்பை எடுத்துப் படித்தால் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

வேலின் அமைப்பே அதன் தன்மையை உணர்த்தும்.

அடிப்பகுதி ஆழ்ந்தும், இடைப்பகுதி அகன்றும், நுனிப்பகுதி கூர்மையாக இருப்பது வேல்.

வேல் என்பது ஞானமே தவிர கொலைக்கருவி இல்லை. ஏவியர்கள் விடும் வேல் சென்று தாக்கும் பொழுது அது அழிப்பதில்லை. இறைவனின் திருவுளமறிந்து வேலும் அருள்பாலிக்கிறது. இதுதான் வேலின் தன்மை.

மூலமும் முடிவுமில்லாத மூர்த்தியை சூரபத்மன் எதிரியெனப் பகை கொண்டான். அவனுடைய சகோதரர்கள் அழிந்தனர். அழியுமுன் முருகன் யாரென்பதைச் சூரனுக்கு உணர்த்தினர். ஆனால் அறிவதற்குச் சூரனின் ஆணவ மனம் மறுத்தது.

சக்தி பாணம் சூரனின் மார்பைப் பிளந்தது, உடம்பை இரு கூறாக்கியது. ஆனால் அவன் அழிந்து மடியவில்லை. சூரனின் தவம் அவனைக் காத்தது. வேல் பிளந்த இரு பகுதிகளும் மயிலும், சேவலுமாக ஆக்கியது. முன்னால் முருகனை நினைத்து செய்த தவம் அழியாத பதவியைக் கொடுத்தது.

**''தீவினை யெலா மடிய நீடுதனி வேல்விடு**

**மடங்கல் வேலா''**

சூரனாகி செய்த தீவினையெல்லாம் எம்

பெருமானின் வேல் அழித்தது.

சூரன் செய்த தவம் தான் என்னே !

முருக பெருமானின் வேற்படை பிறவிப் பிணியை நீக்கவல்லது.

வேல் வெல்லுந் தன்மையை உடையது. ஆன்மாக்களுடைய வெல்லுதற்கரிய வினைகளை வெல்வது வேல்.

வேல் ஞானமாதலால் அஞ்ஞான இருள் நீங்க "வேல், வேல்" என்று கூற வேண்டும்.

பிரணவம் மயில் ஆனபடியால் "வேலும் மயிலும்", வேலும் மயிலும் என்று எப்பொழுதும் வாயார ஓதுதல் வேண்டும்.

"வேலும் மயிலும் துணை என்பது ஒப்பற்ற மந்திரம். அஷ்டாவதானம் புரிவோர் இம்மந்திரத்தை ஓதியே அறிவாற்றல் பெறுவர்".

"வேலுண்டு வினையில்லை; மயிலுண்டு பயமில்லை; குகனுண்டு குறையில்லை" என்பது அறிந்தவர் ஓதும் மந்திரம்.

வேலையும், மயிலையும் தியானிப்பவர்க்கு எல்லா இடர்களும் நீங்கும்.

**"வேலு மயிலு நினைந்தவர் தந்துயர்**
**தீர அருள்தரு கந்த நிரந்தர**
**மேலை வயலி யுகந்து நின்றருள் பெருமானே"**

முக்தி பெறுவதற்கு வழி வேலையும், வேலுடன் இணைந்து மயிலையும் கூறுகிறார் அருணகிரிநாத பெருமான்.

அனுபவத்தால் உணர்ந்தவர் !

கடலும், சூர்மார்பும், கிரௌஞ்ச மலையும், ஊடுருவும்படி வேல் தொட்ட வித்தகன் முருகன் !

மயக்கம் கொண்ட உயிர்களை வேல் தொட்ட வித்தகன் காத்தருள்வான்.

"பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்கிறது கந்தரனுபூதி.

கடலில் மாவறுத்த வேலோன் வேற் படையால் வினையையும் அறுத்து, பிற வியின் வேரையும் அறுப்பான். சூரன் மாமரமாகத் தோன்றினான் என்பர் ஞானாசிரியர்கள்.

கடலை வற்றச் செய்வது போல் என் பிறவிக் கடலையும் வற்றச் செய்வான். கிரௌஞ்ச மலையைப் பிளந்தது போல், நம் தீவினைக் குன்றையும் பிளக்கச் செய்வான். சூரனையிட்டது போல் நம் ஆணவ மலத்தையும் பிளந்து ஞானத்தைக் கொடுப்பான் முருகன் தன் கை வேற்படையால் !

**வீரவேல் தாரை வேல் விண்ணோர் சிறை மிட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்**
**தொளைத்தவேல் உண்டே துணை**

திருமுருகாற்றுப்படையின் பின் வரும் சிறப்புப்பாடல்கள் வேலின் மகிமையைச் சிறப்பித்துச் சொல்கின்றன.

முக்தி பெற வேண்டுமானால், செல்வ நிலையாமையை உணர்ந்து இன்ப துன்பத்தைச் சமமாக எண்ணி, பற்றற்று திருச்செங்கோடனையும், அவன் கை வேலையும் துதிக்க வேண்டும் என்கிறது கந்தரலங்காரப் பாடல்.

**மலையாறு கூறெழ வேல் வாங்கினான்**

— கந்தரலங்காரம்

இலட்சத்து ஒன்பது வீரர்களையும் பூத வீரர்களையும் தாரகனுடைய மாயக் கருத்துக்கு இணங்கி, கிரௌஞ்சம் என்னும் மலையாயிருந்த அசுரன் தன்னிடத்தில் மயங்கிக் கிடக்க வைத்திருந்தான். அதை கண்ட முருகபெருமான் வேல் வாங்கி அம்மலையைப் பிளந்து அதனின்றும் அத்துணை வீரர்களும் வெளிப்பட்டு வர வழி செய்தார். அதோடுமட்டுமன்று; வேலை வணங்கினால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.

சூரனுக்குப் பயந்து தேவேந்திரன் தனது தேவலோகத்தை விட்டு ஓடி ஒளிந்தான். சூரன் இந்திரனைத் துரத்தி அழிக்கப் பார்த்ததனால், இந்திரன் சீர்காழிப் பதியில் மூங்கிலாக மாறி மறைந்து நின்றான்.

இந்திரனின் கதியே இப்படி என்றால் இந்திராணியின் கதியைப் பற்றிச் சொல்லவா வேண்டும்!

''பச்சை மயிலில் வரு வீரவேல் முருக
துட்ட நிருதர் குலகால வானவர்கள்
பத்தி யுடனடியில் வீழ வாழ்வுதவ பெருமானே''

என்கிற அருணகிரியாரின் வாக்கு பொய்யல்லவே?

இந்திராணியின் மங்கல்யத்தைக் காத்து ரக்ஷித்தது முருகன் கைவேல் அல்லவா! முருகன் கைவேலை வணங்கினால் மாங்கல்ய பாக்யம் கிடைக்கும் என்பது தெரிய வருகிறதே!

''இந்திராணி மங்கல்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோத னருள்''

என்பதை மயில் விருத்தத்தில் காண்கிறோம்.

''வினை ஓடவிடும் கதிர் வேல் மறவேள்''

என்று கந்தரனுபூதி கூறுகிறது.

யாருடைய வினை? விதி காணும் உடம்பைவிடாத வினையை உடையவர்கள். தேவர்களும் இதற்கு விதி விலக்கல்ல.

வேலை மறக்காமல் இருந்தால் அது நம் வினைகளை ஓட்டி விடும். அதனால்தான் வினை ஓடவிடும் கதிர்வேல் என்கிறார் அருணகிரி நாதர் பெருமான்.

இந்த வேலுக்குச் சொந்தக்காரன் முருகன். வேலை உடையவன் என்பதால் வேலவன் என்றும், வேலா என்றும் அழைக்கலாம்.

வேலின் தன்மையைப் பற்றிக் கூறுகையில் "தீதில்லாத வேல் தீர சேவற் கொடியோனே – தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே'' என்று அறியும் பொழுது சிந்தை எப்படி குளிர்கிறது.

நல்லவர்க்குத் தீதில்லாத வேல் அது. ஆனால் தீயவர்களுக்கு? தீமை களை அழிப்பதற்கென்றே சக்தியால் கொடுக்கப்பட்ட சக்திவேல் என்பதை அறிவோம். அதனால்தான் இவனுக்கு சக்திவேல் என்றொரு பெயரும் உண்டு.

''அரணெடு வடவரை யடியொடு பொடிபட
அலைகடல் கெடவயில்
வேல் வாங்கிய செந்தமிழ் நூலோன் குமரன் குகன்'' – தேவேந்திர சங்க வகுப்பு

இது மட்டுமா !

சக்தி வேலனின் சக்தியை கந்தரலங்காரம் நான்காவது பாடலில் காணலாம்.

**"தேரணி யிட்டுப் புரமெரித்தான் மகன் செங்கையில் வேற்**

**கூரணி யிட்டணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்தரக்கர்**

**தேருணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்தது சூர்ப்**

**பேரணி கெட்டது, தேவேந்திர லோகம் பிழைத்ததுவே"**

கிரௌஞ்ச மலையைப் பிளந்து, சூரனை வென்று தேவேந்திர லோகம் பிழைக்க வைத்தது முருகன் கைவேல்.

இன்னும் இதன் அழகைப் பருக வேண்டுமென்றால் கந்தரலங்காரம் முப்பத்து மூன்றாவது பாடலில் காணலாம்.

**"கிளைத்துப் புறப்பட்ட சூர் மார்புடன், கிரியூடு-**

**ருவத் தொளைத்துப் புறப்பட்ட வேல் கந்தனே"**

சூரனின் ஆணவத்தை தம் வேலால் பிளந்தவன் முருகப்பெருமான் என்பதைத் திருப்புகழிலும், கந்தரலங்காரத்திலும் பல இடங்களில் வைத்துப் பார்த்தோம்.

சூரனின் ஆணவத்தைத் தம் வேலால் பிளந்தவன் முருகப் பெருமான். அவன் வெற்றி வேல் பெருமான். அடியார்க்கு நல்ல பெருமாள்.

அவுணர் குலமடங்கப் பொடியாக்கிய பெருமான்.

அவனுடைய வேல் குன்றம் எட்டும் கிழித்தோடும் வேல்.

இது அருணகிரி நாதர் பெருமானின் அருள்வாக்கு.

முருகனின் வெற்றியைப் பறைசாற்ற வேல் வாங்கு வகுப்பை அருணகிரி நாதர் பெருமான் அருளி இருக்கிறார். இதில் அபூர்வமான அம்பிகை திருநாமங்களைக் காணலாம்.

திருத்தணியி லுதித்தருளு மொருத்தன் மலை

விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயி

னடத்துகுகன் வேலே. – வேல் வகுப்பு.

பயந்த தனி வழிக்கு நம்முடன் கடைசி காலத்தில் வருவது வடிவேலும் செங்கோடனின் மயூரமும் என்பதை வழித் துணையாகக் காணலாம்–கொள்ளலாம்.

வேலை நினைத்தால் யம பயம் இல்லை.

"மயிலையும் அவன் திருக்கை அயிலையும்

அவன் கடைக்க ணியலையும் நினைந்திருக்க வாருமே" – என்று அருணகிரி நாதர் பெருமான் நமக்கு வழிகாட்டி இருக்கிறார்.

"வடிவேலும் மயிலும் துணை".

# அருணகிரியாரில் திருவள்ளுவர்

**சிரவை ஆதினப் புலவர் மதுரகவி வித்வான்**
**க.கி. இராமசுவாமி ஐயர் பி.ஏ**

**திருக்குறள் உலகப் பொதுமறை :**

திருக்குறள் தோன்றிய காலத்தும் அதன் பின்னரும் வந்த கவிஞர்கள் அனைவரும் திருக்குறட் கருத்துக்களைத் தம் நூல்களில் தக்க இடங்களில் கையாள்வதன் மூலம் பெருமை பெற்றுள்ளார்கள். அவ்வகையில் அருணகிரி நாதரும் திருக்குறனை ஐயந்திரிபறக் கற்றதோடன்றித் தம் திருப்புகழ்ப் பாக்களிலும் ஏனைய நூல்களிலும் மிகப்பல இடங்களில் அதனைக் கையாண்டுள்ளார்.

அருணகிரி நாதர் திருவள்ளுவர் பெயரையும் அவர் தம் நூலையும் குறிக்கும் இடங்கள்: "படர்புவியின்" எனத் தொடங்கும் திருச்செந்தில் திருப்புகழில்

**"திருவளுவ தேவர் வாய்மை என்கிற பழமொழியை ஓதி யேயுணர்ந்து"**

என்ற வரியில் அருணகிரி நாதர் திருவள்ளுவரின் பெயரைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் அவரது நூலை வாய்மை – பொய்யா மொழி – எனவும் கூறுகிறார். இப்பாடலில் அவர் கூறுவதன் சுருக்கம் :

திருவள்ளுவ தேவரின் பொய்யாமொழியை ஓத வேண்டும். ஓதினால் மட்டும் போதாது. உணரவும் வேண்டும். ஓதி உணர்ந்தவர்க்கு அடக்கமும், ஆடம்பரம் இன்மையும் வருவதே முறைமை. அப்படியிருக்கச் சில புலவர்கள் தம்மைக் கவிராஜர், மதுரகவிப்புலவர் எனச் செருக்குற்று விருது, கொடி, தாளம், மேளம், தண்டிகை போன்ற வரிசைகளைப் பெற்று 'மாலகந்தை' கொண்டு உலாவருகின்றனரே. இது தவிர்வது எக்காலம்? என்பதாம்.

". . . முப்பால், திறம் உரைத்தானும் புலவன் தரணிபொறுக்குமோ, யானும் புலவன் எனல்" என்ற பழம்பாடல் இங்குக் கருதத்தக்கது

"கமல மாதுடன்" எனத் தொடங்கும் திருச் செந்தூர்த் திருப்புகழில் அருணகிரியார்

**"அமல மாகிய சிந்தை அடைந்தகல்**
**தொலைவி லாத அறம்பொருள் இன்பமும்**
**அடைய ஓதி உணர்ந்து தணந்தபின் அருள் தானே"**

அடையுமாறு பெறும்படி என்கிறார். இதில் திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. திருக்குறளைத் தூய சிந்தையுடன் ஓதுதல் வேண்டும். இம்மூன்று பால்களையும் ஓதி உணர்ந்தால் இறைவனருள் தானே வந்தடையும் எனக் கூறிய அருணகிரிநாதர் அறம் பொருள் இன்பங்களுக்கு 'அகன்ற', 'தொலை விலாத' என்னும் இரண்ட அடைமொழிகளைச் சேர்க்கிறார். அத்துடன் "இவை மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்னும் ஔவை மூதாட்டியாரின் வாக்கையும் நினைவு கூர்ந்து 'தணந்தபின்' எனவும் சொல்கிறார். இங்குத் திருக்குறளின் பால்பாகுபாடு அருணகிரியாரால் கூறப்படுகின்றது. அத்துடன், திருக்குறளை அரைகுறையாகக் கல்லாமல் முழுவதுமாகக் கற்க வேண்டும் என்பது 'அடைய ஓதி' என்ற சொற்றொடரால் புலப்படுத்தப்படுகிறது.

மற்றொரு பாடலில் திருக்குறளை "இடரற முப்பால் செப்பிய கவிதை" என்கிறார் அருனணப் புலவர். இதிலும் திருக்குறளின் பால் பாகுபாடு சுட்டப்படுகின்றது. முப்பால் கற்றவனுக்கு இடர் நீங்கும் என்பதும் தெரிகிறது. அத்திருப்புகழ் அடியில் அருணகிரியார் திருக்குறளைப் போலவே மிகுந்த சிறப்புடையது 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்னும் திருஞானசம்பந்தரின் தேவாரம் என்ற அரிய கருத்தையும் வெளியிடுகிறார்.

திருக்குறளைத் தெளிவாகப் புலப்படுத்துதல் :

**"இன்மை என ஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்"**

என்பது நல்குரவு என்னும் அதிகாரத்தில் வரும் குறள் இதனை அருணகிரி நாதர் கந்தர் அநுபூதியில்

**"வடிவும் தனமும் மனமும் குணமும்**
**குடியும் குலமும் குடிபோகியவா**
**. . . . . . . . . . . . . . . . . .**
**மிடியென் னொருபாவி வெளிப்படினே"**

என எடுத்து ஆண்டுள்ளார். இது குறட்பாவைத் தெளிவாகப் புலப்படுத்துவதோடு அதற்கு விளக்கமாகவும் அமைந்துள்ளது.

"கொடாத தவமே மறைந்து" என்பது "கொடா தவனை யே புகழ்ந்து" எனத் தொடங்கும் விராலிமலைத் திருப்புகழில் வரும் ஒரு தொடர் இது திருக்குறளில் கூடா ஒழுக்கம் என்னும் அதிகாரத்தின் கீழ்வரும் "தவம் மறைந்து அல்லவை செய்தல்" என்ற நான்காம் குறளைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இக்குறட்பாவில் "அல்லவை செய்தல்" என்பதை அருணகிரி நாதர் மேற்கூறிய திருப்புகழில்,

**"சுடாத தனமான கொங்கைகளால் இதயமே மயங்கி**
**சுகாத ரமதாய் ஒழுங்கில் ஒழுகாமல்" என விரித்துக் கூறுதல் காண்க.**

**திருக்குறட் கருத்தை ஆளுதல் :**

"ஆபாத னனக் குதர்க்க துட்டர்கள்" எனத் தொடங்கும் திருநாகேச்சுரத் திருப்புகழில் "ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள்" என்ற வரியில் கள்ளுண்ணலின் தீமையை அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

**"கையறியாமை உடைத்தே பொருள் கொடுத்து**
**மெய்யறி யாமை கொளல்"**

என்னும் குறளுக்குப் பரிமேலழகர் உரை கூறுகையில் "கையறியாமையாவது செய்வதறியாமை" எனவும் "மெய்யறியாமையாவது மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல்" எனவும் கூறுகிறார். எனவே இவ்விரண்டாலும், கள்ளுண்பார்க்கு ஏற்படும் தன்னை மறத்தல், மெய்ந்நடுக்கம், நாக்குழறுதல், தகாத சொற்களைப் பிதற்றுதல், தனக்குத் தொடர்பில்லாத செயல்களைச் செய்தல், நாண் துறத்தல் முதலியன கூறப்பட்டன. இக்குறட் கருத்தை அருணகிரியார் "ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள்" என்பதன் மூலம் தெளிவாக்குகிறார். வாதாமிப் பருப்பை அரைத்துச் செய்யும் இனிப்புப் பொருளில் வாதாமியைக் காணாவிடினும் அதன் குணமும் மணமும் சுவையும் அதன் இருப்பை உணர்த்திவிடுவது போன்றது இது.

திருக்குறட் கருத்தை விளக்குதல் :

மடியின்மை என்னும் அதிகாரத்தின் பத்தாம் குறள்

**"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்**

**தாஅய தெல்லாம் ஒருங்கு"**

என்பது இக்குறளில் அடியளந்தான் என்பது திருமாலைக் குறிக்கும்.

அருணகிரி நாதர் கந்தர் அலங்காரத்தில் திருமால் யாரிடம் எதைப் பெற்று எப்படி எதனால் அளந்தார் என்பதை விளக்கும் வகையில் "மாவலிபால், மூவடி கேட்டு மூதண்ட கூட முகடுமுட்டச், சேவடி நீட்டும் பெருமான்" எனப்பாடுகிறார். இது மேற்கூறிய குறட் பாவை விளக்குவதாகும்.

குறட் பாவுக்கு அறிஞர் கூறிய உரையைப் பின்பற்றுதல்:

அவாவறுத்தல் என்னும் அதிகாரத்தின் பத்தாம் குறள்

**"காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்**

**நாமங் கெடக்கெடும் நோய்"**

என்பது. இக்குறளுக்கு உரை கூறுகையில் ஆசிரியர் பரிமேல் அழகர்,

"அநாதியாய அவிச்சையும், அதுபற்றி வரும் யான் என மதிக்கும் அகங்காரமும். அதுபற்றி எனக்கிது வேண்டும் என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார். இவர் அகங்காரம் அவிச்சைக் கண்ணும் அவாவுதல் ஆசைக் கண்ணும் அடங்குதலால் மூன்றென்றார்" என எழுதுகிறார்.

பரிமேல் அழகரின் கருத்து, காமம் வெகுளி என்ற இரண்டிற்கும் அவிச்சையே காரணம். எனவே அதுவே முதலில் வைக்கத் தக்கது என்பது விளங்குகிறது. இவர் உரையைப் பின்பற்றிய அருணகிரி நாதர் அவிச்சையாகிய அறியாமை மயக்கம் – மால் – என்பதை முதலில் வைத்துப் பாடிய பாடல் :

**"மாலாசை கோபம் ஓயாதெநாளும்**

**மாயாவிகார வழியேசெல் மபாவி"**

என்பது. எனவே அருணகிரியார் இப்பாடலில் திருக்குறள் உரையாசிரியரைப் பின்பற்றியுள்ளார் என்பது தெளிவாகப் புலனாகிறது.

திருக்குறள் கூறும் உவமைகளோடு ஒன்றிரண்டு உவமைகளைச் சேர்த்தல் :

திருவள்ளுவ தேவர் காமத்துப்பாலில் நலம்புனைந்துரைத்தல் என்னும் அதிகாரத்தில் தலைமகளின் பாதங்களின் மென்மைக்கு இரண்டு உவமைகள் கூறி அவை இரண்டும் ஒவ்வா எனக் குறிப்பிடுகின்றார் அக்குறள் :

**"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**

**அடிக்கு நெருஞ்சிப் பழம்"**

இக்குறளை அருணகிரியார் திருப்புகழ்பாடலில் அப்படியே ஆண்டுள்ளார். அது வருமாறு :

"அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம் விடாமட
அனத்தின் தூவிகுலாவிய சீறடி மடமானார்'

இப்பாடலில் அருணகிரியார் அனிச்சம், அன்னத்தின் தூவி ஆகிய இரண்டுடன் பஞ்சையும் சேர்த்துக் கூறுகிறார். வள்ளுவர் கூறிய இரண்டாம் உவமையாகிய அன்னத்தின் தூவிக்கு முன் (தடாகத்தை விடாத மடப்பம் பொருந்திய) என்ற அடைமொழிகளைச் சேர்த்தார். பஞ்சைப் பற்றிக் கூறுகையில் அதன் மென்மைக்குக் காரணத்தையும் கூறுகிறார். கார்முகம் என்பது வில், முங்கில் வளைந்து நாண்பூட்டி வில்லாக்கி அதனை இழுத்துச் சுண்டுவதால் பஞ்சு துவண்டு உடைவதால் மிக மெல்லியதாகிறது எனவும் கூறுகிறார். இவ்வெடுத்துக்காட்டின் மூலம் அருணகிரியார் திருக்குறளை எடுத்தாளும்போது அதில் வரும் உவமைகளுடன் ஒன்றிரண்டு உவமைகளைச் சேர்த்தலும் உண்டென அறிகிறோம்.

## திருக்குறள் அதிகாரங்களை நினைவு படுத்தல் :

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

இக்குறளில் கொல்லாமை, புலால் மறுத்தல் என்னும் இரண்டு அதிகாரக் கருத்தும் ஒருங்கே வருகின்றன. இதுபோல் அருணகிரியார் பாடிய "எத்தனை கலாதி" எனத் தொடங்கும் திருப்புகழிலும் "எத்தனை கொல் ஊனை நித்தம் பசியாறல் " என்ற வரியில் மேற்சொன்ன இரண்டு அதிகாரங்களும் குறிப்பிடப்படுவதை அறியலாம்.

கந்தரந்தாதியில், யாகங்களில் ஆடுமுதலிய உயிர்களைப் பலியிடுதலை அநியாயம் எனத் துணிந்து கூறுகிறார். அருணை முனிவர். அவர் வாக்கு :

"அசஅநியாயஞ்செய் வேதியரே" – கந்.அந். 31

இப்பாடலுக்கு வில்லிபுத்தூரார் கூறியதாகச் சொல்லப்படும் உரையின் சுருக்கத்தைத் திருப்புகழ் முதலிய ஒன்பது நூல்களையும் தேடித் தொகுத்து ஆராய்ந்து முதன் முதலில் பதிப்பித்த நீதிபதி திரு வ.த.சுப்பிரமணி பிள்ளை அவர்களை எழுதுவது:

"இம்மையில் புகழையும் மறுமையில் போகத்தையும் பெற நினைத்துப் பழிக்கஞ்சாமல் சீவனைக்கொன்று வேள்வி செய்கின்ற வேதியரே" என்பது.

அருணகிரியார் திருஞானசம்பந்தரை முருகனின் அவதாரமாகக் கருதிப் போற்றுபவர், எனினும் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்தில் தில்லையைப் பாடிய பதிகத்தில்,

"பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்
சிறப்பர் வாழ்தில்லை"

என்னும் பாசுரத்தில் வரும் கருத்தை ஒப்புக் கொள்ளாதவராய்த் துணிவுடன் மறுத்துள்ளார் என்பது கருதத்தக்கது. இங்கு

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்ற குறளும் நினைவுறுத்தப் பெறுகின்றது.

"திடமிலிசற் குணமிலி நற் றிறமிலிஅற்புதமான
செயலிலிமெய்த் தவமிலி . . . . . .
கைக் கொடையிலிசொற் கியல்பிலி"

என்ற பழநித் திருப்புகழில் திடமிலி என்பதால் வினைத்திட்பமும், சற்குணமிலி என்பதால் பண்புடைமை சால்பு என்னும் அதிகாரங்களும், அற்புதமான செயல் என்பதால் நீத்தார் பெருமை என்னும் அதிகாரமும் மெய்த்தவமிலி என்பதால் தவம் என்னும் அதிகாரமும் கைக் கொடையிலி என்பதால் ஈகை என்னும் அதிகாரமும், சொற்கியல்பிலி என்பதால் இனியவை கூறல் சொல்வன்மை என்னும் அதிகாரங்களும் நினைவு படுத்தப்பட்டுள்ளன.

தொடர்புடைய அதிகாரங்கள் சிலவற்றை இடையிட்டுச் சுட்டுதல் :

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லா தவர்" இது கல்வி என்னும் அதிகாரத்தில் வரும் குறள். அருணகிரி நாதர் திருவண்ணாமலை மீது பாடிய திருப்புகழில் தம்மை "அறிவிலாத காபோதி" என்கிறார். இத்தொடரில் 'அறிவிலாத' என்ற சொல் 'அறிவுடைமை' என்னும் அதிகாரம் பற்றியது. காபோதி (கபோதி – கண்ணில்லாதவன்; முதல் நீண்டது) என்பது கல்வி என்னும் அதிகாரத்தில் வரும் கருத்து.

கல்விக்கும் அறிவுடைமைக்கும் இடையே கல்லாமை கேள்வி என்னும் இரண்டு அதிகாரங்கள் உள்ளன. அவ்விரண்டையும் தாண்டி அறிவுடைமையோடு கல்வியை இணைப்பால் எழுந்ததே 'அறிவிலாத காபோதி' என்பது. இத்தொடர் அருணகிரி நாதருக்குத் திருக்குறளின்பால் இருந்த ஈடுபாட்டுக்குச் சான்றாகும்.

திருவள்ளுவரின் கடவுட்கொள்கையும் அதன் தாக்கமும் :

திருவள்ளுவ தேவன் முற்றறிவுற்ற நிலையில் பாடியது திருக்குறள். சிறப்பாகக் கடவுட் கொள்கையை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களும் துறவற இயலில் ஞானம் என்னும் தலைப்பின் கீழ்வரும் நிலையாமை துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களும் ஆகிய எட்டு அதிகாரங்கள் ஆம் என ஆன்றோர் கூறுவர். சீவபோதங்கழன்று சிவபோ தம் மேலிட்ட நிலையில் அருணகிரியார் பாடிய திருப்புகழ் முதலிய நூல்களில் மேற்கூறிய திருக்குறள் அதிகாரங்களின் தாக்கம் பரவலாகக் காணப்படுகிறது. அதைச் சிற்றறிவு கொண்டு ஆய்தல் சாலாது. எனவே ஏனையவற்றுக்குச் சிற்சில உதாரணங்கள் இக்கட்டுரையில் தந்துள்ளேன்.

வாழ்க திருக்குறள் ! வாழ்க திருப்புகழ் !

☆ ☆ ☆

# திருப்புகழில் பார்வதி

- டாக்டர் சாரதாரமணி

'சக்தி' என்னும் சொல் எங்கும் எதிலும் நிறைந்திருக்கும் சொல்லாகும். அன்றாட வாழ்வில் கூட நமக்குத் தேவைப்படும் செயல்களுக்கு உறுதுணையாக நிற்பவை அணு சக்தி, எரி சக்தி போன்றவையாம். உடற்சக்தி குன்றினால் சீவனற்ற நிலை ஏற்படுகிறது. மனச்சக்தி குன்றினாலோ மனிதன் உடல்நலம், சிந்தனை செயலிலும் தடுமாற்றம் அடைகிறான். மனச்சக்தி மேம்பட இறை சக்தி நமக்கு அவசியமாகிறது. இவ்வாறு சக்தியானவள் நமது ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வொரு செயலிலும் நம்மை வழி நடத்திச் செல்பவளாகிறாள். எனவேதான் இறைவழிபாட்டிலும் அவளுக்கென ஒரு தலையாய், சிறப்பான இடம் இருப்பதை நாம் காண்கிறோம். முப்பெரும் கடவுளர்களுக்கும் முப்பெரும் தேவிகள் சக்திஸ்வருபமாக திகழ்கின்றனர். அதில் மலைமகள் பார்வதிக்கோ மற்றொரு தனிச்சிறப்பும் உண்டு. அவள் முப்பெரும் முழு முதற் கடவுள்களுக்கும் மேலான ஆதிசக்தி ஆவாள். இதனால் அருணகிரியாரும் ஓரிடத்தில் "சிவபெருமான் அவனது பாதத்தில் வீழ்ந்து வணங்குவதால் அவர் சிரசில் இருந்த எல்லாப் பொருள்களின் மணமும் தனது திருவடியில் பொருந்தி வீசப்பெற்றவள்" என்று கூறுகிறார். இவ்வாறே எல்லா நூல்களிலும் சக்திக் கெனத் தனியிடம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். தாயாகப் போற்றி வணங்குகிறோம்.

திருப்புகழிலும் பிற நூல்களிலும் அருணகிரியார் பார்வதி தேவிக்கு மிகச் சிறந்த ஸ்தானத்தைக் கொடுத்துள்ளார். தமது ஆணவத்தை, காமியத்தை அகற்றிப் பிறப்பையொழித்த தேவியாக வழிபட்டுள்ளார். இனி கருணகிரியான அருணகிரியார் பார்வதியை வருணித்துள்ள வகையினைக் காண்போம்.

### தேவியின் உருவம், உடை, நாமம்

பார்வதியை செம்பொன் மேனியவள், மரகத சொருபி, வேதசொருபான நாதவடிவி, மாணிக்க மின்னாள், பச்சைநங்கை, கோலநீல வருணத்தி, கார் போல் மேனியள் என்று அருணகிரியார் பார்வதியின் நிறத்தையும் உருவத்தையும் வருணிக்கிறார். அவளது உடையோ செம்பொற்பட்டு உத்திரியமும், புலித்தோலுடையுமாகும். ஆபரணங்களில் அவள் அணியும் சிறந்த ஆபரணங்கள் அம்பொற் குண்டலம் ஆசாம்பரை நாகாங்கதை, பாசாங்குசை போன்றவைகளாம். அவளது திருநாமங்கள் எண்ணிலடங்கா இருப்பினும் அருணகிரியார் அவளை அகில ஜக அண்டநாயகி, அஞ்சுமுக நீலி, அம்பணக்கரதலி, ஆறுசமயத்தி, எண்குண பூரணி, மூவர்க்குமுன்னாள் என்றெல்லாம் அழைத்து மகிழ்கிறார். மேலும் அவளை "கீழப் பொற்காளை மெலேறும் எம் நாயகி, என்றும் சிங்கமேறி" என்றும் போற்றி மகிழ்கிறார். ஆதி சக்தியான பார்வதியை சரஸ்வதி, இலக்குமி, ரதி, இந்திராணி, கிருத்திகை முதலிய மாதாக்கள், ரம்பை ஆகிய தெய்வப் பெண்கள் ஆகியோர் துதி செய்து மகிழ்கின்றனர் என்று வேறொரு இடத்தில் கூறுகிறார். அத்தகைய பராசக்தியின் பராக்கிரமத்தையும் திருவிளையாடலையும் திருப்புகழின் பலபாக்களில் பாடி மகிழ்கின்ற அருணகிரியார், சக்திஸ்தலங்களை காஞ்சி, திருவானைக்காவல், திருமயிலை, மதுரை ஆகிய ஸ்தலங்களிலுள்ள பார்வதியை எங்ஙனம் போற்றிப் புகழ்கிறார் என்பதை முதலில் காண்போம்.

### காஞ்சிபுரம் :

பார்வதி அல்லது காமாட்சி ஒப்பற்ற சிவனது பக்கத்தில் உள்ள அற்புதத் தலைவி, திருநீறு முத்தலைச் சூலம் இவைகளைத் தரித்துள்ளவன், கரும்புக்கு ஒப்பு என்று சொல்லத்தக்க சொற்களை உடைய சுந்தரி, கரும்பு ஏந்திய பத்ரை (காளி) பித்தன் சிவனது

அன்பிற்குப் பாத்திரமான கற்பு வாய்ந்த பச்சை ஒளிவீசும் பேரொளியாள், தாமரையில் வீற்றிருக்கும் மடமங்கை பார்வதி என்கிறார். அடுத்து அவர் நவசக்ர பீடத்துப் பெண், கவுரி செவ்விய அழகிய பட்டாலாய மேலாடை அணிந்துள்ள பெண், பழையவளும் அண்டங்களைப் பெற்றவளுமாகிய மடப்பெண் தன்னைப் பணிவாருடைய பிறப்பு என்னும் அலைகடலை விலக்கி நிறுத்தும் தேவி என்கிறார். மற்றோர் இடத்தில் அத்வைத நிலைபெற்ற சித்தர்கள் தெளிந்துணர்ந்த அறிவுருவான அமலை, எல்லா அண்டங்களையும் தோற்றுவிக்கும் முத்துமேருமலை, பொன்மேருமலை எனத்தக்கவள், தவம் செய்த அந்த சிறப்புள்ள படியை கையிற் கொண்டு அறம் இரண்டெட்டு (16) எட்டு (8) எட்டும் (8) முப்பதிரண்டையும் வளர்த்த காமாட்சியின் பங்காளர் சிவபெருமானுக்கு மெய்ப்பொருளை உபதேசித்த பெருமானே என்று முருகனைப் புகழுமிடத்தில் அன்னை பார்வதியின் சிறப்பையும் எடுத்துரைக்கிறார்.

**திருவானைக்காவல் :**

யானையும் சிலந்தியும் இறைபூஜை செய்து ஒன்றையொன்று அழித்து சிவகணங்களாக மாறியதாக வரலாறு ஒன்று உண்டு. அன்னை அகிலாண்டஸ்வரி தவம் செய்த திருத்தலமாகும் இது. வள்ளல் வேலனைப்பாடுமிடங்களிலெல்லாம் சக்தியும் அவனின் அன்னையுமான பார்வதியைத் துதி செய்ய அருணகிரியார் மறப்பதே இல்லை. அகிலாண்டேசுவரியைப் போற்றுமிடத்து, கொம்பு அனைய மெல்லிய நீலநிற அழகி, சுத்தமாயையாம் சக்தி, விஷத்தை உண்டவள், வேதம் போற்றும் பார்வதி, மலை இமயத்தின் நெடிய தவத்தில் வந்த அழகியமாது என்று வருணிக்கிறார். மற்றொரு பாடலில் உலகுக்கு முதல்வி, பராசக்தி, திரிபுரத்தை எரித்து தாய், அகிலாண்டநாயகி, வெள்ளை நாவற்கீழ் வீற்றிருக்கும் ஜம்புநாதரின் மனைவி என்று தாயைப் போற்றி துதிக்கிறேன்

**திருமயிலை :**

சென்னையிலுள்ள மயிலையில் எழுந்தருளியுள்ள கற்பகாம்பிகை சிவனை மயிலாகப் பூஜித்து அவரால் ஆட்கொள்ளப்படுகிறாள் என்பது தல வரலாறு. ஆயின் இத்தலத்தில் ஈசனைவிட ஈசுவரிக்கு அதிகச் சிறப்பு அளிக்கப்படுகிறது. ஏனெனில் அவள் மும்மூர்த்திகளுக்கு மூத்தவள் அத்தகைய பார்வதியை அருணகிரியார் பராசக்தி, சிவத்தினின்றும் பிரிவு படாதவள், சம்புவின் சக்தி, எல்லா உலகங்களையும் அருளிய அழகி, மும்மூர்த்திகளுக்கும் மூத்தவள், சூரியன் சந்திரன் என்னும் இரு சுடர்களும் மத்தியில் தரிக்கின்ற மூலதேவதை, படர்ந்த சடையுடைய சிவனது இடது பாகத்தில் நீங்காது விளங்கும் தேவி பார்வதி என்று துதிபாடுகிறார்.

**மதுரை:**

ஆலவாய், கூடல் என்று பெயர்பெற்ற மதுரையில் அரசோச்சும் மீ னாக்ஷி, சுந்தரேஸ்வரின் இதயநாயகி, மலையரசன் இமவானின் புதல்வி. அவள் புகழைப் பாடியபடி அருணகிரியார், பார்வதியான மீனாக்ஷி வாசனை கொண்ட மருக்கொழுந்தைச் சூடியுள்ள அழகிய கூந்தலை உடையவள், சிவபெருமானிடம் ஈடிலா அன்பு கொண்டவள், இமவான் பெற்ற சங்கரி அல்லது பார்வதி, என்று கூறுகிறார். மற்றொரு பாடலில் பெரியோன் சிவனுடன் அவரது நடனத்துக்கு ஒத்ததான நடனத்தைப் புரிபவள், மூன்று லோகங்களையும் ஈன்றவள், அற்புதகரமான சித்திகளை வரப்பிரசாதங்களை அருள்பவள் என்று பார்வதி, புகழ்பாடுகிறார்.

# தினசரி வாழ்வுக்கு திருப்புகழ்

- திருமதி பத்மினி பட்டாபிராமன்

அண்டசராசங்களையும் படைத்த ஆண்டவனை நினைத்து அருள் பெற நம் முன்னோர்கள் எத்தனையோ வழிகளைச் சொல்லியிருக்கிறார்கள் அதில் எளிய வழி இசை வழிபாடு.

அந்த இசையும் சந்தங்களின் சிறப்போடு, தாளக்கட்டோடு, பொருள் நயத்தோடு அமையும்போது, பாடுபவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் இணையில்லாப் பேரின்பம் கிடைக்கிறது.

திருப்புகழில் உள்ளவை வார்த்தைகள் அல்ல . . . அவையே இறைவனின் வடிவம்.

**"பாதமலர் மீதில் போத மலர் தூவிப்பாடுபவர்**
**தோழத் தம்பிரானே . . . "**
**சொல்லிப்பாருங்கள்,**

பாதங்களில் மலர் தூவி புன்னகை முகத்தோடு அந்த முருகப் பெருமானையே நேரில் பார்ப்பது போல இல்லை . . .?

**"குருமலை விளங்கு ஞான சற்குருநாதா . . ."**

இந்த வார்த்தைகளில், ஓங்காரத் தத்துவத்தின் உட்பொருளாய் அறிவே வடிவாய் வந்த ஞானத் திருஉருவம் தோன்றவில்லை?

முத்தைத்தரு பத்தித் திரு நகை என்று சொல்லும் போதே முத்துக்கள் முறுவலிக்கும் முருகன் முகம் முன் வருகிறதே . . .!

திருப்புகழின் சந்தங்களில் உள்ள லயமும் தாளங்களில் காலப்ரமாணமும் தான் எத்தனை அற்புதமானவை!

தியானம், யோகம் போன்ற கடுமையான நியமங்களைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள் கூடத் திருப்புகழைச் சொல்லும்போது அல்லது பாடும்போது காலப்ரமாணம், உள்ளத்தை "ஒருநிலைப்படுத்த" உதவுமே!

ஆக திருப்புகழ்,

செவிக்கு இன்பம், சொல்லுக்கு இன்பம், மனக் கண்முன்னே இறைவன் பாட்டுருவாகவே நிற்பதால் மெய், மனம், விழிக்கு இன்பம்.

மனித வாழ்வில் (day to day life) நித்திய வாழ்வில் நமக்கு ஏற்படக்கூடிய சோதனைகளைக் கூறி, அவற்றை நிவர்த்தி செய்யவும் அருணகிரி நாதர் அருளியிருக்கிறரே . . .!

உணவோ, உடையோ எதுவானாலும் முதல் தேவை பொருளல்லவா? பொருளில்லார்க்கு இவ்வுலகம் ஏது?

கொடிது கொடிது வறுமை கொடியது அல்லவா!

வறுமை நீங்க அருணை வள்ளல் காட்டும் வழி கொடிய வறுமையே,

"சிறிது மிடியு மணுகாதே" என்று கோருகிறார்.

வீடு. வாசல், மனை – செல்வம் சேரவேண்டுமா?

**"அண்டர் பதிகுடியேறமண்டசுரர் எருமாற . . ."**

சிறுவை முருகனை வேண்டினால் நல்லதோர் வீடு அமையாதோ? வறுமை நீங்கினாலும் – மனக்கவலைகள் மனித இனத்துக்கே உரியதல்லவா? மனக்கவலைகள் நீங்க பழனி முருகனை எண்ணி

**"மனக்கவலை யேது மின்றி உனக்கடிமையே**
**புரிந்து வகைக்கு மறு நூல்விதங்கள் தவறாதே . . ."**
**என்றழைத்தால் போதுமே . . .!**

மணமாகவில்லையே, குழந்தை இல்லையே, மாங்கல்யம் நிலைக்க வேண்டுமே . . . எத்தனை கவலைகள்! திருத்தணி வைத்தியநாதப் பெருமாளை எண்ணி

**"கலியாண சுபுத்திரனாக குற மாது**
**தனக்குவி நோத கவினாரு புயத்தில் உலாவி"**

வந்தால் திருமணப் பிரச்னை தீராதோ?

பெண்களுக்கு மாங்கல்ய சௌபாக்யம் நிறைந்திருக்க, மயில் விருத்தத்தில் அருணகிரி நாதர் அருளிய

**"இந்திராணி மாங்கல்ய தந்த ரக்ஷாபரண**
**இகல்வேல் விநோதன் அருள்கூர்"**

முருகப் பெருமானை எண்ணி வணங்குவோம்! செல்வங்களுக்குள் தலையான செல்வமான மக்கட் செல்வத்தை தவறாது பெற்றிட திருப்புகழ் தரும் அருமையான பாடல் இதோ. . .

**"செகமாயை யுற்றெ னக வாழ்வில் வைத்த**
**திருமாது கெர்ப்ப முடலூறி . . .**
**மடிமீத டுத்து விளையாடி நித்த மணிவாயின்**
**முத்தி தரவேணும் . . . "**
**பழனி பாலகனை நோக்கி,**
**"மனது துயரற வினைகள் சிதறிட**
**மதன பிணியொடு கலைகள் சிதறிட**
**மனது பதமுற எனது தலைப்பதம் அருள்வாயே"**

என்று கேட்பது எத்தனை உயர்வானது!

மனிதனாய்ப் பிறப்பெடுத்துவிட்டால் பொருள் மட்டுமே வாழ்வாகிவிடாதே! அறிவும் மெய்ஞ்ஞானமும் அவன் அருள் இன்றி எங்ஙனம் வரும்?

**"சோகமெ லாமற வாழ்வுற றம்பிற்**
**காசறு வாள மெய்ஞான தவஞ்சற் றருளாதோ"**

அருளமாட்டாரோ திருச்செந்தூர் முருகன்.

**"சிவனார் மனம் குளிர உபதேசம் செய்த"**

குருநாதன், அவமாயை கொண்டு உலகில்

**விருதாவ லைந்துழலும் அடியேனை அஞ்சலென வரவேணும்"**

என்று கெஞ்சினால் அறியாமை இருள் நீக்கமாட்டாரோ ?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் இல்லையா ?

மனித குலத்தைத் தாக்கும் நோய்களைப் பட்டியலிடும் அருணகிரிநாதர்,

**"இருமலு ரோக முயலகன் வாத**
**மெரிகுண நாடி விடமே நீரிழிவு**
**விடாத தலைவலி சோகை"**

என்று தொடங்கும் திருப்புகழில், திருத்தணி முருகனிடம்

**"பிறவிகள் தோறு மெனை நலி யாத**
**படி யுன தாள்கள் அருள்வாயே ..."**

என்று இறைஞ்சுகிறார்.

**"நோய் கலந்த வாழ்வுறாமல் நீ கலந்துளாகு**

**ஞான நூலடங்க வோத வாழ்வு தருவாயே ..."**

என்றும் வேண்டுகிறார்.

**"தக்கமடவார்மனையை நாடியவரோடு பல**
**சித்து விளையாடு வினை சீசீயிது நாறஉடல்"**

என்று உணர்ந்து, விலை மாதர் சேர்க்கை தவிர்த்து, "திருச்செங்காட்டங்குடி" முருகப் பெருமானின் பாதமலர் சேர அருள் புரிந்தாலே போதும் என்கிறார்.

வறட்டும் வெயில் நீங்கி மழை பெய்து குளிர வேண்டுமா ?

**"தேனுந்து முக்கனிகள் பால் செங் கரும்பிளநீர்**
**சீரும் பழித்த சிவ மருளூற"**

திருப்புகழ் பாடினால் கயிலை மலை முருகன் அருள் நிச்சயம் !

என்ன இருந்தாலும் ஆசையே துன்பத்துக்குக் காரணமல்லவா ? ஆசைகளை வென்று வாழ்தல் உயர்வாயிற்றே ! ஆசைகளை வெல்லும் வழியினை அருணகிரிநாதர் அநுபூதியில் அருளுகிறார் ...

**"ஒழிவாய் ஒழிவாய் ... ஐவாய் செல்லும் அவாவினையே ..."**
**"அன்பால் நின் தாட் கும்பிடுபவர் தம்**
**பாவம் தீர்க்க ..."**

முருகனையன்றி யார் இருக்கிறார்கள் ?

மரணத்தை வெல்ல முடியாதென்றாலும் யம பயத்தை வென்றிட

**"காலனெனை யணு காம லுன திரு**

**காலில் வழிபட அருள்வாயே ... "**

என்று சுவாமிமலை முருகனை நோக்கி வேண்டிடக் கூறுகிறார்.

பகைவர் பற்றிய பயம் என்றுமே மனிதர்க்கு உண்டல்லவா ?

அதற்கும் நீக்கிட வழி சொல்லும் இந்தத் திருப்புகழ்,

"ஒரு வழி படாது மாயை ..." என்று துவங்கி, "எனது பகை தீர நீ யும் அருள்வாயே" என்று சோமநாதன் மடம் முருகனைக் கண்டு அருணகிரி நாதர் அருளியது.

இல்வாழ்வை வென்று தவநிலை எய்தவும் முக்தி வேண்டியும்,

**"சிவம் பெற்று தவம் பற்றக்கழல் தாராய் ..."**

முக்திக்காக,

**இத்தரணி மீதிற் பிறவாதே**
**எத்தரோடு கூடி க்கலவாதே ...**
**முக்தியடி யேனுக் கருள் வாயே ...**
**முக்தி பெற்று இறைவனோடு இரண்டறக் கலக்க**
**"நீ வேறெனாதிருக்க, நான் வேறெனாதிருக்க,**
**நேராக வாழ்வதற்கு அருள்கூர"**

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.

பிறப்பு துவங்கி, முக்தி வரை பல பிரச்னைகளுக்கு தீர்வு திருப்புகழ் கூறி,

**"இகபர சௌபாக்ய மருள்வாயே"**
**என்று பழனிமலை வீற்றிருளும் வேலனை வேண்டி,**
**"பகரு முத்தமிழ்ப் பொருளும் ..."**

(மெய்த்தவப்பயனு மெப்படிப் பல வாழ்வும் பழைய முத்தியில் பதமு நட்புறப் பரவு கற்பகத் தரு வாழ்வும் புகரில் புத்தி யுற்றரசு பெற்றுறப் பொலியும் அற்புதப் பெரு வாழ்வும் புலனகற்றிடப் பலவிதத்தினைப்)

புகழ் பலத்தினைத் தரவேணும்"

என்று வேண்டிக் கொள்வோம்.

* * *

# அருணகிரியின் இறையணுகு முறைகள்

**-எஸ். ஆர். சுப்ரமணியன்**

"இரவினிடை துயிலுகிலும் யாரோடு பேசுகினும் இளமையும் உனழகு புனையீராறு தோள் நிரையும் இரு பதமும் அறுமுகமும் யானோத ஞானமதை அருள்வாயே" என்று தம் இஷ்ட தெய்வத்திடம் கோரிக்கை விடுக்கும் அருணகிரிப் பெருந்தகை மால்மருகனின் "மாமணங்கமழுமிரு கமலபாதத்தை" அடையும் பொருட்டு பல்வேறு அணுகுமுறைகளைக் கையாளுகிறார் என்பதை அவர் இயற்றிய திருப்புகழ் மற்றும் ஏனையப் படைப்புக்கள் மூலம் நாம் அறிகிறோம். எல்லாம் வல்ல பரம் பொருளாகிய முருகப்பெருமானை அடிகளார் சேய்நலம் கருதும் தாய் தந்தையர்களாக, உபதேசித்தருளும் குருநாதனாக, உற்ற தோழனாக, பச்சிளங்குழந்தையாக, தலைவியைப் பிரிந்த தலைவனாக, குற்றேவல் அடிமை யெனயாளும் கோமானாக. இங்ஙனம் பலவிதங்களில் பாவித்துப் போற்றுகிறார். அருணகிரிநாதர் தம் படைப்புகளில் கையாளும் வெவ்வேறு பக்தி நெறிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**தாய் தந்தைகயர்களாக:**

இப்புவியில் பிறவியெடுக்கும் ஒவ்வொரு மனிதனையும் பிறந்த நிமிடம் முதல் பேணி வளர்த்து, கல்வி புகட்டி, அவனது தேவைகளை தாமாகவே அறிந்து பூர்த்தி செய்து, அவன் புரியும் பிழைகள் யாவையும் மன்னித்து தியாக சீலர்களாக விளங்குபவர்கள் "தந்த பசி தனையறிந்து முலையமுது தந்து முதுகு தடவிய தாயாரும்", தந்தையுமே ஆவார்கள். "அன்னையும் தந்தையும் முன்னறி தெய்வம்", "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" என்ற பழமொழிகளுக்கேற்ப அருணகிரிநாதர் குமரனை தம் அன்னையாகவும் தந்தையாகவும் கருதி

**"எந்தாயும் எனக்கு அருள்தந்தையும் நீ**
**சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்"**

என்று கந்தரநுபூதியில் முறையிடுகிறார்.

விராலிமலை விசாகனைப் பார்த்து "மாதா பிதாவுமினி நீயே" என்று அடிகளார் கூறுகிறார். ("மாலாசைகோப . . .")

**" . . . தகப்பன் முன் மைந்தனோடிப்**
**பால் மொழிக் குரலோலமிட்டிடில்**
**யாரெடுப்பதெனா வெறுத்தழ**
**பார்விடுப்பார்களோ எனக்கிது சிந்தியாதோ . . ."**

("ஏது புத்தி ஐயா . . . திருத்தணி திருப்புகழ்) என்ற வரிகளும் தந்தை – குழந்தை உறவைப் பிரதிபலிக்கின்றன.

சிவபெருமானையும் அவரருள் பாலனான சுப்ரமணியக் கடவுளையும் ஒரே தெய்வமாகக் காணும் அருணைப் பெருந்தகை சிவபெருமானை "எனது தாதையர்" என்று சொந்தம் பாராட்டிக் குறிப்பிடுகிறார், "இருளுமோர் கதி . . ." என்ற சிதம்பரம் திருப்புகழில்:

"பவளமேனியர் எனது தாதையர்
பரமராசியர் அருள்பாலா!"

**குருநாதனாக :**

குருவின் அருள்நோக்கம் அவருடைய உபதேச மொழிகளும் எத்துணை மேம்பட்டதென்று எடுத்துக் காட்டும் வழியில் அமைந்த பல செய்யுள்கள் அருணகிரிநாதரின் படைப்புகளில் காணப்படுகின்றன.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்ற பிரார்த்தனையுடன் கந்தரநுபூதி முற்றுப்பெறுகிறது. இது குருவின் மகத்துவத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அவிநாசியில் வீற்றிருக்கும் முருகனை தம்மை ஆண்டருளும் குருநாதனாகக் காணும் அடிகளார்,

"இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே"

என்று பாடி வணங்குகிறார்.

தந்தைக்கு உபதேசித்த சுவாமிநாதப் பெருமானே அருணை முனிவருக்குக் குருவாய் எழுந்தருளியதை நினைவு கூர்ந்து

"ஜபமாலை தந்த சற்குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே!"

என்று தமக்குக் கிடைத்த பேற்றினை உலகோர்க்குத் தெரிவிக்கிறார்.

**தோழனாக:**

ஒரு மனிதனின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்பவன் அவனுடைய உற்ற நண்பனே ஆவான். "முடிமேலே அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார"னான முருகவேளை

"தூயா துதித்தவர்கள் நேயா வெமக்கமிர்த
தோழா கடப்பமலர் அணிவோனே!"

என்று தோழமை பாராட்டிப் பாடுகிறார் அடிகளார் "நாடா பிறப்பு" என்ற சிதம்பரம் திருப்புகழில், அறுமுகவனுடன் அவருக்கு வ ாய்த்த நட்பு அமுதம் போன்று தித்திப்பானது என்பதை "எமக்கமிர்த தோழா" என்றழைப்பதின் மூலம் உணர்த்துகிறார்.

"வாழியென நித்தமறவாது பரவிற் சரண வாரிசம் அளிக்கும் உபகாரக்காரனாக" சித்திரிக்கிறார் "செந்தமிழ்சொல்பாவின் மாலைக்கார"னான செந்திலாண்டவனை, திருவேளைக்காரன் வகுப்பில்.

'தந்தபசி' என்று தொடங்கும் திருச்செந்தூர் திருப்புகழில் வேலவன் தம் முன்னே எழுந்தருளி அவரை "நம் அன்பன்" என்று சொல்லிக் கொள்வதற்கான இடர்மிக்க ஒரு சந்தர்ப்பத்தைச் சுட்டிக்காட்டுகிறார். அந்தச் சம்பவம் எல்லா மனிதர்களுடைய வாழ்க்கையிலும் நிகழக்கூடிய ஒன்று. இதோ அருணைமுனிவர் விடுக்கும் முறையீடு :

"அந்தகனுமெனை யடர்ந்து வருகையினி
லஞ்சலென வலிய மயில்மேல் நீ

**அந்த மறலியொடு கந்த மனிதனம**

**தன்ப னென மொழிய வருவாயே!"**

"நமனார் கலகம் செயும் நாளி"லே முருகன் அவர் முன் தோன்றி, தர்மராஜனிடம் "இவன் எனக்கு வேண்டியவன், நம்முடைய அன்பன்" என்று சொல்வதற்காக வலிய மயிலில் ஏறி வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார். உயிரைப் பற்ற யமன் ஒருக்கணம் கூடத் தாமதிக்கமாட்டான் ஆதலால், அருணை முனிவர் முன்னெச்சரிக்கைய ாக "கோலமுறு செந்தில் நகர் மேவு குமரன் சரண கோகனதம் அன்பொடு வணங்கு மயிலில்" ஏறி விரைவாக வரவேண்டுமென்று கேட்பது குறீப்பிடத் தக்கதாகும்.

**"ஆசை கூறு நண்ப என்று மாமயூர கந்த என்றும்**

**ஆவல் தீர என்று நின்று புகழ்வேனோ!"**

என்று தேவனூர் விளங்கவந்த தேவசேனாபதியிடம் தமது உள்ளக்கிடக்கையை வெளியிடுகிறார்.

**குழந்தையாக :**

இறைவனை ஒரு சிறு குழந்தையாகப் பாவித்து அதன் மீதுள்ள அன்பையும் பாசத்தையும் வெளியிடும் வகையில் அமையும் பாடல்கள் 'பிள்ளைத் தமிழ்' என வகையைச்சாரும். "சிவனார் மனங்குளிர உபதேசமந்த்ரமிரு செவி மீதிலும் பகர் செய்" குருநாதனாய் விளங்கின சுவாமி மலைக் குமரனை வணங்கி நிற்கும்போது, அருணைப் பெருந்தகைக்கு ஓர் அவா எழுகிறது. தமது இல்லற வாழ்க்கையில் தம் மனைவி வயிற்றில் பத்து மாதம் நிறைவாக இருந்து, நல்ல வடிவுடன் பிறந்த குழந்தை போல குமரக் கடவுள் தோன்ற வேண்டும், மிக்க ஆசையுடன் தாம் அந்தக் குழந்தையின் உச்சியை மோந்தும், கண்களில் ஒற்றிக் கொண்டும், முகமோடு முகம் வைத்தும், கைகளில் உறவாடியும், மடிமீது அணைத்துக் கொண்டும் விளையாட வேண்டும், மேலும் நாள் தோறும் அந்த தெய்வக் குழந்தை தன் அழகிய திருவாயால் அவருக்கு முத்தம் தர வேண்டும் . . . பிள்ளைத் தமிழ் முத்தப் பருவ இயல்பில் அமைந்த அவரது பிரார்த்தனை :

**"செகமாயை யுற்றெனக வாழ்வில் வைத்த**

**திருமாது கெர்ப்ப முடலூறித்**

**தெசமாத முற்றி வடிவாய் நிலத்தில்**

**திரமாயளித்த பொருளாகி**

**மகவாவி னுச்சி விழியாநநத்தில்**

**மலைநேர் புயத்தி லுறவாடி**

**மடிமீதடுத்து விளையாடி நித்த**

**மணிவாயின் முத்தி தரவேணும் . . ."**

"அந்தகன் வருந்தினம் . . . " என்ற திருச்செந்தூர் திருப்புகழில் அன்னை உமாதேவிக்கு முத்தம் தர தளிர்நடை போட்டு வரும் பாலகுமாரசுவாமியை நம் மனக்கண் முன் தோற்றுவிக்கும் அருணகிரிநாதர் தமக்கும் அந்த மாதிரியான ஒரு பேரானந்தம் கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறார் போலும் !

**". . . அம்பொனின் திருவரைக்**

**கிண்கிணி கிணின் கிணின் கிணினெனக்**

குண்டல மசைந் திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கை கொஞ்சிட மணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந்துருக முத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே”

“திருந்தப் புனங்களீன்ற பொற்பாவை திருமுலைப்பால் அருந்திச் சரவணப் பூந்தொட்டிலேறியறுவர் கொங்கை விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்குருந்தை” மனதில் கொண்டு “சரவணப் பெருமாளே” என்று இந்தத் துதியை முடிப்பது எத்தனை பொருத்தமாகவுள்ளது !

**தலைவனாக :**

தலைவனைப் பிரிந்த தலைவி விரகதாபத்தால் அவதியுறுகிறாள். தன் நாயகனை மீண்டும் எப்போது சந்திப்போமென்ற மன உளைச்சலில் அந்த இளமங்கைக்கு நிலா, தென்றல், கூவும் குயில், கடல் ஒலி, குழலோசை, விடைகளின் மணியோசை இவையெல்லாமே வெறுப்பையூட்டுகின்றன. இவ்வகையிலே அருணகிரிநாதர் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியாகத் தம்மைப் பாவித்து இறைவனுடன் ஒன்று சேர பக்தி பரவசத்துடன் பலபாக்கள் பாடியுள்ளார். உதாரணத்திற்கு :

“கலை மடவார் தஞ் சிலையதனாலுங்
கனவளையாலுங் கரை மேலே
கருகிய காளம் பெருகிய தோயங்
கருதலையாலுஞ் சிலையாலுங்
கொலை தரு காமன் பலகணையாலுங்
கொடியிடையாள் நின் றழியாதே
குரவணி நீடும் புயமணி தீபங்
குளிர் தொடை நீ தந் தருள்வாயே . . .” (திருத்தணிகை)

“தெருவினில் நடவா மடவார்
திரண்டொறுக்கும் வசையாலே
தினகர னெனவேலையிலே
சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா
மதன் தொடுக்குங் கணையாலே
புளகித முலையா ளலையா
மனஞ்சலித்தும் விடலாமோ . . .” (சுவாமிமலை)

இங்ஙனம் தன் அன்பு நாயகனை அடைய விரும்பி அவனையே எண்ணி தூக்கமின்றி உணவின்றி உடல் மெலிந்து உள்ளம் நொந்து வாடுகின்ற நாயகியைப் போன்று அருணகிரிநாதர் முருகனுடன் ஒன்று சேர பக்திப் பெருக்கத்துடன் இசைக்கும் பாக்கள் யாவையும் அதீதமான கவித்திறனுடனும் மிகுந்த கற்பனை வளத்துடனும் மிளிர்கின்றன.

**கோமானாக :**

"அவனின்றி அணுவும் அசையாது" என்பது முதுமொழி. "எல்லாம் ஈசன் செயல்" என்று மனதில் கொண்டு ஆண்டவனிடத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அடிகளார் வயலூர் வேலவனைப் பார்த்துச் சொல்கிறார்.

**"என்னால் பிறக்கவும் என்னாலிறக்கவும்**
**என்னால் துதிக்கவும் கண்களாலே**
**என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்**
**என்னா லிருக்கவும் பெண்டிர் வீடு**
**என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்**
**என்னால் சலிக்கவும் தொந்த நோயை**
**என்னாலெரிக்கவும் என்னால் நினைக்கவும்**
**என்னால் தரிக்கவும் இங்குநானார் "**

முருகனை "எமைபணி விதிக்குஞ்சாமி" என்று கூறும் அடிகளார். சீர்பாத வகுப்பில் தமக்கு "முடிய வழி வழியடிமை யெனுமுரிமை யடிமை" என்று அடைமொழி விதித்துக் கொள்கிறார்.

**"அரியதொர் தமிழ் கொடுரிமையொட்டி தொழுதே**
**கவிமாலையாக அடிமைதொடுத்திடு**
**புன்சொல் ஒன்று நிந்தியாமற் புனைந்தன . . ."** (புயவகுப்பு)

அருணகிரிநாதர் இச்செய்யுளில் தம்மை முருகன் அடிமையென்றும், ஒப்பற்ற தமிழால் அவர் குமரன் இணையடி தொழுது அவனுக்கு அளிக்கும்"சித்ரகவித்துவ சத்தமிகுத்த திருப்புகழ்" பாக்கள் வெறும் அற்பச் சொல் என்றும் மிக்க பணிவுடன் கூறிக் கொள்கிறார். இவ்விதம் அவர் அளிக்கும் கவிமாலைகளை கருணைக்கடவுள் கந்தன் சற்றும் தயக்கமின்றிப் புனைந்து கொள்வதாகவும் அவர் கூறுகிறார். ஆண்டவன் அருள் வேண்டுமானால் எந்தக் கண்ணோக்குடன் அவரை அணுகவேண்டுமென்று அருணைப்பெருந்தகை நம் போன்ற பாமரர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

**"கொக்கா நரைகள் வருமுனமிக்காய விளமையுடன் முயல்**
**குற்றேவல் அடிமைசெயும் வகையருளாதோ"**

("கத்தூரி யகரு"—பட்டாலியூர்)

முதுமையடைவதற்கு முன்னமேயே இளமையில் முருகனின் அடிமை செய்ய வேண்டுமென்று அருணைப்பெருந்தகை நினைவூட்டுகிறார்.

அருணகிரிப் பெருந்தகை காட்டித்தந்த அன்பு வழியிலே சென்று "தம்பராக்கற தின்னையுணர்ந்துருகிப் பொற்பத்மக் கழல் சேர்வார் தங்குழாத்தினிலென்னையு மன்பொடு வைக்கச் சற்றுக் கருதாதோ" என்று அவர் முருகனிடத்தில் கேட்டபடி நாமும் இறைவனிடம் வேண்டி வணங்கி அவர் திருவருள் பெறுவோமாக !

# திருப்புகழில் முருகன் சீர்பாத மகிமை

- சித்ரா மூர்த்தி

"மிகவரு மைப்பட் டுன்பாத தாமரை
சரணமெ னப்பற் றும்பேதை யேன்மிசை
விழியருள் வைத்துக் குன்றாத வாழ்வையு மருள்வாயே"

என்ற திருப்புகழ் பாடல் அடிகளைப் பாடக் கேட்டுக் கசிந்து கண்ணீர் மல்காதவர்களே இருக்க முடியாது எனலாம். இறைவன் பேரருளால் நமக்குக் கிடைத்துள்ள திருப்புகழ்ப் பாக்களை ஆராயும்போது அவற்றிடையே நூலிழையாக ஊடுருவி நிற்கும் ஒரு அரிய பொருள் 'முருகன் சீர்பாத மகிமை' என்பதை நம்மால் உணர முடிகிறது பல பாடல்களில் முருகன் திருவடி அழகின் வர்ணனைகளைக் கண்டு களிக்கலாமென்றால், வேறு சில பாடல்களில் "பிறவியலையாற்றைக்" கடக்க உதவும் தெப்பமாகவே முருகன் திருவடிகள் நமக்குக் காட்சியளிக்கின்றன. திருப்புகழ் மாக்கடலில் மூழ்கிக் குளித்தபோது கிடைத்த ஒரு சில முத்துக்களை இங்கு காண்போம்.

முருகன் திருவடி அழகை நாமும் அகக்கண்ணால் தரிசிக்கும்படிப் பாடியுள்ள அருணகிரியார்

"கமல விமல மரக தமணி
கனக மருவு மிருபாதம்" என்றும்
"இனிய நாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கியஅடி" என்றும்
"விளவினிள இலைதளவு குவளைகமழ் பவளநிற
வெட்சித் திருத்தாள்" என்றும்

பலவாறாகப் பாடியுள்ளார்.

"புண்டரீகத்தினும் செக்கச் சிவந்த கழல் வீடு" என்று பாடும்போது முருகனின் அழகிய சிவந்த தாமரைப் பாதங்களின் திருக்காட்சி நம்மைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றது "மனைமாண் சுதரான்" எனத் துவங்கும் பாடலில்

"இடவார்ந்தன சானு நயம் பெறு
கடகாங்கர சோணவியம் பர
இடமாங்கன தாளருளும்படி யென்றுதானோ"

என்று வினவுகிறார், அருணகிரிநாதர்.

"இடங்கொண்டு நிறைந்துள்ள சானு (முழந்தாள்) நயம்பெறும் நல்லதான கடகம் அணிந்துள்ள கரம், சோணவியம் (சிவந்த உடல்) இவைகளுக்கு மேலான இடமான பெருமை பொருந்திய உனது திருவடியை நீ எனக்கு அருளும்படியான நிலைமை என்றைக்குத்தான் அமையுமோ" என்பது இப்பாடலில் உயர்ந்த கரு த்து "நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை" என்ற பரிபாடல்வரிகளும், "கண்டேன் அவர் திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்" என்று அப்பரும் இதே கருத்தை வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

“அரிய சமயமொரு கோடி, அமரர்சரணர் சதகோடி, அரியுமயனுமொரு கோடி, இவர்கூடி, அறிய அறிய அறியாத அடிகளறிய” இறைவனை இறைஞ்சும் அருணகிரியாரின் பாடலை இறைவனும் செவிமடுத்துவிட்டான் போலும் ! “சாடும் தனிவேல் முருகன் சரணம் சூடும்படி தந்தது சொல்லுமதோ” என்று கந்தரநுபூதியிலும், “அவன் கால் பட்டழிந்ததிங்கென்றலை மேலயன் கையெழுத்தே” என்று கந்தரலங்காரத்திலும் அவர் பாடியுள்ளதைக் காணலாம். முருகனைப் பல பெயர் சொல்லி அழைக்கும் அருணகிரிநாதர், ஓரிடத்தில் அவனைக் ‘கப்பலோட்டி’ என்ற பொருள்படும்படி “சுவர்க்கயோக மீகாம” என்றழைக்கிறார். பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கும் உயிர்களைத் தமது திருவடியாகிய புணையைப் பற்றியவுடன் முத்தியாகிய கரையில் சேர்க்கும் மீகாமன் முருகனே என அறிவுறுத்துகிறார்.

“தோலாற் சுவர் வைத்து” என்ற அலங்காரத்தில் இதே கருத்தை “இந்த உடலாகிய வீடு உயிரினின்றும் பிரிந்தொழிந்தால் முருகவேளின் இரண்டு திருவடிகளின்றி வேறு துணை நமக்கு இல்லை” என்று நமக்குணர்த்துகிறார்.

**“எனதாந் தனதானவை போயற**
**மலமாங்கடு மோக விகாரமு**
**மிவை நீங்கிடவே இரு தாளினை அருள்வாயே “**

**“விகற்பம் கூறிடு மோக விகாரணை**
**அறத்தின் பால் ஒழுகாத முதேவியே**
**விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ”**

இவ்வாறெல்லாம் இறைவனை வேண்டும் அருணகிரியார் மேலும் முருகன் திருவடி மகிமையை விளக்கும் விதமாக “சீர்பாத வகுப்பு” என்ற தனி வகுப்பையே இயற்றியளித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**“முருகசர வணமகளிர் அறுவர் முலைநுகருமறு**
**முக, குமர சரணமென அருள்பாடியாடிமிக**
**மொழிகுழற அழுதுதொழு துருகுமவர் விழியருவி**
**முழுகுவதும் வருகவென அறைகூவியாளுவதும்”**

முருகனின் மணநாறு சீறடியே என்ற வரிகளைச் சந்தமுடன் பாடும் எவர் விழியும் பெருகுவது நிச்சயம். முருகவேளின் திருவடிகள், ஒளி, பெருமை, அருமை ஆடல் ஆற்றல், கருணை, நறுமணம் என்பன போன்ற இருபத்திரண்டு பெருமைகளும் நிறைந்தவை என்பதை இவ்வொரு வகுப்பு மூலமாகவே விளக்கியுள்ளார். ‘பிறப்பின் மூலகாரணமான வினை தீர்ந்து உயிர் பிரியும் காலத்தில் வரும் கால தூதர்களை வெருட்டி ஓட்டுவதும், அருள் நெறியைப் பெறக்கூடிய மார்க்கத்தைக் காட்டுவதும், நினைத்த காரியங்கள் நிறைவேறும்படி உதவுவதும், அடியார்களுடைய கோடிக்கணக்கான பகைகளைக் களைவதும், அடியேனது கவிமாலையைச் சூட்டிக் கொள்வதும் முருகப்பிரானின் சீறடியே’ என்று நமக்கு விளக்குகிறது சீர்பாத வகுப்பு.

# வள்ளித்திருமணம்

- உமா பாலசுப்பிரமணியன்

"பார்வதிக்கும் இனித்த பெண்ணாகி மான்மகள், வள்ளியின் திருமணத்தை திருப்புகழினூடே சற்று கண்டு களிக்கலாம்"

"ஏடணி குழைச்சித் தூர்த்த வாடகி குறத்தி"யான "திருமால் அளித்தருளும் ஒரு ஞான பத்தினி" சுந்தரவல்லி, "பழைய மறையின் முடிவில் அகர மகர உகர படிவ வடிவும் உடையோனான முருகனை" திருமணம் செய்து கொள்ள, பல ஆண்டுகள் நோற்ற நோன்பின் பயனாய் "முனிபெறு புனமானாக" தோன்றி, நம்பிராஜனால் வளர்க்கப்பட்டு, "வள்ளி" எனப் பெயர் கொண்டு, "எழுதிட அரிய எழிலாய்" விளங்கினாள்.

மை வாள் விழி குற மாது, தூசா மணியும் துகிரும் புனைந்த எங்ஙனம் வேடர்குல வழக்கத்துக்கு இணங்க ஆடை ஆணிகலன்கள் அணிந்திருந்தாள் என்பதை அருணகிரிநாதர் அழகுபடக் கூறுகின்றார்.

**"தருணமணியவை பலபல செருகிய**
**தலையன் துகிலிடை யழகிய குறமகள்"**

**"திருத்திய புனத்திடை வனத்தழை உடுத்தினி**
**திருப்பவள்" - (வகு11)**

**"மரகத மணிப் பணியின் அணிதழை உடுத்துலவும்**
**வனசரர் கொடிச்சி" (வகு12)**

"சுந்தரஞான மென்குறமாது" "சர்க்கரை முப்பழமொத்த மொழிச்சி" யாவாள். "எழில் தளதளத்த கொங்கைகள் மணிவடம் அணிசிறு குறக் கரும்பும்" ஆவாள். "தேனென்று பாகென்று உவமிக்கொணா வள்ளி, தன்னை மறந்தாள், தன் நாமம் கேட்டாள், தளைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. யான் எனது அற்றாள். என் கடன் பணி செய்து கிடப்பதே எனக் கொண்டு, மன, மொழி, மெய்யால், செவ்வான் உருவில் திகழ், வேலவனை. தியானித்து தவப்பணி பூண்டாள்" இருப்பினும் வேட்டுவர் குல வழக்கப்படி பேதையவள் பெரும் பைம்புனத்தில் சிற்றேனல் காக்கின்ற செயலை மேற்கொண்டாள்.

தினைபுனக் காவலுக்குச் சென்ற விறன் மறவர் சிறுமி, வைராக்யம் என்ற பரண்மீது நின்று, பக்தியாகிய தினைப் பயிரின் முற்றிய கதிர்களான முருகனைத் திருமணம் செய்து கொள்ளும் பேற்றை, மும்மலங்களான பறவைகள் அழித்து நாசம் செய்யாது காக்க, "தெய்வ மண் அம்பு உணர் தீ கால் வெளி செய்த தேவரைந்தது எய்து (கந்தர் அந்தாதி) என்பதற்கு ஏற்ப". முருகனது திருநாமங்களால் கவண் கற்களைக் கொண்டு வீசி விரட்டினாள். இதனை அறிந்த "சீலமுலாவிய நாரதர்" வேலவனிடம் "வந்துற்று ஈதவள் வாழ்புனமாமென" "சகாயமொழிந்திட"

**"வீணை நாதனுரைத்த வனத்திடை**
**நாடியோடி குறத்திதனை கொடுவதற்கு முந்தி"**

"அறுமுகவடிவை யொழித்து, வேடர்கள் அடவியிலரிவை" கூட "புனத்திற் புகுந்து, நரவடிவுற்றுத் திரிந்து, மறமயிலைச் சுற்றி", "வனசர் கொம்பினைத் தேடி, யொரு வேட வடிவு

கொண்டு, பித்தாகி வுருகி, வெந்தறக்கானில் மறவர் குன்றினில்'' ''மறவர் குலமாமொரு குறமெய்த் திருமாமகள் மகிழப் புனமேவி''னான் மயில் வீரன்.

''மறுவிலாத தினைவிளைந்த புனம் விடாம லிதணிருந்து வலிய காவல் புனை யணங்கிடம்,'' ''செட்டி வடிவைக் கொடு தினைப்புனம்திற சிறு குறப் பெணமளிக்குள் மகிழ் செட்டி'' ஆனவன் ''குறவர் கொடியடிகள் கூசாது போய் வருட'', ''இலஜ்ஜையற்று எழுபாரும் வெறுத்துச் சிரிப்ப, நட்பொடு வேளையெனப்புக்கு நிற்கும் வித்தகனாகி, அதிமோக தயாபரனாகி, மையல் கொண்டு, பலபல இன்புரை ஆற்றினான் ''

சிறக்கும் அழகிய திருமகள் வஞ்சிக் குறத்தி மகளுக்கு, வேடனாக வந்தவன் வேலன் எனத் தெரியாது, அவனை வெருட்ட, அங்கு வந்த நம்பிராஜனைக் கண்ட கந்தனும் கரந்தான் வேங்கை மரமாக

**''தினைச் செங்கானக வேடுவ ரானவா**

**திகைத் தந்தோவென வே கணியாகிய'' (மதாணி 29)**

**''வேந்தினை வித்தினருற்றிட வெற்றிலை**

**வேங்கைம ரத்தெழி லைக்கொடு நிற்பவ**

**தேன் சொலியைப் புணரப் புன முற்றுறைகுவை (ம266)**

நம்பி அகன்றதும் 'பகரப் பைம் பொற்சிகரக் குன்றைப் படியிற் சிந்தத்தொடும் வேலன்', மேவிய புனத்திதனில் ஓவியமெனத் திகழு மேதகு குறத்தியிடம், திருத்தணி இங்கிருந்து 25 காதம் உள்ளது. உன் வள்ளி மலைக்குச் சமீபம். அதனால் நீ திருத்தணிக்கு என்னுடன் வந்துவிடு. இல்லையெனில் நான் மடல் ஏறுவேன் என்றான்.

**''வதனசரோருக நயன சிலீமுக வள்ளிபுனத்தில் நின்று**

**வாராய் பதிகாதங் காதரை யொன்று மூரும்**

**வயலு மொரேலிடை யெனவொரு காவிடை வல்லபமற்றழிந்து**

**மாலால் மடலேறுங் காமுக எம்பிரானே.'' (ம 664)**

**''அடவியி னூடு வேடர்க ளரிவை யொடாசை பேசியு**

**மடிதொழு தாடு மாண்மையு முடையோனே'' (ம728)**

**''வேடுகொண்டுள வேடா வேடையை வேழ வெம்புள போலே வேடர்கள்**

**மேவு திண்புனமீதே மாதொடு மிகமாலாய்**

**மேக மென்குழலாய் நீ கேளினி**

**வேறு தஞ்சமு நீயே யாமென**

**வேளை கொண்ட பிரானே வானவர்'' (ம997)**

பெருமாளாகிய வள் ளி பதம் பணியும் திருடன் இவ்வாறு கூறியதில் வியப்பில்லை. இப்படி இருப்பினும், வள்ளி நாயகி மிகவும் சினந்து, வேடனைக் கண்டித்து, அங்கிருந்து அகலச் செய்தாள். ஆண்டவனும் அணங்கின் பக்குவநிலை ஆய்வான் வேண்டி கிழவனாக வடிவம் பூண்டு,

**(''புனவேடர் தந்த பொற்குறமாது இன்புறப்**

**புணர்காதல் கொண்ட அக் கிழவோனே'' - ம 143)**

குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று குருவி ஓட்டித் திரிந்த தலைமாறுடன் சில காலம் ''தினை காவல் கொண்டு'',''தருபுன வள்ளிமலை மறவள்ளி

தருதினை மெள்ள நுகர்ந்து", "தழையுடுத்த குறத்தி பதத்துணை வருடி, வட்டமுகத்திலதக்குறி தடவி", உணவு உண்டு, தண்ணீர் குடித்தபின் "தாகம் தீர்ந்தது ஆனால் உன்பால் கொண்ட மோகம் தீர்ந்திலது அருள்வாயாக" என விளம்ப, காரிகையும் கிழவனை வெகுண்டு நோக்கி,

**"நத்துப் புரை முடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்**
**எத்துக்கு முத்தீர் இழிகுலத்தேன் தன்னை வெஃகிப்**
**பித்துக் கொண்டார்போல் பிதற்றுவீர் இவ்வேடர்**
**கொத்துக் கெலாமோர் கொடும் பழியைச் செய்தீரே" (கந்த புராணம்)**

எனப் புகன்றாள்.

"மதிவாள் நுதல் வள்ளியை அல்லது பின் துதியா விரதன் தணிகையை விடுத்துத் தான் வரும்போது. தமையனாரை நினைந்து வணங்காது வந்த தவறை உணர்ந்து, வேழ முகத்தோனை வேண்ட

**"பரம கணபதி யயலின் மதகரி**
**வடிவு கொடுவர விரவி குறமக**
**ளபய மென" அணைந்து**

**"இவ்வேழம் காத்தருளுக எந்தை நீர் சொற்றபடி**
**செய்வேன் என ஒரு பால் சேர்ந்து தழீஇக் கொண்டனளே." (கந்தபுராணம்)**

இதனையே அருணகிரிநாதர்.

**"அத்தி முகவழை குற்ற பெழைவயிற**
**னப்ப மவரை பொரி அவல் தேனும்**
**அப்பி யமுது செயு மொய்ப் பனுதவ அட**
**விக்குள் மறமகளை யணைவோனே " (ம1245)**

என சித்திரிக்கிறார்.

வள்ளியாகிய ஜீவாத்மா, பரமாத்மாவான திருமுருகனைச் சரணடையவும், அன்பர்களை ஆட்கொள்ளும் அருட்பிரகாசன் திருவுளம் மகிழ்ந்து

**"முந்நான்கு தோளும் முகங்களோர் மூவிரண்டும்**
**கொன்னார்வை வேலும் குலிசமும் ஏனைப் படையும்**
**பொன்னார் மணிமயிலுமாகப் புனக்குறவர்**
**மின்னாள் கண்காண வெளி நின்றனன்" (க. புராணம்)**

"அத்துயரதுகொடு சுப்பிரமணியரும் அப்புனமதனிடை இபமாகி அக்குறமகளுடன் அச்சிறுமுருகன் அக்கணம் மண"முடித்தான்.

"குறமின்பத சேகரன்", "ஆசை கொண்டொரு வேட மோகினி பாதபங்கயமிது வீழ் பெருமாள்", "செங்கரங் குவித்துக் கும்பிடும் பெருமாள்", எனப் பலவகையாகப் போற்றப்படும் வேலவன் வள்ளிக்கு வழி வழியடிமை என அடிமை சாசனமும், மேருமலையிலும், காதோலையிலும் எழுதி வைத்ததாக அருணகிரியார் கூறுகின்றார்.

இங்ஙனம் "குளிர் புனம் மொய்த்திட்ட சாரலிற் போய்ச்சிறு

குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு குமரன்",

"தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்". "பரவிய கான வேடுவர் தரும் அபிராம நாயகி"யின் பாதம் பணிந்து பலபல குற்றேவல்கள் செய்ததை நோக்கிடின், பக்குவம் இல்லா ஆன்மாவிடத்தும் சிறிதளவு அன்பு தோன்றிடின், அதையே கனற் பொறியாக வளரச் செய்து தான் சென்று ஆட்கொள்ளும் பெரும் கருணைத் திறன் கொண்டவன் என்பதனைக் காண்பிக்கின்றது. வள்ளி பதம் பணிந்தான் என்பதை கூர்ந்து பார்த்தால், உள்ளத்துடன் பக்தி செய்வோர்க்கு இறைவன் ஏவல் புரியும் தொண்டன். அடியார்க்கு எளியவன் என்பதைக் காட்டுகின்றது. முருகா ! உனது திருவடியைச் சிவபிரான் பேணித் தொழுது நிற்க, நீயோ வள்ளி பாதத்தைப் பேணிப் பணிகின்றாய் என அடியார் பெருமையையும், முருகன் அடியார்க்கு எளியன் என்பதையும் அழகாக அருணகிரிநாதர் எடுத்துக் காட்டுகின்றார்.

"கருணை யகலா விழிச்சி, களபம் அழியா முலைச்சி, கலவி தொலையா மறத்தி" முருகன்பால் கொண்ட நன்னெறியை 'வள்ளிசன்மார்க்கம் 'எனப் போற்றுகின்றனர். இந்நெறியே இறைவனை அடியார்பால் ஈர்க்கும் நெறியாகும். இதன் இரகசியத்தை தனக்கு உபதேசிக்கும்படி சிவபெருமான் கேட்க, "அகரப் பொருளாதி யொன்றி முதலக்கரமான தின் பொருள் அரனுக்கினிதா மொழிந்திடு குருநாத"னும் அதனை தந்தைக்கு உபதேசித்ததாக அருணகிரிநாதர் கூறுகிறார்.

**"வள்ளிச்சன் மார்க்கம் வில்ளைக்கு நோக்க**

**வல்லைக்கு ளேற்று மிளையோனே"**

அருணகிரியார், வள்ளியம்மை தனக்கு திருவருணையில் ஸ்பரிச தீக்ஷை நல்கியதை கீழ்கண்ட வரிகளில் விவரிக்கிறார்.

"கடையேனிரு வினைநோய் மல மாண்டிட நீண்டிய வொண் சுகமோகினி வளி நாயகி" – அதுமாட்டுமன்று "திங்கள் முகுந்தன சாந்து மார்பினள் யென்ற னுளம் புகும் பாங்கிமானு"க்கு 'கந்தர்அநுபூதி'யில் முருகனுடன் இணைத்து *11* பாடல்களை வழங்கியிருக்கிறார்.

வள்ளியுடன் பல திருவளையாடல்களைச் செய்த முருகப் பெருமான் செட்டியாக வந்து வளையல் இட்டதால், ஸ்பரிச தீக்ஷயும் (தீட்சை) விநாயகர் யானையாகி எதிரில் வந்ததால் பிரணவக் காட்சியும், பின் முருகவேளை அணைத்தபோது முருகவேளால் பிரணவ உபதேசமும் சந்தானமாது பெற்றதாக அருட்பெரும் செல்வன் அருணகிரி தெரிவிக்கிறார்.

"ஓது குறமான் வனத்தில் மேவியவள் கால் பிடித்துள்

ஓமெனுப தேச வித்தொ டணைவோனே" *(ம786)*

இவ்விதமாக ஆறுமுகன் வள்ளி பாதம் பணிந்து, அவளுடன் சுனையோடருவித் துறையோடும் பசுந்திணையோடும் இதணோடும் திரிந்து, வழிவழி அடிமை என அடிமை சாசனமும் எழுதிக் கொடுத்து, வேடனாயும், வேங்கை மரமாகவும், விருத்தராயும், வேடம் பூண்டு வள்ளியம்மையைத் தடுத்தாட்கொண்டு திருமணம் செய்து கொண்டது மானிட சட்டை தாங்கி வந்ததால் சரவணன் நம்மைப் போன்றே அதிமோகக் காதல் கொண்டு வள்ளியை சுற்றித் திரிந்தான் எனக் கொள்ளலாகாது. அவன்தன் அளப்பரியா அருட்பிரகாசத்தின் எளிமைதனை எடுத்துக்காட்டவே விளையாடல் புரிந்தான்.

# ஞானகுரு தமிழ்க் கடவுள் முருகன்

- இ.என் மூர்த்தி

'குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்' என்பது ஆன்றோர்கள் கூற்று. இந்த குமரன் வழிபாடு பாரதநாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் தொன்று தொட்டு மிகச் சிறப்பாக இருந்து வருகிறது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் நெருப்புப் பொறிகளினின்று தோன்றிய சக்தி வடிவினன் குமரன். தேவர்கள் தவத்தால் சூரனை சம்ஹாரம் செய்யப் பிறந்த சிவசக்தி பால சுப்ரமணியன். அவனது தமிழ்ப் பெயர் முருகன். "முருகு" என்ற சொல்லுக்கு அழகு என்பது பொருள். அழகின் வடிவம், அழகின் இலக்கணம், முருகன். முருகனே தமிழ். தமிழ் உருவாக்கித் தந்த தனிக் கடவுள் முருகன் என்று தமிழ் இலக்கியங்க ள் கூறுகின்றன.

* முருகனின் திருத்தோள்கள் பனிரெண்டு, தமிழில் உள்ள உயிரெழுத்து பனிரெண்டு.
* முருகனின் திருக்கண்கள் பதினெட்டு, (முகத்துக்கு மூன்று கண்கள் வீ தம் ஆறுமுகத்திற்கும் பதினெட்டு) தமிழ் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு
* முருகப் பெருமானின் திருமுகங்கள் ஆறு. தமிழ் இன எழுத்துக்கள் ஆறு. வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு.
* திருமுருகனின் ஆயுதம் வேல் தமிழில் தனிநிலை எழுத்து ஆய்த எழுத்து இவ்வாறு முருகனின் வடிவமைப்பை தமிழோடு இணைத்து விளக்கம் தந்தள்ளார் திரு முருக கிருபானந்த வாரியார் அவர்கள்.

மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்

'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்' – கந்தர் அலங்காரம்

முருகன் தமிழ்த் தெய்வம் என்பதால் முத்தமிழால் வைதாலும் வாழவைப்பவன் என்கிறது கந்தர் அலங்காரம்.

'சேயோன் மேய மைவரை உலகமும்' எனத் தொல்காப்பியத்தில் முருகனை மலைக்குரிய தெய்வமாகக் கூறப்படுகிறது. இச்சா சக்தி, க்ரியா சக்தியாக தேவேந்திரன் மகள் தெய்வயானையும், குறவர் குலமகள் வள்ளியும் முருகனின் நாயகிகள். முருகப் பெருமான் ஞான சக்தி.

அருணகிரி நாதர், தன் திருப்புகழில் பல விடங்களில் முருகனை மால் மருகனாகவே வழிபடுகிறார். சிவனின் திருக்குமாரன் முருகன் என்பது புராணம். சிவனே முருகனாக அவதரித்தார் என்கிறது ஸ்கந்த புராணம். சிவனும் சக்தியும் முருகனின் அடக்கமாதலால் சைவமும், சாக்தமும், கௌமாரத்தில் அடங்கிவிடுகிறது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து பிறந்த நெருப்புப் பொறிகளை, விஷ்ணுவின் பாதத்தில் உற்பத்தியாகும் கங்காதேவி, குளிர்ச்சிப் படுத்தியதால் முருகனுக்கு கங்காபுத்திரன் என்ற பெயரும் உண்டு. அதனால் விஷ்ணு சம்பந்தம் பெற்று வைஷ்ணவத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறான். அதனால் அருணகிரிநாதர் "மால் மருகனாக" முருகனை வழிபடுகிறார்.

முருகன் என்றதுமே வேலும் மயிலும்தான், நம் கண்முன் நிற்கும். 'வேல்' முருகனின் ஆயுதம். அது ஆதிபராசக்தியின் ஆற்றல்கள் அனைத்தையும் கொண்டது, அது சூரனை

சம்ஹரிக்க மட்டும் உதவவில்லை. அது ஞானத்தின் சின்னமாக முருகனின் கையை அலங்கரிக்கிறது. வேலின் மேல் பகுதி அகன்றும் கூர்மையாகவும் இருக்கிறது. கீழ்பகுதி நீண்டிருக்கிறது. வேல் அறிவைக் குறிக்கிறது. அறிவு என்பது அகலமாக, கூர்மையாக, ஆழமாக இருக்கவேண்டுமென்பதையே முருகன் கைவேல் சுட்டிக்காட்டுகிறது

முருகன் விரும்பி உறையும் விருக்ஷம் கடம்பம் அவன் அணியும் மலரும் கடம்பம். கடப்ப மாலையை இனிவர விட வேண்டும் என அருணகிரி நாதர் தன் திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார்.

அருணாகிரிநாதர் தந்த திருப்புகழ் அனைத்தும் முருகனை வழிபட உதவும் தமிழ் மலர்கள்

'தான்' என்ற அஹம் அழிந்து 'சரணாகதி' என்ற எண்ணம் உருவானால் தான் முருகனின் திருவருளைப் பெறலாம் என்கிறது குமாரசம்பவம். அதனாலேயே நான் என்ற கர்வத்தை மறந்து முடியிறக்கி, திருநீறணிந்து காவடி அல்லது பால்குடம் சுமந்து முருகனுக்குப் பிரார்த்தனை செய்யும் வழக்கம் உலகெங்கும் உள்ளது.

ஆடை ஆபரணங்களுடன் அழகாகவும் காட்சி தருகிறான். ஆண்டியாகவும் காட்சி தருகிறான். இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம். தண்ணீரில் மிதக்கும் தாமரை இலை போல் வாழ வேண்டுமென்பது.

தமிழ் வாழ, தழைக்க, வளம் பெற அருள் புரிந்த வரும் அன்பு தெய்வம்தான், முருகப் பெருமான். மனதிற்குகந்த கந்த பெருமான். அவனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்.

★ ★ ★

# திருப்புகழில் திருஞானசம்பந்தர்

- சுப்ரமணியன்

"சைவம் தழைக்கவும் வேதநெறி ஓங்கவும்" ஏழாம் நூற்றாண்டில் அவதரித்தவர் திருஞானசம்பந்தர். அழுது சைவம் காத்தவர் என்றும் சொல்வர். குழந்தை சம்பந்தன் தன் தகப்பனாரைக் காணாது அழுதபோது தோணியப்பர் அம்மையுடனும் தோன்றி "திருமுலைப்பாலுடன் சிவஞான இன்னமுதையுங் குழைத்துப் பொற்கிண்ணத்தில் ஊட்டிடுக" என அம்மையாருக்குப் பணிக்க, அம்மையாரும் அவ்வாறே அருளினர். சாதாரண பிராகிருதமான குழந்தை திருஞான சம்பந்தராக அக்கணமே மாறியது. நால் வேதசாரங்களையும், ஆறு அங்கங்களின் தத்துவங்களையும் உடனே அறிந்தார். நாற்கவிபாடும் திறனையும் அப்பொழுதே பெற்றார். அதுமுதல், தேவாரத்தில் ஞானசம்பந்தரே சொல்வது போல் "எனதுரை தனதுரையாக நீறுகந்தேரிய நிமலன்" என்று ஞான சம்பந்தரின் வாக்கு சிவனுடைய வாக்காகவும் சத்தியவாக்காகவும் மிளிர்ந்தது. அவர் சொன்னவையாவும் எப்படிப் பலித்தன என்பது அவர் வாழ்க்கையில் நடந்த பல அற்புதங்கள் காட்டுகின்றன.

அவருக்கு ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின் 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரிநாதர் திருஞானசம்பந்தரிடம் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது திருப்புகழ்ப் பாக்களிலிருந்து தெரிகிறது.

அருணகிரிநாதர், திருஞானசம்பந்தரும் முருகனும் ஒன்றே, வேறல்ல என்று திடமாக நம்பினார். திரு ஏழு கூற்றிருக்கையில் கந்தபுராண சாரம் முழுமையும் சொல்லி கடைசியில் "ஒரு நாள் உமையிரு முலைப்பாலருந்தி, முத்தமிழ் விரகன், நாற்கவிராஜன், ஐம்புலக்கிழவன், அறுமுகனிவனென எழில் தரு மழகுடன் கழுமலத்துதித்தனை" என்கிறார். இதன் கருத்து முருகனே ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பது. இதே போல பல திருப்புகழ்ப்பாக்களில் கூறியிருக்கிறார்.

இதற்கும் மேலாக, திருஞானசம்பந்தரைத் தவிர வேறு ஒரு தெய்வம் இல்லை என்று கந்தரந்தந்தாதியில் (29) திட்டவட்டமாகக் கூறுகிறார்.

**"திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவோ**
**திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவென்பூ**
**திகழு மலங்கற் பருளுமென் னாவமன் சேனையுபா**
**திகழு மலங்கற் குரைத்தோ வைதில்லை தெய்வங்களே" - (க.அ. 29)**

திருஞானசம்பந்தரைப் போல தனக்கும் கவிபாடும் திறன் வேண்டி கயிலை மலைத்திருப்புகழில்

**"புமியதனிற் ப்ரபுவான புகலியில் வித்தகர் போல**
**அமிர்தகவித் தொடை பாட அடிமைதனக்கருள்வாயே"**

என்று முருகனை வேண்டுகிறார். அவர் பிரார்த்தனை குறைவற நிறைவேறியது என்பது நிதர்சனம்.

சம்பந்தர் தேவாரம் ரிக்வேதசாரம் என்பது சைவப் பெரியோர்களின் கருத்து. அருணகிரி நாதர் கந்தரந்தாதியில் (96) "சிவபத்திருக்கு ஐயம் போக உரைத்தோன்" என்றும்,

சுவாமிமலை திருப்புகழில் "அருமறை தமிழ் நூலடைவே தெரிந்துரைக்கும் புலவோனே" என்றும் இதே கருத்தைத் தெரிவிக்கிறார்.

ஞானசம்பந்தக் குழந்தை எப்படி அழுது உலகை உய்வித்ததோ, அதேபோல, முருகனும் கிருஷ்ணனும் குழந்தைகளாக அழுததை அருணகிரிநாதர் அனுபவிக்கிறார். கந்தரலங்காரத்தில் "திருந்தப்புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பாலருந்தி சரவணப்பூந்தொட்டிலேறி அறுவர் கொங்கை விரும்பிக் கடலழக் குன்றழ சூரழ விம்மியழும் குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்று ஓதும் குவலயமே" என்கிறார். பால முருகன் கிருத்திகைப் பெண்கள் கொங்கை விரும்பியழுதது. கடல், கிரௌஞ்சமலை, சூரன் இவர்கள் காதில் பட்டு அவர்களும் பயந்து அழுதார்கள் என்று நயம்பட உரைக்கிறார். பாலகிருஷ்ணன் அழுததை "நடையுடை" என்னும் திருப்புகழில்

**"இடையர் மனைதோறு நித்த முறிதயிர் நெய்பால்**
**குடிக்க இருகையுறவே பிடித்து உரலோடே இறுகிட**
**அசோதை கட்ட அழுதிடு கோபால கிருஷ்ணன்"**

என்றும் சுவையாகக் கூறுகிறார். தெய்வக் குழந்தைகள் அழுதால் கவிகளுக்குக் கொண்டாட்டம் தானே!

திருஞானசம்பந்தர் மூன்று வயதிலிருந்தே திருத்தல யாத்திரை மேற்கொண்டார். தன தகப்பனாரின் தோளில் அமர்ந்து செல்வது வழக்கம். பெண்ணாடகம் என்ற தலத்தை தரிசித்து, திருநெல்வாயில் அரத்துறைப்போக, கால்நோக நடந்து, மாறன் பாடி என்னும் தலத்தில் தங்கினார். அரத்துறையீசன் தன்குமாரன் படும் அவஸ்தையைக் கண்டு, அவர் ஏறிச் செல்ல முத்துச் சிவிகையும், நிழல்தர முத்துக் குடையும், ஊதுதற்கு முத்துச் சின்னங்களும் கொடுத்தருளினர். சம்பந்தப் பெருமான் அரத் துறைத் திருப்புகழில் இதை அருணகிரிநாதர் "கொச்சையிற் சதுர்வேதச் சிறுவ நிற்கருட் கவிகை நித்திலச் சிவிகையைக் கொடுத்தருளீசன்' என்று கூறுகிறார்.

திருஞான சம்பந்தர் செய்த அற்புதங்கள் பல. அவற்றில் சிலவற்றை அருணகிரிநாதர் வாக்கில் பார்க்கலாம். மதுரையில் பாண்டியனுக்கு சுரம் போக்கி, அவன் கூனை நிமிர்த்தி, சமணரை அனல் வாதம், புனல் வாதங்களில் வென்று அவர்களைக்கழுவேற்றி, பாண்டியனை சைவம் தழுவும்படி செய்தது. திருஞானசம்பந்தர் வாழ்வில் நடந்த முக்கியமான சம்பவங்கள். "பூவாளூர்" திருப்புகழில் இதை அழகாகச் சித்தரிக்கிறார்.

**"பாலறாத் திருவாயாலோதிய**
**ஏடு நீர்க்கெதிர் போயே வாதுசெய்**
**பாடல் தோற்று இருநாலாமாயிர சமண்மூடர்**
**பாரின் மேற் கழுமீதே யேறிட**
**பாதுகாத்தருளாலே கூனிமிரிறையோனும்**
**ஞாலமேத்தியதோர் மாதேவியும்**
**ஆலவாய்ப்பதி வாழ்வாமாறெனு**
**ஞானபாக்கிய பாலா வேலவ. . . "**

வயலூர் திருப்புகழில்

**"புத்தர் அமணர்கள் மிகவே கெடவே**
**தெற்கு நரபதி திருநீறிடவே, புக்க அனல் வயமிக ஏடுயவே"**

என்று அனல் வாத வெற்றியைப் பகர்கிறார். வேதத்துக்கு புறம்பான மதங்களின் பிடியிலிருந்த "மாமதுராபுரியியலை ஆரணவூரெனவே நேர் செய்து" என்று குடவாசல் திருப்புகழில் கூறுகிறார்.

திருமயிலையில் திருஞானசம்பந்தர், சிவநேசர் என்னும் அடியார், அரவுகடித்து இறந்த தம்மகள் பூம்பாவையின் எலும்புகளைச் சேகரித்து வைத்திருந்த குடத்தைக் கொண்டு வரச் செய்து கபாலீசுவரர் சந்நிதியில் 'மட்டிட்ட' என்ற பதிகம் பாடவும் "கோற்றொடிச் செங்கை தோன்றிடக் குடமுடைத்து" உருப்பெற்று அங்கம் பூம்பாவை வெளித் தோன்றினள். இவ்வதிசயத்தை திருமயிலைத் திருப்புகழில் "அளகை வணிகோர் குலத்தில் வனிதையுயிர் மீளழைப்ப அருள் பரவு பாடல் சொற்ற குமரேசா" என்று ஆளுடைய பிள்ளையாரின் பொய்யா மொழிப் பதிகத்தின் பெருமையை விளக்குகிறார்.

திருவோத்தூரில் ஓர் அடியார், தாம் சிவ கைங்கர்யத்துக்காக வளர்த்த நந்தவனத்தில் எல்லாப் பனைமரங்களும் ஆண்பனைகளாக இருப்பதை யறிந்து, வருந்தி, இதை திருஞானசம்பந்தரிடம் விண்ணப்பிக்க, அவர் "பூத்தேர்த்ததாயன" என்னும் பதிகம் பாடவும், எல்லாப் பனைமரங்களும் பெண் மரங்களாயின. இதைத் திருவோத்தூர் திருப்புகழில் "பவமாய்த்து ஆணதுவாகும் பனைகாய்த்தே மணநாலும் பழமாய் பார்மிசை வீழும்படி . . . சிவமாய்த் தேனமுதூரும் திருவாக்கால்" செய்தருளியதை வியக்கிறார்.

ஈராறு தோளும் பன்னிரு நீள் கருணை விழிகளும் கொண்ட முருகன். பன்னிரு நாமங்கள் உடைய சீர்காழியில் திருஞான சம்பந்தராய் அவதரித்து, சந்தப்பாக்களால் சிவபரம்பொருளையே பாடிப்பரவி, சிவபக்தியையும் வேத நன்னெறியையும் தமிழ்நாட்டில் நிலை நிறுத்தினார். ஞானக் குழந்தை பாடிய உள்ளத்தை உருக்கும் பாக்களில் பெரு மகிழ்ச்சியடைந்த ஈசன், இதற்கு என்ன கைம்மாறு செய்வது என்று யோசித்தான் போலும். தானே அருணகிரிநாதராக அவதரித்துத் தன் மகனைப் பதினாறாயிரம் சந்தப்பாக்களினால் தேனினும் இனிய செந்தமிழில் பாடினார் என்று பெரியோர் கருதுவதில் ஆச்சர்யமில்லை!

☆ ☆ ☆

# அவிரோத ஞானச்சுடர்

**- சசிகலா ராமனாதன்**

**"தூசா மணியும் துகிலும் புனைவாள்**
**நேசா முருகா நினது அன்பு அருளால்**
**ஆசா நிகளம் துகளாயின பின்,**
**பேசா அநுபூதி பிறந்ததுவே" அநுபூதி (43)**

உலக மாந்தரை உய்விக்கும் பொருட்டுத் தம் அனுபவ ஞானத்தால் பலவாறாகவும் நமக்கு அறிவுரைகள் வழங்கிய ஆழ்வார்கள், நாயன்மார்களின் வரிசையில், செந்திலம்பதி வாழ் கந்தனின் அருட்பெரும் அன்பிற்கும், கருணைக்கும் பாத்திரமாகி அநுபூதி பெற்ற நம் பரமகுருவாம் அருணகிரிநாதரும் ஒருவராகத் திகழ்கின்றார். அநுபூதி பெற்ற நிலையை அடைந்த மகான்கள், தாம் பெற்ற இன்பம் இவ்வையகத்திலுள்ளோர் அனைவரும் பெறல் வேண்டுமென்ற பரந்த நோக்குடன் செயல்படுவர். இன்று விஞ்ஞானத்தின் துணை கொண்ட உலகம் வெகுவாக வளர்ச்சியடைந்திருந்தும், நாம் எதிர்பார்க்கும் சுகமான, நிம்மதியான. அமைதியான ஒரு வாழ்க்கையைப் பெற்றிருக்கிறோமா வெனில் பெரும்பாலும் இல்லை என்றே தோன்றுகிறது. அண்டை அயலாருடன் ஒற்றுமை இல்லை. அண்டை அயல் தேசங்களுக்குள் நேச உணர்வில்லை. இதற்கெல்லாம் மூலகாரணமாக இருப்பது எது என்பதனையும், அதற்கு ஒரு மாற்று என்ன என்பதனையும் அருணகிரிநாதர் தம் பாக்களின் மூலமாக நமக்கு உணர்த்துகின்றார்.

'இறந்தால் ஒரு பிடி ச ாம்பருங்காணாது மாய உடம்பிதுவே' என்பதனை உணராது 'ஊனம் இதே சதமாமென' பாழ்வினையால் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து உழலுகின்ற இந்த மானிட இனம், தனவாஞ்சை மிகுந்து, 'பேராசையெனும் பிணியில் பிணிபட்டு', பலவழிகளிலும் பொருள் திரட்டி அதனால் உண்டாகின்ற ஆணவ மயக்கத்தில் வடிவேல் இறைதாள் நினையாது, ஆழ்துயரில் விழுந்து மாளுகின்ற நிலைகண்டு வருந்தி, மனமிரங்கி, நம்மை உய்விக்கும் பொருட்டு நம் குறைகளெல்லாம் தம் குறைகளாகக் கொண்டு காள கண்டன் உமாபதி தருபாலனாம் கந்தப் பெருமானிடம் வேண்டுகிறார்.

**"கடலுல கினில்வரு முயிர்படு மவதிகள்**
**கலகமி னையதுள கழியவும் நிலைபெற**
**கதியுமு னதுதிரு வடிநிழல் தருவது மொருநாளே" ம (525)**

இவ்வுலகில் கலகங்கள் ஒழிந்து அமைதி உண்டாக வேண்டுமெனில் முதலாவதாக நம்மிடையே விரோதமனப்பான்மை அகல வேண்டும். அதற்கு ஒரு மனப்பக்குவம் வேண்டும். நெஞ்சக்க னகல் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருக வேண்டும். அப்படிப் பதப்பட்ட நெஞ்சினில் அன்பு எனும் ஊற்றுப் பெருக்கெடுக்க வேண்டும். அந்த அன்பு சுயநலமில்லாத அன்பாக அனைவரையும் பாரபட்சமின்றித் தழுவ வேண்டும். அப்போது 'அவிரோதம்' என்பதானது நம் இயல்பாக ஆகிவிடும். இந்தவிதமாக நம் மனத்தை எப்படிப் பக்குவப்படுத்துவது?

**"அராப்புனை வேணியன் சேயருள் கொண்டு மவிழ்ந்த அன்பாற்**
**குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும் . . . " (க.அலங்74)**

அன்பே வடிவான எம்பெருமானின் கருணை கூர்ப்பனவாகிய கால்களில் வீழ்ந்து தொழுதால், அடியவர் இச்சையில் எவையெவை உற்றன அவையவை தருவித்தருளும் திருமால் மருகனாம் செந்தில் குமரன் அருள் வேண்டினால், எதுதான் எளிதாகாது? அருணகிரிநாதர் காட்டும் இவ்வருள் நெறியில் நடப்போமாயின் இது மிகமிக எளிதாகுமன்றோ? மனப்பக்குவத்திற்கு முதற்படியாக 'கனலென மொழி தரு சினத்தை விட்டுவிட வேண்டுமாம்'

**''கோபமற்று மற்று மந்த மோக மற்று னைப்பணிந்து**

**கூடு தற்கு முத்தி யென்று தருவாயே'' - ம (828)**

**''முறைமை யாகநி னடிகள் மேவவே**

**முனிவு தீரவந் தருள்வாயே'' - ம (443)**

வெகுட்சிதனைத் துறந்தால் களிப்பினுடன் இவ்வுலகில் நடக்கலாம் என்று நமக்கு உணர்த்துகின்றார். மேலும் கந்தரங்காரத்தில் 'தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை, தானமென்றும் இடுங்கோள், இருந்தபடி இருங்கோள்', அவ்விதமாக இருக்கும்போது வேலவனது அருளானது தானே வந்து உமக்கு வெளிப்படும் என்றும் கூறுகிறார். 'சினத்தை நிந்தனை செய்யும் முனிவரர் தொழ மகிழ்வோ'னாம் ஆறுமுகப் பெருமானிடம் 'அன்பு மிக வூறி', அவனருளால் அவன்தாள் பெற 'ஞான சதாசிவ அன்பு தாராய்' என்று மனப்பக்குவத்திற்கு இன்றியமையாத அன்பை வேண்டுகிறார். அன்பு என்றால் சாதாரண அன்பு அல்ல. ஞான சதாசிவ அன்பு. சிவம் என்றாலே அன்பு என்று பொருள். சதாசிவம் என்றால் எல்லையற்ற, நிரந்தரமான அன்பு. அதற்கும் மேலான ஞானமும் சேர்ந்த சதாசிவ அன்பை வேண்டுகிறார். அந்த அன்பானது என்னவெல்லாம் செய்ய வல்லது என்றால், மாய வினை காரணத்தால் பிறவிக் கடலில் மூழ்கும் நம்மை மீட்டு, நம் சஞ்சலங்களைக் குலைத்து, நம் மனத்தைச் செந்திலாண்டவனாம் அறுமுகவனின் 'உபய சதுர்மறையின் முதல் நடு முடிவின் மணநாறு சீறடி' யில் சேர்க்கும் திறன் கொண்டது.

**'உயர் கருணை புரியும் இன்பக் கடல் மூழ்கி**

**உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே' - ம (31)**

அன்பைத் தரவேண்டி அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் தான் எத்தனை எத்தனை விதமாக விண்ணப்பம் செய்கிறார்? அந்த அன்பினால் விளையும் பயன்தான் எத்தகைய சிறப்புடையது? பாழ்நரகெய்தாமல் முருகவேளின் பூவடிகளில் சேர்க்கும்; நெக்கு என்பெலாம் உருக வைக்கும்; ஓதுகின்ற திருப்புகழ் நித்தம்பாடும் நெறியில் புகுத்தும். அன்புடன் யாவரும் ஓதும்படியான திருப்புகழ் அமுதத்தை அருளிய அருணகிரிநாதரின் வரியில் நின்று நாமும் உருகி உருகிப் பாடி வேண்டினால்,

**''வந்தே பணிந்து நின்றார் பவங்கள்**

**வம்பே தொலைந்த வடிவேலன்'' - (ம 585)**

அவன் தனது அருள் கிட்டாமலிருக்கவும் இயலுமோ? அவனருளால் தூய அன்பு நிறைந்த நெஞ்சத்துடன் பக்தியோடு நிதம் பூஜிக்க வேண்டியும், அவர்தம் தொண்டர் குழாத்துடன் சேர்க்க வேண்டியும் அருணகிரிநாதர் பாடுவதைப் பாருங்கள்.

**''உன்புக ழேபாடி நானினி**

**அன்புடன் னாசார பூசை செய்**

**துய்ந்திட வீணாள் டாதருள் புரிவாயே'' - ம (53)**

"தம்ப ராக்கற நின்னை யுணர்ந்துரு
கிப்பொற் பத்மக் கழல்சேர்வார்
தங்குழாத்தினி லென்னையு மன்பொடு
வைக்கச் சற்றுக் கருதாதோ" - ம (350)

இப்பூவுலகில் அமைதி நிலவ வேண்டுமெனில், அதற்கு இன்றியமையாத 'அவிரோதம்' வளர வேண்டுமல்லவா? உலக அமைதிக்கு ஊறு விளைவிப்பதான சமயகலகங்களையும் சமய வாதங்களையும் தவிர்க்கும்படியாக அன்பர்களுக்கு உபதேசிக்கின்றார். கலக விபரித வெகுபர சமயிகளும். பரசமய பேதவாதிகளும் மெய்ப்பொருளை என்றும் உணரமாட்டார்கள். சமய கலகங்களிலும், வாத விவாதங்களிலும் நாட்டமுள்ளவர் பரம கருணா மூர்த்தியாகிய சண்முகனின் அருளை எங்கே நாடுவர்? அவிரோதியாய் இருப்பவரே ஆணவ மலம் நீங்கப் பெற்று, தான், தனது என்னும் முனைப்பு அடங்கி எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு, எல்லாம் தானாகவும், எனது, யானும் வேறாகவும் ஆகி நிற்கும் இதய பாவனாதீதம் பெறுவர்.

"யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே" - அநுபூதி (28)

இதே கருத்தினைத் தாயுமானவரும் எடுத்துரைப்பார்:

"யானெனல் காணேன் பூரண நிறைவில் யாதினும் இருந்த பேரொளி நீ
தானென நிற்குஞ்சமத்துற என்னைத் தன்னவனாக்கவுந் தகுங்காண்"

இந்நிலையடைந்தவருக்கு மரணபயமும் அற்றுப் போய்விடும் என்பதனைக் கந்தரலங்காரத்தில் அழகுற எடுத்துரைக்கின்றார்.

"தண்டாயுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டிவிழவிடு வேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச்சுடர் வடிவாள்
கண்டாயடா வந்தகா! வந்து பார் சற்றென் கைக்கெட்டவே" (25)

மேலும் ஓரிடத்தில் கந்தரங்காரத்தில் கூறுகிறார் :

"யான் தான் எனும் சொல்லிரண்டும் கெட்டாலன்றி
யாருக்கும் தோன்றாது சத்தியம்"

அம்மெய்ப்பொருளை உணர்ந்தவருக்குப் பகை எதுவும் இல்லை. 'அவிரோதம் வர, இருவினையற, உணர்வொடு தூங்குவார்க்கே விளங்கும் அநுபூதி' என்று உணர்த்துகிறார். அநுபூதி யடைந்தவருக்கு பேத உணர்வுகள் இருப்பதில்லை. அவரே இவ்வுலகில் வாழ் மக்களின் துயர் துடைக்கும் ஆவலுடையவராயிருப்பர்.

நம் சத்குருவாம் அருணகிரிநாதரும் தமது திருப்புகழ், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, அநுபூதி இவற்றின் வாயிலாக இவ்வுலகில் வாழ் மக்கள், மாக்கள் யாவரும் உய்யும் பொருட்டு கலியுக வரதனாம் கந்தக் கடவுளிடம் கசிந்துருகி வேண்டுகிறார். நாமும் அவர் காட்டியுள்ள நெறியில் நடந்து நம் கல் மனம் கரைந்து உருகவும், அதில் இறையன்பு புகுந்திடவும், சூரிற் கிரியிற் கதிர் வேலெறிந்தவன் தொண்டர் குழாம் சார்ந்த அவிரோதியான பக்தனாகி, அநுபூதி நிலையடைய அழைக்கின்றார் அருணகிரிநாதர்.

# திவ்ய தரிசனங்கள்

**- சாந்தா ராஜன் & சுந்தரராஜன்**

ஆண்டவனிடம் அரும்பெரும் பக்தி பூண்ட அடியார்கள் பலரும் அவன ருளால் அவனைக் கண்டிருக்கின்றனர். இதற்கு நம் புராணங்களில் பி ராமணங்களும் சரித்திரத்தில் சான்றுகளும் பல உள்ளன.

தேனமுதூறும் திருப்புகழ் பாக்களால் முருகப் பெருமானுக்கு பல்லாயிரம் பாமாலைகள் சாற்றிய, வாக்குக்கோர் அருணகிரியும் தன் ஊனக் கண்களாலும், ஞானக் கண்களாலும் திருமுருகனின் திவ்ய தரிசனத்தை திரும்பத்திரும்ப கண்டிருக்கிறார். மற்ற சமயங்களில் இல்லாத சிறப்பு நம் சமயத்தில் ஒன்று உண்டென்றால், அது நம்முடைய உபாசனா முறையாகும். மனிதர்கள் பலரும் பலவகைப்பட்டவர். அவரவர் குண நலன்களுக்கேற்ப ஆண்டவனை அடைய முயற்சிப்பர். சமய நூல்களைக் கற்றறியா பாமரரும், இளகிய உள்ளம் கொண்டவர் மற்றும் பலரும் பெரும் பக்தி பூண்டு பரம்பொருளுக்கு நம்மைப் போன்று ஒரு வடிவம் கொடுத்தனர். அதிலும் ஸத்வ குணங்களை மட்டுமே உருவகம் செய்தனர். அவனையே கண்ணாரக் கண்டு, அவனில் தானும் ஒன்றிப் போய் அவன் அடிகளை அடைந்தனர். இதனை ஸகுண உபாசனை முறையாகக் கருதப்படுகிறது. மற்றொரு பாலார், பல யோக முறைகளைக் கற்றறிந்து, தெளிந்து, தவ, தியான முறைகளால் அப்பரம் பொருளை நிர்குணனாக, நிராகாரனாக, நித்யனாக காண்பர். சுருங்கச் சொன்னால் அப்பேரொளியில், தன்னையும் மறந்து தன் செயலையும் மறந்து 'சொல்ல ஒண்ணாது இந்த ஆனந்தமே' என்ற சச்சிதானந்த நிலையை அடைவர்.

குருநாதரின் வாக்கிலிருந்து இந்த இரண்டு உபாஸனா முறைகளில் விபரங்களும் மாறி மாறி வருவது போற்றற்குரியதாகும். 'திருவடியும், தண்டையும், சிலம்பும், சிலம்பூடுருவப் பொருவடிவேலும், கடம்பும், தடம் புயம் ஆறிரண்டும், மருவடிவான வதனங்கள் ஆறும், மலர்க்கண்களும் குரு வடிவாய் வந்து என்னுயிர்க் குதி கொண்டவே' என்று நமக்காகப் பாடினால், 'அறிவும் அறியாமையும் கடந்த அறிவுத் திருமேனி' என்று அறிவு ஒருபுறமாகவும், 'ஞானாஸூர பாஸ்கரன்' என ஞான வடிவமாகவும், 'நாதரூபமா நாதராகத் துறைவோனே' என நாத உருவாகவும் பாடி, நிர்குண உபாஸனையின் எல்லையைக் கடந்து நிற்கின்றார். எனினும் 'கண்டதே காட்சி' 'கொண்டதே கோலம்' என மக்கள் திரியும் இந்த நவீன யுகத்தில் ஒரு தலைப்பட்ட தவ, தியான முறைகள் மிகவும் கடினமான முறையாகும். குருநாதர் இதனை எளிதான முறையாக்கித் தருகிறார். தன்னுடைய பாடல்களில் முருகனின் பேரழகினை பற்பல விதமாக கவின்மிகு பாக்களாகவும், அலங்காரமாகவும், வகுப்புகளாகவும் அமைத்துக் கொடுத்திருக்கிறார். அருவமில்லாத பரம்பொருளைப் பற்றி நினைப்பதைவிட, அழகே உருக்கொண்ட தோற்றம் அதன் பால் நம்மை ஈர்க்கின்றது. உருவமில்லாத இறைவன் நம் பொருட்டு உருவம் தாங்கி வருகிறான். அத்தோற்றத்தில் அலைபாயும் மனதை லயிக்கச் செய்தால். சில மணித் துளிகளாவது மற்ற காழ்ப்புச் சிந்தனைகள் அணுகுவதில்லை. இவ்வாறு படிப்படியாக ஆண்டவனின் அடியிணைகளில் அலைபாயும் மனத்தை அடிமை கொள்ளச் செய்யலாம்.

காலமெல்லாம் பாலனான கந்தனின் கவின்மிகு கமலக் கழல்கள் குருநாதரை அநவரதமும் ஆட்கொண்டு இருக்கின்றன

'. . . இனிய நாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய அடிகள்'

'சஞ்சரீகரி கரமுரல் தமனிய கிண்கிணிமுக
விதபத யுகமல் தந்த பேரருள் . . .'

'தந்தன தனந்தன தனவென
செஞ்சிறு சதங்கை கொஞ்சிட
மணி தண்டைகள் கலின் கலினென'

இவை அணிந்த 'செம்பதம் பணிந்திரன்று மொழிவாயே' என்கிறார். அப்பேற்பட்ட திருவடிகள் 'தாவடியோட்டும் மயிலும்' பின் 'தேவர் தலையிலும்' மூன்றாவதாக அவருடைய பாக்கள் அடங்கிய ஏட்டிலும் பட்டன. இதையும் அவரே உரைக்கிறார். இப்படி அனுபூதி கிடைத்த பின்னர் அவர் உள்ளத்தில் முருகனின் உருவம் நீக்கமற நிறைந்திருக்கும் என்பது நிச்சயம்தானே. அந்த உள்ளக் கோவிலில் கந்தன் கொடுக்கும் தரிசனங்கள் தான் எத்தனை, எத்தனை !

'அறையிற் கட்டும் சீராவும் கையிற்
சிறுவாளும் என் சிந்தையவே'

'செங்கேழடுத்த சினவடிவேலும் திருமுகமும்
பங்கே நிறைத்த நற் பன்னிரு தோளும்
பதுமமலர்க் கொங்கே தரயும் சொரியும்
செங்கோடைக் குமரனை எங்கே நினைப்பினும்
அங்கே என்முன் வந்தெதிர் நிற்பனே'

'கருணை பொழி கமலமுகமாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபுர சரண்
கலகலென மயில் மிசை யேறி . . .'

'கமல முகங்களும் கோமளத் திலங்கு நகையும்
நெடுங்கணும் காதினிற் பூலங்கு கனகக்
குதம்பையும், வஞ்ர அங்கதமும் மடற்,
சுடர்வேலும் கடிதுலகெங்கணும் தாடியிட்டு
வந்த மயிலு மிலங்கலங்கார பொற் சதங்கை
கழலொலி தண்டையுங் காலு மொக்க வந்து . . .'

இன்னுமொரு திருப்புகழில் (விழையுமணி) அழகு என்பதற்கு அருமையான விளக்கம் தருகிறார்.

'எழுதறிய அறுமுகமும், பணிநுதலும் வயிரமிடை
மிட்டுச் சமைந்த செஞ்சுட்டிக் கலன்களும்
துங்க நீள் பன்னிரு கருணைவிழி மலரு மிலகு
பதினிரு குழையும், ரத்னக் குதம்பையும்,
பத்மக் கரங்களும், செம்பொனூலும், மொழி
புகழும், உடை மணியும், அரைவடமும்,

**அடியிணையும், முத்தச் சதங்கையும், சித்ரச்**
**சிகண்டியும் செங்கை வேலும் (உடைய)'**
**முழுதும் அழகிய குமர . . .'**

என்கிறார். சத்திய சிவ சுந்தரமான பேரின்பத்தின் வடிவே முருகன் என்பதும் உண்மை அன்றோ.

அண்டங்களெல்லாம் உய்யும் பொருட்டு ஓயாது ஊர்த்வ தாண்டவமாகும் சிவ பெருமானின் செல்வக் குழந்தையான திருமுருகனின் நடனக் கோலங்களை, தான் எப்படி கண்டாரோ அவ்வாறே சில பாக்களில் சித்தரிக்கிறார். அவற்றுள் சிகரமாக 'தண்டையணி வெண்டையாக' என்ற செந்தில் திருப்புகழ் விளங்குகிறது.

'தண்டையணி வெண்டையும், கிண்கிணியும், சதங்கையும், வீரக்ழல்களும், சிலம்பும் இனிது ஒலிக்க, தன் தந்தைமுன் அன்பாக இனிய நடனம் புரிந்தவரே, முன்பு மூவுலகங்களையும் ஈரடியால் அளக்கும் பொருட்டு தான் எடுத்த த்ரிவிக்ரம வடிவம் இதற்கு இணையாகாது என திருமால் தன் மருமகனை பெருமையுடன் எண்ணி மகிழ்ச்சி கொள்ள, கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும் என்னை சந்தித்தபடி யிருக்க, நடனம் புரிந்த முருகோனே, என் முன்னும் நடனம் செய்தருள வேண்டும்'

என இறைஞ்ச, கந்தனும் அவர் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கிறார். குருநாதர் அவன் அடிகளைக் காண்கிறார். அவைகளில் புவனத்தையே காண்கிறார். அவர் முன் வரிந்த காட்சியில் சூரபத்மனை ஆட்கொள்ள வேண்டி அளித்த 'விஸ்வரூப தரிசனம்' வருகிறது. 'எங்கிலும் வௌர்ந்து' அளித்த அந்த தரிசன கோலத்தை நினைத்து மகிழ்கிறார்.

மற்றொரு நடனக் காட்சியை 'அதல சேடனாராட' என்ற பாடலில் கண்டு களிக்கலாம். சந்தத்துடன் மனமுருகிப் பாடல் முழுவதையும் பாடி 'மயிலுமாடி நீயுமாடி வரவேணும்' எனும்போது நம் முன்னால் ஆண்டவன் முருகன் மட்டுமா வருகிறான்? மாமனும், இலக்குமியும், பிரமுனுடன் வாணியும், எந்தை ஈசனும், தாய் உமையும், அவர்களுடன் பூத கணங்களும், மலைகளும் ஏன் இந்த வையகமே அல்லவா ஆடிவருகிறது.

இன்னொரு நடனக் காட்சியை 'அங்கார முடிகிரஹ' பாடல் மூலம் வருகிறது.

**' . . . சிலம்போடு மணிச் சுருதி**
**சங்கோசை மிகுந்ததிர சிவந்தேறி**
**மணந்த மலர்புனை பாதம்**
**திமிந்தோதி திமிதிமித தனந்தாள**
**தனத்தனன தினந்தோறுமூ நடிப்பதுமற்**
**புகல்வோரே . . . முருகா'**

அருணகிரி நாதரின் 'கொலுவகுப்பில்' மிக அழகான, பிரம்மாண்டமான மெய்ச்சிலிர்க்கும் படியான ஓர் அற்புத காட்சியைக் காணலாம். 48 வரிகள் கொண்ட இவ்வகுப்பில், ஆண்டவன் முருகனை நடுநாயகமாக இருக்கச் செய்து அவனைச் சுற்றி மற்ற பேர்கள் யார் யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என ஒரு நேர்முக வர்ணனை ஒன்றைத் தந்து நம் மனக்கண்ணால் முருகனின் திவ்ய ரூப தரிசனத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தை தருகிறார். 'அயன், அரி, அரன், இந்திரன், மன்மதன், தேவர்கள், சூரிய சந்திரர், அக்னி, வருணன், நிருதன், குபேரன், இருடிகள், கின்னரர், பூதகணங்கள், பன்னிரு

ஆதித்தர்கள் மற்றும் பிறரும் கூடியிருக்க, நாரத–தும்புரு கீதம் பாட, பன்னிரு விழிகள் கருணை மழை பொழிய, பன்னிரு கரங்களில் வேல் முதலிய படைகள் விளங்க, மார்பினில் முப்புரி நூல் துலங்க, இடையில் உடைவாளும் இருக்க, தேவிமார் இருபக்கங்களிலும் இருந்து அருள் செய்ய, சுற்றிலும் நீறணிந்த திருப்புகழ் அன்பர்கள் தெளிந்த தமிழில் போற்றி, புகழ்ந்து பாட சிவபரகிரியில் முருகன் அமர்ந்திருந்த கோலம்' பாடப்பாட உவகை ஊட்டக்கூடியது.

குருநாதர் ஆண்டவனுக்கு நம்மைப் போன்ற சாதாரண அடியார்களுக்கும் இணைப்புச் சங்கிலியாகத் திகழ்கிறார். ஆண்டவனிடம் இறைஞ்சும்போது, நம்மிடை உள்ள குறைகளையும், ஆசாபாசங்களையும் தன்னிடம் இருப்பதாகக் கூறி 'கடையேனும் வரம் பெறும் நாள் உளதோ' என மாய்ந்து போகிறார். நம்மிடம் பேசும்போது, நமக்கு ஆண்டவனின் ரூப லாவண்யங்களையெல்லாம் பலவிதமாக எடுத்துக் காட்டி, எல்லாம் கடந்தபின், முதிர்ந்த முடிவில், மூலப்பொருள். ஞானமாகத்திகழும் பரப்பிரம்மமே; அதை அடைய முயற்சி செய் என சொல்லித் தருகிறார். எடுத்த எடுப்பில் அந்த ஞானம் நமக்கு எட்டாக் கனியாக இருப்பதால், ஆன, பய பக்தி வழிபாட்டுடன், பூஜை, விரதம், நமனம், ச்ரவணம், பக்தியுடன் கூடிய தவம், தியானம் என்று படிப்படியாக நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்கிறார். அதற்குக் கூட ஆண்டவனின் உதவியையே நாடுகின்றார்.

**'அன்பினாலே ஏனோரும் ஓதுமாறு தீதற**
**நானாசு பாடி ஆடி நாள்தோறும் ஈடேறுமாறு**
**ஞான போதகம் அன்புறாதோ. . . முருகா'**

அவர் காட்டிய வழியில் பக்தி செய்த திருவடியை தியானித்து நாமும் கடைத்தேற வழி காண்போமாக.

❖ ❖ ❖

# அருணகிரியாரும் சைவசமய குரவர்களும்

**- திருமதி நாகலட்சுமி கோபாலன்**

தேவார காலம் கி.பி. 7–8 ஆம் நூற்றாண்டு என்றால் அது தமிழ்இசை வளத்திற்கு மறுமலர்ச்சி காலமாக இருந்தது. ஞானசம்பந்தர் முதலான சைவ சமய குரவர்கள் தமிழிசையின் மூலம் சமயத் தொண்டாற்றுவதற்காக, ஏராளமான பதிகங்களையும், தேவாரப் பாடல்களையும் இயற்றி அவற்றைப் பரப்புவதற்காக நாடெங்கும் சஞ்சரித்தனர்.

திருப்புகழிலே நால்வரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அவர்கள் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் காணமுடிகிறது. தவிர அவர்களுடைய பாடல்களின் கருத்துக்களைத் திருப்புகழில் காணமுடிகிறது.

உள்ளம், மெய், மொழி மூன்றிலும் சிவனுக்கே தொண்டு செய்யக்கருதி, நாவினில் அமுதக்கடலாய் எழுதுகின்ற தேவாரப்பதிகமும், கையில் உழவாரப்படையும் உடையவராய் விளங்கினார். அப்பர் என்ற பெயர் ஞானசம்பந்தரால் அளிக்கப்பட்டது.

(கதிர்காம) திருப்புகழில் அருணகிரிப் பெருமான்

**“எதிரிலாத பக்தி தனைமேவி**
**இனியதாள் நினைப்பை இருபோதும்**
**இதயவாரிதிக்குள் உறவாகி**
**எனதுளே சிறக்க அருள்வாயே ”**

என்று பாடியுள்ளார். இனியதாள் நினைப்பை என்பதற்கு இறைவனுடைய இணையடிமலர் கரும்பினும், கற்கண்டினும் கனியினும் இனிமையானது என்று பொருள்.

நாவுக்கரசரும் இதையே

**“கனியினும் கட்டிப்பட்ட கரும்பினும்**
**பனிமலர்க்குழற் பாவை நல்லாரினுந்**
**தனிமுடி கவித்தாளும் அரசினும்**
**இனியன் தண்டையந் தார்இடை மருதனே”**

“இனியதாள் நினைப்பை இருபோதும்” என்பதில் இரவும் பகலும் இனியதாளை மறவாதிருக்க வேண்டும் என்ற கருத்தின்படி அப்பரும் இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும் என்று ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

நம்பி ஆரூரர் என்று அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானுடைய உற்ற தோழராவார். இறைவனை ‘பித்தா பிறைசூடி’ என்ற பாடலைத் துதித்த சுந்தரர் பரவை நாச்சியாரை மணந்து கொண்ட பிறகு, சில காலம் கழித்து ச்ங்கலியாரைத் திருமணம் செய்து கொண்டதால், ஊடலுற்ற பரவை நாச்சியாரிடம் இறைவனையே தூதாக அனுப்பியவர். இதைத் திருப்புகழில் “பரவை மனை மீதிலன்று ஒருபொழுது

தூது சென்ற பரமனருளால் வளர்ந்த குமரேசா” என்ற பாடலில் காண்கிறோம். சுந்தரர் அவிநாசியில் மகனை இழந்து வருந்தும் தாய் தந்தையரைக் கண்டு உள்ளம் இரங்கி நீர்வற்றிய ஏரியிடம் சென்று

**"உரைப்பாளுரை யுகள் துங்க வல்லார் தங்களுச்சியாய்**
**அரைக்காடரவா ஆதியும் அந்தமுமாயினாய்**
**புரைக்காடு சோலை புக்கொளியூரவினாசியே**
**கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே"**

என்று பாடியதும் வருணன் நீரையும், பிரமன் முதலையையும், முதலை வயிற்றில் பிள்ளை உடம்பையும், யமன் பாலன் உடம்பில் உயிரையும் விட்டனர். முதலை வாயினின்று பாலகன் வெளிப்பட்டான். இந்நிகழ்ச்சியை அருணகிரியார் 'ஐங்கரனை ஒத்தமனம்" என்று ஆரம்பிக்கும் திருப்புகழில் 'கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையிலப் பரருள் கொண்டு உடலுற்ற பொருள் அருள்வாயே' என்று குறிப்பிடுகிறார். அருணகிரியார் "வஞ்சக லோபமூடர் தம் பொருள் ஊர்கள் தேடி, மஞ்சரி, கோவை, தூது, பலபாவின், வண்புகழ் பாரி காரி யென்றிசை வாது கூறி வந்தியர் போல வீணில் அழியாதே" என்ற திருப்புகழில், செல்வந்தர்களாயினும் வஞ்சகமும், லோபத்தன்மையும் அறிவின்மையும் உடையவர்களிடம் சென்று அருமையான தமிழால் மஞ்சரி, தூது, பரணி மாலை முதலிய பிரபந்தங்களை அப்படிப்பட்ட லோபிகள் மீது பாடுவதை கண்டிக்கிறார். இதையே சுந்தரரும்

**"தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்**
**சார்வினுந் தொண்டர் தருகிலா**
**பொய்ம்மையான ரைப் பாடாதே - எந்தை**
**புகலூர் பாடுமின், புலவீர்காள்**
**இம்மையே தரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடர் கெடலுமாம்**
**அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவில்லையே"**

**மிடுக்கிலாதானை வீமனே விறல்**

விசயமே வில்லுக்கிவனென்று கொடுக்கிலாதானை பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை என்ற பாடல் மூலம் அறிவுத்துகிறார்.

"திருவாசகத்துக்குருகார் ஒருவாசகத்துக்கு முருகார்" என்ற வழக்குண்டு. அத்தகைய திருவாசகத்தை உலகிற்குத் தந்த அருள்மணி மாணிக்கவாசகர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறளுக்கிணங்க திருப்பெருந்துறை ஆவுடையார் கோவிலில் மணிவாசகருக்கு தேர்த்திருவிழா முதல் ஈசனுக்கு செய்யப்படும் அனைத்து மரியாதைகளும் செய்யப்படுகின்றன.

தில்லை பொன்னம்பலத்தில் ஆடும் பொருளே திருவாசகப் பொருள் என்று அந்தணர்களுக்கு சுட்டிக்காட்டி தானும் ஆடும்பெருமானோடு ஐக்யமானால் மணிவாசகப் பெருந்தகை அதுபோலவே சிதம்பரேசனையே முருகனாகக் கண்டவர் அல்லது முருகனையே சிவபெருமானாகக் கண்டவர் அருணகிரியார் என்பது தில்லை திருப்புகழ் மூலம் விளங்குகிறது. "கனகசபை மேவும் எனது குருநாதா கருணை முருகேச பெருமான்காண்" என்றும் "சிவ ஹர ஹர தேவா நமோநம, தெரிசன பரகதியானாய் நமோநம, திரிபுரம் எரி செய்த கோவே நமோநம. ஜெய ஜெய ஹர ஹர தேவா சுராதிபர் தம்பிரானே" என்று அழுத்தமாக கூறுவதன் மூலம் சிவனே முருகன் என்று உறுதிப்படுத்துகிறார்.

மணிவாசகர் போற்றிய குருநெறியை அருணகிரியார் "திருவடியும் தண்டையும்" என்ற கந்தர் கலங்காரத்தில் குறிப்பிடுகிறார். இறைவனை அடையக்கூடிய பாவங்களில் ஒன்றான நாயகி பாவத்தில் மணிவாசகர் "சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள் கூடுவேன்" என்று கூறுவதையே அருணகிரிநாதரும் "மார்கொண்ட பேதைக்குன் மண நாளும் மார்தங்கு தாரைத் தந்தருள்வாயே" என்று நாயகி பாவத்தை வெளிப்படுத்துகிறார்.

